# பள்ளிக் கல்வித் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு, 2018-2019
## I. கொள்கை

''இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்பாடும் இன்றிப் பெற்று, மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலை முறையினராக உருவாக்குவதே நமது கடமை.''

**-மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**

1. தமிழக அரசு அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது என்பதற்கு 2018-19 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கு மிக உயர்ந்த அளவு ஒதுக்கீடாக ரூ.27,205.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதே சான்றாகும். சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தரமான கல்வியை எளிதாக பெற மிக அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டின் உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட உணர்வுசார் முயற்சிகள் மூலம் ஏற்றமிகு துடிப்பான மாணாக்கர் சமுதாயத்தை உருவாக்கி உள்ளது.

2. கல்வியின் இயல்பான அடுத்த நகர்வு குழந்தைகளை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும்

என்பதை கல்வியாளர்களும் பிற பங்குதாரர்களும் வலியுறுத்துகின்றனர். சமூக, கலாச்சார, பொருளாதார, மேம்பாட்டிற்கான குறிக்கோளுடன் அனைவருக்கும் தரமான கல்வி அளித்தல் என்பது கொள்கை வகுப்பாளர்களின் முதன்மையான நோக்கமாக அமைந்துள்ளது.

3. பெண் குழந்தைகளை முறையான கல்வித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்ததால் அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு சமுதாயத்தில் பெருமளவில் அதிகரித்துள்ளது. தரமான கல்வியின் மூலம், சமுதாயத்தில் காணப்பட்ட சாதி, மத, பாலின, சமூக வேறுபாடு சார்ந்த அனைத்து விதமான ஒடுக்கு முறைகள் படிப்படியாக உடைத்து எறியப்பட்டு வருகின்றன.

4. வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மாணாக்கர் சமுதாயம் சிறகடித்து பறந்து சாதனை புரியவும் தங்களை நிரூபித்துக் கொள்ளவும் வழிவகை செய்கிறது. வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப மாணாக்கர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் கல்வி முறையை அமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் உருவாக்கியதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

5. தற்போதுள்ள அறிவுசார் மற்றும் தகவல்நுட்ப யுகம், கல்வி மேலாண்மையில் பல புதிய மாற்றங்களை

ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தனிநபர் பொருளாதார முன்னேற்றத்திலும் கல்வியினுடைய தாக்கத்தை அனைவராலும் உணர முடிகிறது. மாறி வரும் தேவைகளுக்கேற்ப புதிய கருத்துக்களை, கல்வியில் உட்புகுத்த வேண்டும் என்பதை கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்துள்ளனர். கற்பித்தலுக்கும் மற்றும் கற்பதற்கும் தகவல் மற்றும் தொலை தொடர்புத் தொழில் நுட்பம் முழுமையாக இணைக்கப்பட்டு வருகிறது.

6. பள்ளி வசதி, உட்கட்டமைப்பு வசதிகள், தேவைகேற்ப ஆசிரியர் நியமனம், தர உள்ளடக்கம், ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, கணினிமயம் மற்றும் மின்மயமாக்கப்பட்ட கல்வி மற்றும் வகுப்பறை செயல்முறைகள் ஆகியற்றை ஏற்படுத்துவதே பள்ளிக் கல்வித் துறையின் முதன்மையான நோக்கமாகும்.

7. சமீப காலமாக உரிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர அம்சங்களுடன் கல்வி உருவாக்கப்பட்டதனால், பள்ளி வசதி ஏற்படுத்துதல் மற்றும் கல்வி கற்பதில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பள்ளி கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கழிவறைகள், குடிநீர் வசதிகள், சுற்றுச்சுவர், சமையலறை கூடம், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான சிறப்பு அடிப்படை வசதிகள் ஆகியவை ஏற்படுத்துவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.721.09 கோடி செலவிடப் பட்டுள்ளது.

8. பள்ளி வசதி மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட அனைத்து குழந்தைகளையும் பள்ளிகளில் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள இந்த அரசு நான்கு இணைச் சீருடைகள், மலைப் பிரதேசங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கு கம்பளிச்சட்டை, மடிக்கணினி, இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத் தொகை, புத்தகப்பை, கணித உபகரணப் பெட்டி, காலணி, வண்ணப்பென்சில், கிரையான்கள், புவியியல் வரைபடம், பாடப்புதகங்கள், நோட்டுப்புத்தகங்கள், மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, மதிய உணவு மற்றும் வருவாய் ஈட்டும் தாய்/தந்தையை இழந்த மாணாக்கர்களுக்கான நிதி உதவித் தொகை போன்ற நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது. 2018-19 ஆம் ஆண்டிற்கு மேற்கூறிய நலத்திட்டங்களுக்காக மொத்தம், 1967.47 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்நோக்க தொடர் முயற்சிகளின் பயனாக, தொடக்க நிலை வகுப்புகளில் 2011-12 ஆம் ஆண்டில் 99.63 ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2017-18 இல் 99.86 ஆகவும், உயர் தொடக்க நிலை வகுப்புகளில் 2011-12 ஆம் ஆண்டில் 98.88 ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2017-18 இல் 99.22 ஆகவும் உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறிப்பிடதக்க அளவு குறைந்துள்ளது.

10. தற்போது மாணாக்கர்கள் அனைவரும் தரமான கல்வி அடைவதை உறுதி செய்திட அரசு கவனம் செலுத்தி வருகிறது. சிறந்த முறையிலான மேம்படுத்தப்பட்ட கல்வியினை வழங்கிட முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கல்விச் சேவையை முழுமையாக

மக்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

11. அண்மைக் காலங்களில் தரமான கல்வி மற்றும் கற்கும் சூழ்நிலையை மேம்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் சில: கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டமும், பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு பிறகு 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கும், ஏழு ஆண்டுகளுக்கு பிறகு 1 முதல் 10 ஆம் வகுப்புகளுக்கும், திருத்தியமைக்கப்பட்டன; பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணி விரைவுபடுத்தப் பட்டுள்ளது;பள்ளிகளுக்கிடையேயான ஆரோக்கியமற்ற போட்டிகளை தடுக்க மாணாக்கர்களை மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப்படுத்துதல் களையப் பட்டுள்ளது; எவ்விதமான போட்டித் தேர்வுகளையும் எதிர்கொள்ளும் விதமாக மாணாக்கர்களின் திறனை வளர்த்திட 11ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் திறன் வகுப்புகள் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தை ஏற்படுத்துவதன் மூலம் பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை மிகப்பெரிய அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது ஆகியவை ஆகும்.

12. இந்தக் கொள்கை முன்முயற்சிகள் அனைத்தும் தமிழகத்தின் பெருமைமிகு வரலாற்று அடித்தளத்தையும் தத்துவப் பரிமாணங்களையும் உள்வாங்கியுள்ளன. மாபெரும் தலைவர், புரட்சித் தலைவி

டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்கள் வகுத்தளித்த "**தொலைநோக்கு தமிழ்நாடு** 2023"-இன் அடிப்படையில், கடந்த கால அனுபவங்களையும், நிகழ்கால சவால்களையும் கருத்தில் கொண்டு கல்வித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப தற்காலத்தில் மாற்றங்களை உருவாக்குவதற்கு அவை இணக்கமாக அமைகின்றன.

கல்விக்கான சேவையில் எதிர்நோக்கும் நல்ல விளைவுகளை தரும் என்ற நம்பிக்கையிலும், கல்வியின் பரிணாம வளர்ச்சியில் முன்னேற்றத்தை நோக்கிய ஒரு பெரும் உயரத்தை எட்டும் வகையிலும் 2018-19 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு வழங்கப்படுகிறது.

# II. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2018-19 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.27,205.88 கோடியாகும்.

| 2018-19 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில்) | | | | |
| | | கணக்கு தலைப்பு | மாநில செலவினங்கள் | வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் | மத்திய அரசு திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
| **வருவாய் பகுதி** | | | | | | | |
| 2051 | | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 406.60 | | | | 406.60 |
| 2059 | | பொதுப் பணிகள் | 3840.00 | | | | 3840.00 |
| 2202 | | பொதுக் கல்வி | | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1179219.49 | | | 175000.00 | 1354219.49 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1195140.73 | | | 98287.78 | 1293428.51 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 225.17 | | | 2733.80 | 2958.97 |
| | 5 | மொழி வளர்ச்சி | 1442.47 | | 0.05 | 2.51 | 1445.03 |
| | | **மொத்தம் – பொதுக் கல்வி** | **2376027.86** | | **0.05** | **276024.09** | **2652052.00** |
| 2204 | | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | 139.85 | | | 47.48 | 187.33 |
| 2205 | | கலையும் பண்பாடும் | 12066.67 | | | 0.01 | 12066.68 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2225 | ஆதிதிராவிடர், பழங்-குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்-பட்டோர் நலன் | 16841.14 | | | | 16841.14 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 244.70 | | | | 244.70 |
| 2251 | தலைமைச் செயலகம்- சமூகப் பணிகள் | 801.16 | | | | 801.16 |
| **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | | **2410367.98** | | **0.05** | **276071.58** | **2686439.61** |
| **மூலதன செலவு பகுதி** | | | | | | |
| 4202 | முலதன செலவு | 33436.42 | | | 483.22 | 33919.64 |
| **மொத்த முலதன பகுதி** | | | | | | **33919.64** |
| **கடன் பகுதி** | | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக் கான கடன்கள் | 0.01 | | | | 0.01 |
| 7615 | பல்வகை கடன்கள் | 0.01 | | | | 0.01 |
| **மொத்த கடன் பகுதி** | | | | | | **0.02** |
| ***நிகர மொத்தம்*** | | | | | | **2720359.27** |
| **கூட்டுக- திருப்பி வசூலிப்பவை** | | | | | | |
| | வருவாய் இனத்தின் கீழ் | | | | | 228.77 |
| | **திருப்பி வசூலிப்பவை** | | | | | **228.77** |
| **மானியக் கோரிக்கை எண். 43இன் நிகர மொத்தம்** | | | | | | **2720588.04** |

## III. கொள்கை மற்றும் திட்டங்கள்

### 1. நலத்திட்டங்கள்

### 1 முன்னுரை

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களை ஊக்குவிக்கவும் மற்றும் பள்ளிகளில் தக்க வைத்துக் கொள்ளவும் அரசு பின்வரும் விலையில்லா பொருட்களை வழங்கி வருகிறது.

### 1.1 பாடப் புத்தகங்கள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு விலையில்லாப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களது புத்தக சுமையினை குறைக்கும் நோக்கத்தோடு 2012-13 ஆம் கல்வியாண்டில் முப்பருவமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பாடப்புத்தகங்கள் பருவத்தின் தொடக்க நாள் அன்றே மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் பருவம் ஜூன் மாதத்திலும், இரண்டாம் பருவம் அக்டோபர் மாதத்திலும் மற்றும் மூன்றாம் பருவம் ஜனவரி மாதத்திலும் துவங்குகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 77.47 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 195.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.2 நோட்டுப் புத்தகங்கள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 61.60 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு பருவத்தின் தொடக்க நாளன்று நோட்டு புத்தகங்கள் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ.107.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.3 மடிக்கணினி**

2011-12 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப் பட்டுவருகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 5.30 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைய உள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 758.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.4 நான்கு இணைச் சீருடைகள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்

திட்டத்தில் பதிவு செய்யும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு நான்கு இணைச் சீருடைகள் வழங்கப் பட்டுவருகிறது. 2011-12 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு இணைச் சீருடை இரண்டு இணைச் சீருடைகளாகவும், 2012-13 ஆம் ஆண்டில் நான்கு இணைச் சீருடைகளாகவும் உயர்த்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 41.19 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 414.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.5 காலணிகள்

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 56.95 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 81.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.6 புத்தகப் பை

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு புத்தகப் பை வழங்கப்பட்டு வருகிறது. 2012-13 முதல் ஒவ்வோர்

ஆண்டும் இத்திட்டம் செயல்பட அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 68.89 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**1.7 கிரையான்ஸ்**

ஒவ்வோர் ஆண்டும் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 மற்றும் 2 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கு கிரையான்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. கிரையான்ஸ் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 9.26 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**1.8 வண்ணப் பென்சில்கள்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு வண்ணப் பென்சில்கள் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 15.48 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**1.9 கணித உபகரணப் பெட்டி**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கணித உபகரணப் பெட்டி வழங்கும் திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-14 ஆம்

கல்வியாண்டு முதல் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும், 7 மற்றும் 8 ஆம் வகுப்பில் புதிதாக சேரும் மாணாக்கர்களுக்கும் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 7.12 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் புத்தகப் பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள் மற்றும் கணினி உபகரணப் பெட்டி வழங்கும் திட்டங்களை தொடர்ந்திட ரூ.88.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.10 கம்பளிச் சட்டை

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கம்பளிச் சட்டை வழங்கும் திட்டம்
2013-14 ஆம் ஆண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 1.16 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 1.11 மழைக் கால ஆடை, உறைக் காலணி மற்றும் காலுறை

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பதிவு செய்யும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை

பயிலும் மாணாக்கர்களுக்கு மழைக் கால ஆடை, உறைக் காலணி மற்றும் காலுறை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2016-17 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 1.16 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 1.12 புவியியல் வரைபடம்

ஒவ்வோர் ஆண்டும் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு புவியியல் வரைபடம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2012-13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினால் 7.11 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 3.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.13 பேருந்து பயண அட்டை

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து பள்ளி மாணாக்கர்களுக்கும் அவர்களது பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாக ஒவ்வோர் ஆண்டும் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் போக்குவரத்து துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2017-18 ஆம் ஆண்டில் பள்ளிகளில் பயிலும் 17.61 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் 2018-19 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.14 புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்**

புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 40.53 இலட்சம் மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் 2018-19 ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.15 வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணாக்கர்களுக்கான நிதி உதவி**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய்/தந்தை) மரணமடைந்தாலோ, விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வாறான எதிர்பாராத சூழ்நிலையினால் இப்பெற்றோர்களின் குழந்தைகள் பாதிக்கப்படாமல்

இருக்க வேண்டும் என்பதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. பாதிக்கப்பட்ட மாணாக்கரின் பெயரில் ரூ 75,000/- பொதுத் துறை நிறுவனத்தில் செலுத்தப்படுகிறது. இந்நிதி உதவித் தொகை 2014-15 ஆம் கல்வியாண்டில் ரூ 50,000/-லிருந்து ரூ 75,000/-ஆக உயர்த்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் 1487 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-19 ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை தொடர ரூ. 4.70 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**1.16 மாணாக்கர் விபத்து நிவாரண நிதியுதவி**

மாணாக்கர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு, மாணாக்கர்களுக்கான விபத்து நிவாரண நிதி உதவித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின்போது எதிர்பாராது நிகழும் விபத்திற்கு உள்ளாகும் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் நிவாரண நிதி வழங்கப்படுகிறது. இறப்பு நேரிடின், மாணாக்கரின் குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சமும் பெரிய காயங்களுக்கு ரூ.50,000/-மும் மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000/-மும் என்ற அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும். வழக்கமான பிற காப்பீட்டுத் திட்டங்களைப் போலன்றி, விபத்து ஏற்பட்ட 48 மணி நேரத்திற்குள்ளாகப் மாணாக்கருக்கு நிவாரண நிதியானது இதன்மூலம் விரைந்து வழங்கப்படும். அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 81 இலட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

# 2. தொடக்கக் கல்வி

## 2.1 முன்னுரை

குழந்தைகளிடையே அடிப்படை அறிவு, நன்னெறி, மற்றும் திறன் உருவாவதற்கு தொடக்கக் கல்வி அடித்தளமாக விளங்குகிறது. 6 முதல் 14 வயதுடைய அனைத்துக் குழந்தைகளுக்கும் சாதி, மத, பொருளாதார பாகுபாடின்றித் தரமானக் கல்வியை வழங்குவதே குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் உள்ளார்ந்த நோக்கம் ஆகும். இதற்கெனத் அரசு பல்வேறு நலத்திட்டங்களையும் புத்தாக்கத் திட்டங்களையும் அறிமுகப் படுத்தியுள்ளது. தொடக்கக் கல்வியில் தமிழகம், இந்திய அளவில் ஓர் ஒளி விளக்காகத் திகழ இத்திட்டங்களும் புதுமைகளும் உதவுகின்றன. தரமான கல்வியை அவரவர் இருப்பிடத்திற்கு அருகாமையில் வழங்குவதற்குத் அயராது பாடுபட்டு வருகிறது.

## 2.2 நோக்கங்கள்

- 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரையும் 100 விழுக்காடு பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தலை உறுதி செய்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துதல்

- அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குதல்
- புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குதல்
- தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்
- மக்கள் தொகை குறைவாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல்
- பள்ளிகள் தொடங்க சாத்தியமில்லாத பகுதிகளில், குறிப்பாக, அடர்ந்த வனப்பகுதிகளிலும் தொலை தூர மலைப்பிரதேசங்களிலும் வசிக்கும் பள்ளி வயதுக் குழந்தைகளுக்குப் பாதுகாவலருடன் கூடிய போக்குவரத்து வசதியை அமைத்துக் கொடுத்தல்
- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள், நலிவடைந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகளுக்கு ஏற்ற உள்ளடக்கிய சூழலைப் பள்ளிகளில் அமைத்தல்
- குழந்தைகளிடம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் மற்றும் கணிதத் திறனை மேம்படுத்துதல்
- மாணாக்கர்களிடத்தில் கல்வி மற்றும் கல்விசார் திறன்களை மேம்படுத்துதல்

## 2.3 அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதற்கான சிறப்பு முயற்சிகள்

அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கும் தரமான தொடக்கக் கல்வியை வழங்குவதற்குக் கீழ்க்காணும் சிறப்பு முயற்சிகளைஅரசு மேற்கொண்டு வருகிறது.

### 2.3.1 பள்ளி வசதி


குழந்தைகள் எளிதில் அணுகும் தொலைவில் பள்ளிகள் அமைவது மாணாக்கர்களின் வருகையை அதிகரிக்கச் செய்யும் என அரசு கருதுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, குடியிருப்புகளின் அருகாமையில் தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் அமைப்பதற்கான நெறிமுறைகள் வகுத்துள்ளது. ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப்பள்ளியும், மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளியும் அமைய வேண்டும் என்று தமிழக அரசின் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் 2011இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் 2011இல் நிர்ணயக்கப்பட்ட விதிமுறைகளின்படி, ஓர் அறிவியல்பூர்வமான புவியியல் தகவல் வரைபட முறைமை உருவாக்கப்பட்டு தொடக்கக் கல்வி அளிப்பதற்கான வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கலைத்

திட்டம், பாடத் திட்டம், பாட நூல்கள் ஆகியவற்றை மாற்றியமைப்பதுடன் ஒவ்வொரு வகுப்பறையிலும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்கிட அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. ஒவ்வொரு வகுப்பறையிலும் முறையான வகையில், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு செய்வதன் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்குவது உறுதி செய்யப்படுகிறது.

### 2.3.1.1 புவியியல் தகவல் முறைமை விவரத் தொகுப்பு 2017-18

புவியியல் தகவல் முறைமையில் பள்ளிசார் விவரங்களை அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் 2012-13ஆம் ஆண்டு முதல் இணைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தகவல் முறைமையில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் இடம் சார்ந்த விவரங்களைப் பயன்படுத்தி, பள்ளி வசதியை மேம்படுத்த முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது. புவியியல் தகவல் முறைமை, துறையினர் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான வலைத்தள மையமாகவும் பயனாளிகள் எளிதாகப் பயன் படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 58,033 பள்ளிகள் மற்றும் 92,234 குடியிருப்புகள் புவியியல் தகவல் முறைமைக்குள் உட்படுத்தப்பட்டுள்ளன. இத்தகவல் முறைமையில் உள்ள இடம்சார் தகவலில் பள்ளிகளின் பல்வேறு நிர்வாகம்

மற்றும் வகைகளை எளிதில் அடையாளம் காணத் தனிப்பட்ட வண்ணங்கள் மற்றும் வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் 2011இல் கூறியுள்ள உத்திகளின்படி, பள்ளி வசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள், அருகாமையில் உள்ள பள்ளிகளுக்குப் பாதுகாப்பாகச் சென்று கல்வி பயில்வதற்கான வசதி ஏற்படுத்திட பள்ளி வரைபடத் தகவல் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் 92,234 குடியிருப்புகள் உள்ளன.



புவியியல் தகவல் முறைமை

இவற்றில் 89,958 குடியிருப்புகளில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. நடுநிலை அளவில் 91,040 குடியிருப்புகளில் அரசு மற்றும்

அரசு நிதி உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகள் அமைந்துள்ளன.

### 2.3.2 போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகள்

பள்ளிகள் அமையப் பெறாத குடியிருப்புப் பகுதிகளிலிருந்து குறிப்பாக வனம் மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்குப் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி 2012-13ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2017-18ஆம் கல்வியாண்டில் 14,787 குழந்தைகளுக்கு ரூ.4.44 கோடி செலவில் இவ்வசதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.3 முந்தைய கல்வியாண்டுகளில் புதிதாகத் தொடங்கப்பட்ட மற்றும் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்

| வ. எண் | ஆண்டு | புதிய தொடக்கப் பள்ளிகள் | தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | 2013-14 | 54 | 0 |
| 2 | 2014-15 | 128 | 42 |
| 3 | 2015-16 | 39 | 5 |
| 4 | 2016-17 | 6 | 4 |
| மொத்தம் | | 227 | 51 |

2017-18 ஆம் ஆண்டில் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.4 உண்டு உறைவிடப் பள்ளிகள்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் படி, 6 முதல் 14 வயதுடைய ஒவ்வொரு குழந்தையையும் பள்ளியில் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளும் பள்ளியில் சேர்ந்து பயில்வதை உறுதி செய்வதற்கு, மக்கள் தொகை குறைவாக உள்ள மலை மற்றும் வனப்பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், நகரப்பகுதிகளில் உள்ள வாய்ப்பு மறுக்கப்பட்ட தெருவோரக் குழந்தைகள் மற்றும் பெரியோர் பாதுகாப்பின்றி வாழும் குழந்தைகள் ஆகியோர் பயன் பெறும் வகையில் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்வரசு 11 உண்டு உறைவிடப் பள்ளிகளை நிறுவியுள்ளது. 2017-18ஆம் ஆண்டில் 877 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 2017-18 ஆம் ஆண்டில் ரூ.5.33 கோடி இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

### 2.3.5 உட்கட்டமைப்பு வசதிகள்

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வாயிலாக 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை ரூ.1,072.70 கோடி செலவில் புதிய பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி ஆகியவை அரசுப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2017-18ஆம் ஆண்டில் 968 கட்டடப் பணிகள் ரூ.66.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 2.3.6 பள்ளிகளுக்கு 100 விழுக்காடு வருகை புரிந்த ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்

பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் தொடர்ந்து வருகை புரியும் மாணாக்கர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டும் விதமாகப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2016-17ஆம் கல்வியாண்டில் விடுப்பு ஏதும் எடுக்காமல் 100 விழுக்காடு வருகை புரிந்த 51 ஆசிரியர்கள் மற்றும் 22,311 மாணாக்கர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

## 2.4 கல்வி சார் குறியீடுகள்

அனைத்துச் செயல்பாடுகளின் விளைவுகளையும் கல்வி சார் குறியீடுகள் மூலமாக எளிதில் மதிப்பிட இயலும். கல்வி முறை சார்ந்த இலக்கினை நோக்கிச் செல்வதில் உள்ள தற்போதைய நிலையினை அல்லது மாற்றத்தை அளவீடு செய்வதற்குக் கல்விசார் குறியீடு பயன்படுகிறது. சில கல்வி சார் குறியீடுகளின் பொருள் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 2.4.1 நிகர மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் வகுப்புக்கேற்ற வயதுடைய மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கும், மக்கள் தொகையில் 6+ முதல் 10+ வயதுடைய பள்ளி வயது குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

### 2.4.2 மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்கப்பள்ளிகளில் வயதுவரம்பின்றி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களின் மொத்த எண்ணிக்கைக்கும், 6 முதல் 10 வயதுக்கு மேற்பட்ட பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

### 2.4.3 தக்க வைத்தல் விகிதம் ( தொடக்க நிலை)

தொடக்க நிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 5 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும், நான்கு ஆண்டுகளுக்கு முன்பான 1 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் உள்ள விகிதமாகும்.

### 2.4.4 தக்க வைத்தல் விகிதம் ( நடுநிலை )

நடுநிலையில் தக்க வைத்தல் விகிதம் என்பது 8 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான 6 ஆம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

### 2.4.5 இடை நிற்றல் விகிதம்

மொத்த மாணாக்கர் சேர்க்கைக்கும், ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அந்தத் தொடர் நிகழ்வாண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணாக்கர்களுக்கும் உள்ள விகிதம் ஆகும்.

**2.4.6 மாற்ற விகிதம்** (5 – 6)

தொடக்க நிலையில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கும், அதே ஆண்டில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்த மொத்த மாணாக்கர் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் என்பது மாற்ற விகிதம் ஆகும். 2017-18 ஆம் ஆண்டு மாநில அளவில் 5 ஆம் வகுப்பில் இருந்து 6 ஆம் வகுப்பிற்கு மாற்றலான விகிதம் 99.1% ஆகும்.

**2.4.7 மாணவர் ஆசிரியர் விகிதம்**

**மாணவர் ஆசிரியர் விகிதம் =**

$$\frac{\text{பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்தமாணவர் சேர்க்கை}}{\text{அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின்எண்ணிக்கை}}$$

2017-18 *ஆம் ஆண்டின் கல்விசார் குறியீடுகள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :

| குறியீடுகள் | தொடக்க நிலை | நடுநிலை |
|---|---|---|
| மொத்த மாணாக்கர் சேர்க்கை விகிதம் | 106.40 | 106.35 |
| நிகர மாணாக்கர் சேர்க்கை விகிதம் | 99.86 | 99.22 |
| தக்க வைத்தல் விகிதம் | 99.15 | 98.60 |
| இடைநிற்றல் விகிதம் | 0.85 | 1.40 |
| மாணவர் ஆசிரியர் விகிதம் | 24.02 | 24.77 |

* மாறுதலுக்கு உட்பட்டது.

### 2.4.8 சேர்க்கையில் சம வாய்ப்பு

பள்ளி வசதியும், சம வாய்ப்பு சூழ்நிலையும் ஒருங்கிணையும் போதுதான் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்பது உறுதி செய்யப்படுகிறது. பால், இன வேறுபாடின்றி மாணாக்கர்களைத் தொடக்கப் பள்ளியில் சேர்க்கவும், இடைநிற்றலின்றி மாணாக்கர்களைப் பள்ளியில் தக்க வைத்து, கற்றல் விளைவுகளை முழுமையாக அடைவதற்கும் சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், சிறப்பு முயற்சிகள் மற்றும் உத்திகளின் மூலம் பெண் குழந்தைகள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினக் குழந்தைகள், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள், நகர்ப்புற வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள், சிறுபான்மை வகுப்பினர் குழந்தைகள் மற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் என அனைவரும் தொடக்கக் கல்வியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

### 2.4.9 மாணாக்கர் சேர்க்கையில் பாலின விகிதம்

2017-18ஆம் கல்வியாண்டில் ஆண், பெண் மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்க நிலை வகுப்புகளில் முறையே 51.56% மற்றும் 48.44% எனவும், நடுநிலை வகுப்புகளில் முறையே 51.35% மற்றும் 48.65% எனவும் உள்ளது.

## 2.5 குழந்தை மையக் கல்வி முறையில் புத்தாக்க முயற்சிகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் குழந்தை மையக் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் தமிழகம் ஓர் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. அரசின் இத்தகைய முயற்சிகளினால் கற்றல் முறைமை குழந்தை நேயமுள்ளதாகவும் ஒரு இனிமை நிகழ்வாகவும் அமைந்துள்ளது.

### 2.5.1 எளிமைப்படுத்தப்பட்ட செயல் வழிக் கற்றல் முறை

எளிமைப்படுத்தப்பட்ட செயல் வழிக் கற்றல் என்பது குழந்தை மையக் கல்வி முறையாகும். தற்போது குழந்தை மையக் கல்வியின் தொடர்ச்சியாகத் தொழில் நுட்பங்களை இணைத்து இப்புதிய அணுகு முறையில் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை செயல்படுத்தப்பட உள்ளது. வகுப்பறையில் ஆசிரியர் மாணாக்கர் இடையேயான தொடர்பு, ஒத்த குழுவினர் இடையேயான பரிமாற்றம், தனியாள் கல்வி மற்றும் மதிப்பீடு ஆகிய 4 நிலைக் கற்றல் முறைகள் பின்பற்றப்பட்டு மாணாக்கர்களிடத்தில் கற்றல் விளைவுகள் மேம்படும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இப்புதிய கற்றல் முறையில் சிந்திக்கவும், கலந்துரையாடவும், வினாக்கள் கேட்கவும், பயம் மற்றும் தயக்கமின்றி மதிப்பீடுகளை எதிர்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கற்றல் முறை மாணாக்கர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் குழு மனப்பான்மை அதிகரிக்க உதவும் வகையிலும், கற்றல்

மற்றும் கற்பித்தல் நிகழ்வில் ஈடுபடுபவர்களின் படைப்பாற்றல் திறனை வெளிக்கொணரவும் வாய்ப்பளிக்கிறது.

### 2.5.2 எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி முறை

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி முறை 4 மற்றும் 5 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எளிமைப்படுத்தப்பட்ட செயல்வழிக் கற்றல் முறையையும், படைப்பாற்றல் கல்வி முறையையும் இணைத்து உருவாக்கப்பட்ட கல்வி முறையே எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி முறை ஆகும். குழந்தைகள் 6 ஆம் வகுப்பு முதல் படைப்பாற்றல் கல்வியை நிலையாக மேற்கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு செயல் வழி கற்றல் முறையையும், படைப்பாற்றல் கல்வி முறையையும் இணைத்து எளிமைப்படுத்தப்பட்ட படைப்பாற்றல் கல்வி முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு குழந்தையும் நேரடியாக கற்றல் நிகழ்வில் பங்கேற்க இக்கல்வி முறை வாய்ப்பளிக்கிறது.

### 2.5.3 படைப்பாற்றல் கல்வி

படைப்பாற்றல் கல்வி முறை நேரடியாகவும், செயல்திறனோடும் கற்றலில் ஈடுபட கற்போர் மையக் கல்வி முறைமையாகத் திகழ்கிறது. கற்போர் கற்றலைக்

கற்பதே இப்படைப்பாற்றல் கல்வியின் முதன்மையான நோக்கமாகும். கற்றல் சூழல் உகந்ததாக இருக்கும் பொழுது கற்போர் தங்கள் அறிவைத் தாங்களாகவே வளர்த்துக் கொள்ள முடியும். இக்கல்வி முறையில் ஆசிரியர்கள் செயலாக்குநராக செயல்பட்டு ஒவ்வொரு மாணாக்கரும் தாம் கற்ற விவரங்களை அறிவார்ந்த திறனாக மாற்றிட முயற்சித்தல் வேண்டும். படைப்பாற்றல் கல்வி முறையில், மாணாக்கர் சிந்திக்கவும், கலந்துரையாடவும், வினாக்கள் கேட்கவும், வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறு குழுக்களாக செயல்படும் வகையில் வகுப்பறைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு மாணாக்கரின் தனித் திறமையை அறிந்துகொள்வதுடன் மாணாக்கர்களின் படைப்பாற்றல், புரிதல் திறனை எளிதாக ஆசிரியர் அறிந்து கொள்ள மனவரைபடம் எனும் பகுதி இம்முறையில் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

- கற்போர் மையக் கல்வி மாணாக்கர்களின் கற்கும் திறனை வெகுவாக அதிகரிக்கும்
- பயம், மன அழுத்தம் மற்றும் தயக்கமின்றி கற்பதற்கு உதவும்
- கருத்துகளை உணர்ந்து புரிந்து கொண்டு கற்க உதவியாக இருக்கும்
- தேர்வுகளை எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையை வழங்கும்

- புதுமையான முறையில் சிந்திப்பதற்கும் மனவரைபடத்தை வரைவதற்கும் உரிய திறனை வழங்குகிறது
- மாணாக்கர்கள் தாங்கள் கற்றுணர்ந்ததை வெளிப்படுத்தும் திறனை வளர்க்கும்

### 2.5.4 செயல் திட்டம் வழியான கற்றல்

செயல்திட்ட வழிக் கற்றல், அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்கும், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் சூழலைத் தெரிந்து, மாணாக்கர்கள் புதிய அறிவுத் திறனைப் பெறுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 6 ஆசிரியர்களுக்கு செயல்திட்ட வழிக் கற்றல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்கள் பள்ளி மாணாக்கர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய செயல்திட்டங்களைத் தயாரிக்க ஊக்கம் மற்றும் ழிகாட்டுதலை வழங்குகிறார்கள். ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் மாணாக்கர்களால் தயாரிக்கப்பட்ட 2,178 செயல்திட்டங்கள், மாணாக்கர்கள் தாங்களாகவே பொருளுணர்ந்து கற்பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2017–18ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த 3 செயல் திட்டங்களுக்குப் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இச்செயல்பாட்டிற்கு 2017-18 ஆம் ஆண்டில் ரூ. 27.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,085 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தாங்களாகவே சிந்தித்து உருவாக்கிய செயல்திட்டங்களைக் காட்சிபடுத்தினர். இதன் வாயிலாக மாணாக்கர்கள் மனனம் செய்து கற்கும் முறையிலிருந்து மாறி, சிந்தித்துப் பகுத்தாய்வு செய்து கற்கின்றனர்.





செயல் திட்டம் வழியான கற்றல்

## 2.6 ஆங்கில வழிக் கல்வி

தங்கள் குழந்தைகள், ஆங்கில வழிக் கல்வி முறையில் பயில பெரிதும் விரும்புகின்ற பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 2012-13 ஆம் ஆண்டு பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விப் பிரிவுகள் அறிமுகப்படுத்த அரசால் தீர்மானிக்கப்பட்டது. 2012-13ஆம் கல்வியாண்டில் தொடக்கக்கல்வியின் கீழ் செயல்படும் சில குறிப்பிட்ட பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. இம்முயற்சி பெற்றோர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. ஆங்கிலவழிக் கல்விப் பிரிவுகளில் சேர்க்கை குறிப்பிடத்தக்க அளவில் தொடர்ந்து உயர்ந்து

வருகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 12,738 பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவுகளில் 6,22,006 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தொடக்க/நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியாக ஆங்கில வழியில் கற்பிப்பதற்கான கற்பித்தல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 2.7 முப்பருவ முறை

2012-13 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்துப் பள்ளிகளிலும் முப்பருவ முறை அறிமுகப்படுத்தப்படும் என சட்டப் பேரவையில் 26.08.2011 அன்று அன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளின் புத்தகப் பையின் சுமையைக் குறைக்க முப்பருவக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. முப்பருவக் கல்வி முறையில், ஒரு கல்வியாண்டிற்கான முழுப் பாடப்பொருள் மற்றும் கற்றல் திறன்களில் எவ்வித குறைபாடுமின்றி மூன்று பருவங்களுக்கும் வண்ணமயமான பாடப்புத்தகங்கள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம், மாணாக்கர்களுக்குப் புத்தகச் சுமை பெருமளவில் குறைந்து கற்றல் நிகழ்வுகள் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

## 2.8 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை 1 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு, 2012-13 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்புதிய மதிப்பீடு முறை, கற்றலை மனப்பாடம் செய்வதிலிருந்து மாற்றி படைப்பாற்றலின் பாதையில் பயணிக்க வைக்கிறது. இம்மதிப்பீடு முறை ஆண்டு முழுவதும் ஒவ்வொரு குழந்தையின் கல்விச்செயல்பாடுகள் மற்றும் கல்வி இணை செயல்பாடுகளின் பரிமாணங்களை தொடர்ந்து மதிப்பீடு செய்யப் பயன்படுகிறது. குழந்தையின் தனிப்பட்ட மதிப்பீட்டுத் தேவைக்கேற்ப நெகிழ்வான முறையில் அமைந்துள்ளது.

## 2.9 தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்தல்

தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டின் யுகமாகத் திகழும் 21 ஆம் நூற்றாண்டில், கல்வி முறையிலும் தகவல் தொழில்நுட்ப விவரங்களை ஒருங்கிணைப்பது இன்றியமையாததாக அமைந்துள்ளது. தொழில் நுட்பத்துடன் கூடிய பாடப்புத்தகங்கள், பயிற்சி ஏடுகள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கையேடு வழங்குவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. தகவல் வழங்கும் விரைவுக் குறியீடுகள் மின் பாடப்புத்தகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. தகவல் வழங்கும் விரைவுக் குறியீடுகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களும் மாணாக்கர்களும் பாடப்பொருள் சார்ந்த விளக்கங்களை எளிதாகப் பெற முடியும். இப்புதிய

முன்மாதிரி முயற்சி சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 16 பள்ளிகளில் முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்றல் செயல்பாட்டில் 1 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் கூட சிறப்பாகச் செயல்பட்டது தெரிய வந்துள்ளது. தற்போது இப்புதிய அணுகுமுறை மேலும் 11 மாவட்டங்களில் உள்ள 173 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 2.10 ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி

மாற்றி அமைக்கப்பட்ட கலைத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட புதிய பாடத்திட்டங்கள், கற்பித்தல், ஒருங்கிணைந்த தொழில் நுட்பம், கணிதம், அறிவியல் மற்றும் மொழித்திறனுக்கான வடிவமைக்கப்பட்ட உபகரணப் பெட்டிகளைப் பயன்படுத்துதல் குறித்த பயிற்சியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். தலைமையாசிரியர்களின் தலைமைப் பண்புகளை மேம்படுத்த தேசிய கல்வி மேலாண்மை மற்றும் திட்டமிடல் பல்கலைக்கழகத்துடன் (National University of Educational Planning and Administration - NUEPA) இணைந்து பயிற்சி வழங்கப்படும். வட்டார அளவில் பணியாற்றி வருகின்ற ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு தனித்திறன் மற்றும் பாடம் சார்ந்து செறிவூட்டல் பயிற்சி வழங்கப்படும். சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் கற்றல் திறன் மேம்படுவதற்காக சிறப்பு ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

## 2.11 தேசிய அளவிலான அடைவு ஆய்வு

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட கற்றல் விளைவுகளில் மாணாக்கர் அடைவினை மதிப்பிட்டு அறிவதற்கு, தேசிய அளவிலான அடைவு ஆய்வு முதல் முறையாக தமிழகத்தில் 13.11.2017 அன்று அனைத்து ஒன்றியங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் உரிய தீர்வு காணும் பொருட்டு குறுகிய மற்றும் நீண்ட கால செயல்திட்டங்கள் / செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டு அடுத்த கல்வியாண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் முறையில் கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புகளும், மாணாக்கர்களிடம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகளும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. 2018-19 ஆம் கல்வியாண்டில் புதிய கலைத் திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்டுள்ள பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் ஆசிரியர்களுக்குத் தேவையான உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளது. சர்வதேச அளவில் மாணாக்கர்களை மதிப்பிடுவதற்கான திட்டத்தில் பங்கு பெறுவதற்குத் தேவையான கூடுதல் உள்ளீடுகளை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## 2.12 சமூக பங்கேற்பு நிகழ்ச்சிகள்

### 2.12.1 பள்ளி மேலாண்மைக் குழு

கல்வி ஆளுமையை அடித்தளம் வரை பரவலாக்க சமுதாய பங்கேற்பு ஒரு முக்கிய கூறாக கருதப்படுகிறது. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் படி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளானது பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் உள்ளூர் நிர்வாகத்தைச் சார்ந்தே அமையும். தற்பொழுது அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 42,167 பள்ளி மேலாண்மைக் குழு செயல்பட்டு வருகின்றது. இக்குழுவின் முதன்மை நோக்கம் பள்ளி வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கவும், பள்ளிக் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தவும், மாணாக்கரின் கற்றலை மேம்படுத்தவும் பள்ளிக்கும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் உறுதுணையாக இருந்து பள்ளியை குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 க்கு உட்பட்ட பள்ளியாக மாற்றுவதே ஆகும்.

2018-19 ஆம் கல்வியாண்டில் ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர் - ஆசிரியர்- மாணாக்கர் கூட்டத்தினை ஒரு குறிப்பிட்ட நாளில் ஏற்பாடு செய்து மாணாக்கர்களின் கல்வி மற்றும் கல்விசார் அடைவுத்திறன் குறித்துத் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 இன் கீழ்

மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள், அதை உறுதி செய்ய வேண்டிய பள்ளி மேலாண்மைக் குழுக்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உள்பட அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.12.2. மாணாக்கர் சேர்க்கை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

அரசுப் பள்ளிகளில் மாணாக்கர்கள் சேர்க்கையை அதிகரிக்க 2017 ஆம் ஆண்டு ஜூன் முதல் ஆகஸ்ட் வரை தமிழகத்தில் உள்ள 413 வட்டாரங்களிலும் மாணாக்கர் சேர்க்கைப் பேரணி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்தல் போன்றவை நடைபெற்றன. மேலும் வாகனங்கள் மூலமாகவும், விளம்பரப் பலகைகள் வைத்தும், பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் பெற்றோர்கள் மற்றும் மாணாக்கர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதற்காக 2017-18 ஆம் கல்வி ஆண்டில் ரூ.33.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.







விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## 2.13 பள்ளி மாணாக்கர்களுக்கான போட்டிகள்

2017-18 ஆம் கல்வியாண்டில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009இன் உள்ளார்ந்த நோக்கங்களைப் புரிந்து கொள்வதற்கும், பெண்கல்வியின் முக்கியத்துவம், சுகாதாரம், பெண்கள் முன்னேற்றம் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை மாணாக்கர்களிடையே ஏற்படுத்தும் விதமாகவும் 32,004 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு பேச்சு, ஓவியம் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ரூ.89.73 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.



போட்டிகள்

### 2.14 சுவர் சித்திரங்கள்

பள்ளி வளாகத்தைக் கண்ணைக் கவரும் வகையிலும், அறிவார்ந்த வகையிலும் மாற்றுவதற்காகவும் 2017-18ஆம் கல்வியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2,184 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கற்றலை வலுப்படுத்தும் வண்ணமயமான சுவர் சித்திரங்கள் மற்றும் ஆங்கில உச்சரிப்பு ஒலிகளைக் கற்றுக் கொள்வதற்கு உதவும் எழுத்துருக்கள் வகுப்பறைகளின் உட்புறம் ரூ.3.28 கோடி செலவில் வரையப்பட்டுள்ளன.




சுவர் சித்திரங்கள்

## 2.15 அறிவியல் கண்காட்சி

மாணாக்கர்களிடையே அறிவியல் மனப் பான்மையை ஏற்படுத்தவும், இளம் விஞ்ஞானிகளின் திறன்களை வெளிக் கொணரவும், அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளுடன் அறிவியல் பாடக்கருத்துகளை ஒப்பிட்டு அறியும் வகையில் அறிவியல் கண்காட்சி 2016-17 ஆம் ஆண்டு முதல் குறுவள மைய அளவில் நடத்தப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டு "நிலையான முன்னேற்றத்திற்கான புதுமைக் கண்டுபிடிப்புகள்" எனும் தலைப்பின் கீழ் ரூ.558.40 இலட்சம் செலவில் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. முதல் மூன்று சிறந்த

கண்டுபிடிப்புகளுக்கான இளம் விஞ்ஞானிகளுக்குப் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்து விளங்கிய பள்ளிக்கு கேடயம் வழங்கப்பட்டது.



அறிவியல் கண்காட்சி



பரிசு பெற்றவர்

## 2.16 தற்காப்புப் பயிற்சி

2017-18 ஆம் ஆண்டில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவிகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2,000 மாணவிகள் வீதம் 60,000 மாணவிகளுக்கு ரூ.180.00 இலட்சம் செலவில் தற்காப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

## 2.17 பள்ளி ஆண்டு விழா

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த 7,295 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2017-18 ஆம் ஆண்டில் ரூ.5.6 கோடி செலவில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.





பள்ளி ஆண்டு விழா

## 2.18 கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை

கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையானது ஆசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் பற்றிய முழுத்தகவல்களை உள்ளடக்கியது. தரமான கல்வியை மேம்படுத்தவும் கல்வி தொடர்பான முக்கிய கொள்கைச் செயல்பாட்டில் பங்கு வகிக்கும் அனைவருக்கும் இம்முறைமை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. EMIS மற்றும் UDISE இரண்டையும் ஒருங்கிணைத்து மத்திய மனிதவளத் துறை நிர்வகிப்பதால் மாநிலங்களுக்கான ஆண்டுத் திட்டங்களைத் திட்டமிட

மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு இத்தகவல் தொகுப்பு உதவியாக உள்ளது.

## 2.19 தகவல் மற்றும் தொலை தொடர்பு தொழில் நுட்ப வழிக் கல்வி

### 2.19.1 கணினி வழிக் கல்வி

தற்போதைய தகவல் தொடர்பு யுகத்தில், கணினியைக் கையாளும் அடிப்படைக் கல்வியானது மாணாக்கர்கள் கணினி சார்ந்த அறிவு பெற உதவுகிறது.





கணினி வழிக் கல்வி

2017-18ஆம் ஆண்டில் 486 அரசுப் பள்ளிகளுக்கு 1,458 கணினிகள் ரூ. 592.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு உள்ளது.

### 2.19.2 ஆசிரியர்களுக்கான தகவல் மற்றும் தொலைத் தொடர்புத் தொழில் நுட்ப பயிற்சி

ஆசிரியர்களுக்கு கணினியைக் கையாளுவதற்கான பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படுகிறது. கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளிலும், காட்சி-கேள்வி மற்றும் எண்ணியல் தொடர்பான பாடச்

செயல்பாடுகளிலும் கணினியைப் பயன்படுத்துவதற்கு உரிய பயிற்சியும் வழங்கப்படுகிறது. "மைக்ரோ சாப்ட்" நிறுவனத்துடன் இணைந்து 500 முதன்மைக் கருத்தாளர்களுக்கு நுணுக்கமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.



தொழில் நுட்ப பயிற்சி

### 2.19.3 மாணாக்கர்களுக்கான கணினித் தொழில்நுட்ப மன்ற போட்டிகள்

2017-18ஆம் ஆண்டின் தகவல் தொழில் நுட்பத்தினை மிகச் சரியான முறையில் பயன்படுத்துதலை மேம்படுத்திடும் வகையில் கணினித் தொழில்நுட்ப மன்றம், நடுநிலைப் பிரிவு உள்ள பள்ளிகளில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில் 8 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு "தகவல் தொழில் நுட்பத்தின் ஒருங்கிணைந்த பயன்" எனும் தலைப்பின் கீழ் ரூ.54.36 இலட்சம் செலவில் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெற்ற

மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகை, சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டுள்ளன.



சிறந்த மாணவருக்கான பரிசு

### 2.19.4 தேசிய அளவிலான ஆசிரியர் தளம்

தேசிய அளவிலான ஆசிரியர் தளம், கற்றல் கற்பித்தலுக்குரிய ஆதார வளங்களின் முழுமையான தொகுப்பாக அமையும். இத்தளம் ஆசிரியர், மாணாக்கர் மட்டுமின்றி பெற்றோரும் கட்டணம் ஏதுமின்றிப் பயன்படுத்தும் விதத்தில் அமைக்கப்படும். ஆசிரியர்கள் தங்கள் தொழில்சார் வளங்களை உருவாக்கி வெளிப்படுத்தவும், பிற ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகள் மற்றும் செயல்திட்டங்களை அறிந்து செயல்படவும் உதவியாக இருக்கும். ஆசிரியர்களுக்குப் பயன்படும் இத்தளம் தலைசிறந்த ஆதார வளங்களைக் கொண்டதாகவும் மதிப்பீட்டிற்கு வழிவகுக்கும் தளமாகவும் அமையும். இத்தளம் கலைத்திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியுள்ளதால்

ஆசிரியர்களுக்கு தேவையான தகவல்களைப் பெற முடியும். தரமான பணியிடைப் பயிற்சிகளை எந்நேரத்திலும் எவ்விடத்திலும் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு இத்தளம் துணை நிற்கும். மாணாக்கர்களின் கற்றல் அனுபவத்தை விரிவு செய்யவும் தரமான கல்வியை உறுதி செய்யவும் இத்தளம் பயன்படுவதுடன் மாணாக்கர்களே நேரடியாக இத்தளத்தினைப் பயன்படுத்தவும் இயலும். இத்தளம் கல்வித் தரத்தை மேம்படுத்திட முழுமையாக இணைக்கப்படும்.

### 2.20 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா

தமிழகத்தின் 14 மாவட்டங்களில் கல்வியில் பின் தங்கிய 44 ஒன்றியங்களில் 61 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் 10 முதல் 14 வயதுக்குட்பட்ட பள்ளி செல்லா பெண் குழந்தைகள் கல்வி பெறுவதற்காக உண்டு உறைவிடப்பள்ளிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண் குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்கத் தகுதியான பயிற்சி பெற்றுள்ள 329 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மையங்களில் தங்கிப்பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.100/- உதவித்தொகை வழங்கப்படுவதுடன் குழுக்காப்பீட்டுத் திட்டமும் செய்து தரப்பட்டுள்ளது. 2017-18ஆம் ஆண்டில், 4,465 பெண் குழந்தைகள் இவ்வசதியைப் பெற்று பயனடைந்து உள்ளனர். இத்திட்டத்திற்காக 2017-18 ஆம் ஆண்டில் ரூ.2455.74/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.21 உள்ளடக்கிய கல்வி

### 2.21.1 பள்ளிகள் மற்றும் சிறப்பு பயிற்சி மையங்களில் மாணாக்கர் சேர்க்கை

தமிழகத்தில் 2017-18 ஆம் ஆண்டில் 1,36,134 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்களில் 1,27,864 குழந்தைகளுக்கு பள்ளிகளிலும் மற்றும் 8,270 குழந்தைகளுக்கு வீட்டிற்குச் சென்றும் கல்வி வழங்கப்பட்டது. 6 முதல் 18 வயது வரையிலான 8,162 குழந்தைகளுக்கு 427 பள்ளி ஆயத்த மையங்களில், சிறப்பு பயிற்சி மற்றும் அவர்களது குறைபாடுகளுக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகின்றன. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள மாநில ஆதார வள மையத்தில் 43 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வியும் அவர்களது குறைபாடுகளுக்கேற்ப சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

### 2.21.2 தொடக்க நிலை பயிற்சி மையங்கள்

பிறந்தது முதல் 6 வயது வரையிலான சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காகத் தமிழகம் முழுவதும் 85 தொடக்கநிலை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2017-18 இல் மட்டும் 1,467 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் சிறப்புக் கல்வியும் மற்றும்

குறைபாடுகளுக்கேற்ப சிகிச்சையும் பெற்று பயனடைந்துள்ளனர்.

## 2.22 பள்ளி செல்லாக் குழந்தைகள்

பள்ளி செல்லாக் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கு அரசு மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளினால் கடந்த 7 ஆண்டுகளில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. 2011-12 ஆம் ஆண்டில் 63,178 என கண்டறியப்பட்ட பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 2017-18 ஆம் ஆண்டில் 36,930 ஆகக் குறைந்துள்ளது.



இராமநாதபுரம், திருவாடனை கடற்கரை பகுதியில் கணக்கெடுப்பு

கள ஆய்வு செய்து கண்டறியப்பட்ட 36,930 குழந்தைகளில் 35,537 குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டு உள்ளனர். சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கு அரசால் வழங்கப்படும்

விலையில்லாக் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையத்தில் முறைப்படுத்தப்பட்ட மாணாக்கர்களைத் தக்க வைக்க உதவித் தொகை அரசால் வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில் 5,332 மாணாக்கர்கள் இச்சிறப்பு பயிற்சி மையங்களில் பயின்று 8 ஆம் வகுப்பை நிறைவு செய்துள்ளனர்.



உத்திரமேரூரில் கற்றல் செயல்பாடுகள்

2017-18 ஆம் ஆண்டில் ரூ.18.04 கோடி நிதி இச்சிறப்புப் பயிற்சி மையங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.23 புலம் பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி

2017-18 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு உள்ளும், மாநிலத்திற்கு வெளியிலும் 4,178 புலம் பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகள் கண்டறியப்பட்டு அதில் 4,103 மாணாக்கர்கள் அவர்களின் வயதுக்கேற்ற வகுப்புகளில் பயிலும் வகையில் பள்ளியில்

சேர்க்கப்பட்டுள்ளனர். மாநிலத்திற்குள் புலம் பெயர்ந்த 2,285 மாணாக்கர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தெலுங்கு, இந்தி, வங்காளம் மற்றும் ஒடியா மொழிகளைச் சார்ந்த 100 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவர்களது தாய்மொழியிலேயே பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. புலம்பெயரும் தொழிலாளர்கள் ஓரிடத்தில் சில மாதங்கள் பணிபுரிந்து மீண்டும் அவரது சொந்த இருப்பிடத்திற்குச் செல்பவர்கள் ஆவர். இவ்வாறு புலம்பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இரு மொழிகளில் மாற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதனால், அவர்கள் எவ்விடத்திலும் எந்தத் தடையுமின்றி தொடர்ந்து கல்வி கற்றிட முடியும்.



புலம் பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகள்

புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக இதுவரை ரூ.85 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## 2.24 அனைவருக்கும் கல்வி இயக்கம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம் மற்றும் ஆசிரியர் கல்வியை ஒருங்கிணைத்தல்

மத்திய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கம் மற்றும் ஆசிரியர் கல்வி ஆகியவற்றை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (Samagra Shiksha Abhiyan) என ஒருங்கிணைக்க திட்டமிட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கமானது 6-14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. அனைவருக்கும் இடைநிலைக் கல்வியானது 14-16 வயதுடைய 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு தரமான, எளிதாக அணுகும் முறையில் இடைநிலைக் கல்வி கிடைத்திட உறுதுணை செய்கிறது. இவ்விரு இயக்கங்களின் கல்வி வளங்களும், முயற்சிகளும் இரட்டிப்பு பணியாக அமைந்துள்ளது. எனவே, இவ்விரு நிர்வாக கட்டமைப்புகளை இணைப்பதன் மூலம் மாறி வரும் புதிய தொழில்நுட்பக் கல்வியை முழுமையாகப் பயன்படுத்தி, குறிக்கோளுடன் எழுச்சி மிக்க செயல்பாட்டுடன் தரமான கல்வியை வழங்குதலை உறுதி செய்ய முடியும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கீழ் உள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலம் ஆசிரியர் கல்விக்கான உட்கூறுகள் செயல்படுத்தப்படும்.

### 2.25 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

### 2.25.1 பயன்பாட்டில் உள்ள பள்ளிக் கழிப்பறைகளை குழந்தைகள் எளிமையாக அணுகும் வகையில் மாற்றியமைத்தல்

189 பள்ளிகளில் தற்போது பயன்பாட்டில் உள்ள கழிப்பறைகளை குழந்தைகள்நேய கழிப்பறைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் உயரத்திற்கு ஏற்ப, கைகளுக்கு எட்டும் வகையில் கைப்பிடியுடன் கூடிய கதவு, மாணாக்கர்களைக் கவரும் வண்ணச் சுவர்ச் சித்திரங்கள், கழிப்பறையைச் சுற்றியுள்ள வெளிப்புறங்களில் தோட்டம் அமைத்தல், கழிப்பறைகளைப் பயன்படுத்திய பின்னர் கை கழுவுவதற்கான குழந்தைகளின் உயரத்திற்கு ஏற்ற வகையிலான தொட்டி, கண்ணாடி, சிறிய துண்டு, சோப்பு மற்றும் குவளை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ரூ.59.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.25.2 பள்ளிகளில் கதை மையங்கள் மூலம் நற்பண்புகளை வலுப்படுத்துதல்

மாணாக்கர்களிடத்தில் கதைகள் கூறுதல் மற்றும் கதைகள் கேட்டல் மூலம் நற்பண்புகளை வலுப்படுத்துவதற்கு முன்னோட்டமாக 160 பள்ளிகளில் ரூ.121.75 இலட்சம் செலவில் கதை மையங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும் கதை கூறும் முறைகளும்,

உத்திகளும் அடங்கிய பயிற்சி 555 ஆசிரியர்களுக்கு விரைவில் வழங்கப்பட உள்ளது.

## 2.26 புத்தாக்க முயற்சிகள் 2017 - 18

### 2.26.1 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 3,000 திறன் வகுப்பறைகள் அமைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 3,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.60.00 கோடி செலவில் திறன் வகுப்பறைகள் ஏற்படுத்தப்பட உள்ளன. இவ்வகுப்பறைகள் அமைப்பதற்கு தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றது.

### 2.26.2 நாளிதழ் மற்றும் சிறுவர் மலர் வழங்குதல்

மாணாக்கர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், மொழித்திறனை வளப்படுத்தவும் அரசுப் பள்ளிகளில் நாளிதழ் மற்றும் சிறுவர் மலர்கள் விநியோகிக்கும் திட்டம் 2017-18 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 31,322 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### 2.26.3 திறனறி தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி

அரசு பள்ளிகளில், தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனறி தேர்வு (Tamil Nadu Rural Students Talent Search Examination), தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு

உதவித் தொகை திட்டத் தேர்வு (National Means – Cum – Merit Scholarship Examination), தேசிய அளவிலான திறனறித் தேர்வு (National Talent Search Examination), மத்திய அரசின் இளம் அறிவியல் அறிஞர் ஊக்கத் தொகை திட்டம் (Kishore Vaigyanik Protsahan Yojana) ஆகிய திறனறித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி இக்கல்வியாண்டு முதல் வழங்கப்படவுள்ளது. ரூ.2.93 கோடி செலவில் 7,219 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 3.75 இலட்சம் மாணாக்கர்கள் இதன் மூலம் பயன்பெறுவர்.

### 2.26.4 அரசுப் பள்ளிகளில் நடமாடும் புத்தகக் கண்காட்சி

மாணாக்கர்களின் படித்தல் திறனை மேம்படுத்தவும், பாடத்திட்டம் தாண்டிய பொது அறிவுத் தேடலை ஊக்குவிப்பதற்கும் புதிய புத்தக உலகத்திற்கு அவர்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் நடமாடும் புத்தகக் கண்காட்சி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதன் முறையாகப் புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் முழு ஒத்துழைப்புடன் சுழற்சி முறையில் அரசுப் பள்ளிகளில் நடமாடும் புத்தகக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 2.27 நிதி ஒதுக்கீடு

2018-19 ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கென ரூ.13,472.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 3. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 3.1 முன்னுரை

தமிழ்நாடு அரசு, இடைநிலைக் கல்வியின் அமைப்பு மற்றும் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாணாக்கர்களிடம் பொதுத்திறன்களின் வளர்ச்சியினை மேம்படுத்துவதிலும், சமூகம் சார்ந்த திறன்களை விதைப்பதிலும் இடைநிலைக் கல்வியின் நிகரில்லாத பங்கினை இந்த அரசு மிகச்சரியாக உணர்ந்துள்ளது. எனவே, தமிழகம் இதுவரை கண்டிராத அளவில் நிதி ஒதுக்கீட்டினைக் கல்வித்துறைக்கு ஒதுக்கித் தமிழகத்தில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் தரமான கல்வி ஒருங்கே கிடைக்கப்பெற கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இவ்வரசு சிறப்புடன் செயலாற்றி வருகிறது. தமிழகப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்கள், தமிழக அரசுக்கு பள்ளிக் கல்வித் துறையின் மீதுள்ள அக்கறைக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. மேலும், பள்ளிக் கல்வித் துறையானது, கற்றல் கற்பித்தல் செயல்முறைகளில், புதுமைகளைப் புகுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 3.2 இடைநிலைக் கல்வி தொலைநோக்கு

சமுதாயக் கோட்பாடுகள் மற்றும் உறவுகளை மேம்படுத்துவதில் உயரிய விழுமியங்களை அடித்தளமாகக் கொண்டு, அறிவாற்றல், சமூகம், உளவியல் மற்றும் உடலியல் சார்ந்த பண்புகளை மாணாக்கர்களிடம் தட்டி எழுப்பும் ஒரு கல்வி முறையே அரசின் இலக்காகும்.

அரசின் கல்விசார் நோக்கங்களையும், இலக்குகளையும் நடைமுறைப்படுத்த ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் துணை நிற்கிறது. கல்வியில், தரம் மற்றும் சரிநிகர் வாய்ப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம், வகுப்பறைகளின் சமூக கலாச்சாரச் சூழல், அறிவுநிலை, விழுமியங்கள் மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றில் மாற்றம் காணும் முயற்சியில் இவ்வியக்கம் மாநில அரசின் பள்ளிக்கல்வித் துறையோடு கைகோர்த்துப் பயணிக்கிறது.

**3.3 நோக்கங்கள்**

- அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் பாலினம் மற்றும் சமுதாய பொருளாதார தடைகளை கடந்து தரமான கல்வியை மாணாக்கர்களுக்கு அளித்தல்
- அனைத்து இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூறுவிழுக்காடு தக்கவைப்பை உறுதிசெய்தல்
- வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான மென்திறன்களையும், தொழில் திறன்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் கல்வித் தரத்தை உயர்த்துதல்
- கற்றலில் இனிமை மற்றும் செயலாக்கம் உள்ள கல்விக் காண அடிப்படை கட்டமைப்பு வசதிகளை இடைநிலை மற்றும் உயர்நிலை மாணாக்கர்களுக்கு உருவாக்குதல்

- கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள மாதிரிப் பள்ளிகள் மற்றும் பெண்கள் விடுதிகளின் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் சமூகத்தரம் மற்றும் சரிநிகர் பங்கேற்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் மாதிரிக் கல்வி நிறுவனங்களாக அவற்றை முன்னிறுத்துதல்

- அணுகல் இலக்கினை அடைய இலவசப் போக்குவரத்து மற்றும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு நிகரில்லா நலத்திட்ட உதவிகள் மற்றும் புலன்களால் உணரத்தக்கக் கல்வி கிடைக்கப் பெறுதலை உறுதி செய்தல்.

- மாணாக்கர்களின் கல்வி, கல்விசார் மற்றும் கல்வி சாராத் திறன்களை முழுமையாக வெளிக்கொணர்தல்

- மாணாக்கர்கள், பள்ளி இடைநிலை மற்றும் மேனிலைத் தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி விழுக்காடுகளைப் பெறத் தேவையான சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளுதல்

- அறிவியல் திட்டங்கள், சுற்றுசூழல் மன்றங்கள் மற்றும் திட்டம்சார் கற்றல் ஆகியவற்றில் முனைப்புடன் பங்கேற்க ஊக்குவிப்பதன் மூலம்

மாணாக்கர்களின் அறிவியல் ஆர்வத்திற்கும் வேட்கைக்கும் புத்துயிர் அளித்தல்

- மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டு வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் மாணாக்கர்களின் உள்ளார்ந்த தடகள மற்றும் விளையாட்டுத் திறன்களை வெளிக்கொணர்தல் மற்றும் மேம்படுத்துதல்

- தரமான கல்வியை அன்றாட வகுப்பறைச் சூழலில் வழங்குவதற்குத் தேவையான தொடர் பயிற்சிப் பட்டறைகளை ஏற்படுத்திச் செயல் படுத்துவதன் மூலம் ஆசிரியர்களின் திறன்களைச் செம்மைப்படுத்துதல்
- விழிப்புணர்வுப் பரப்புரைகள் மற்றும் மருத்துவ முகாம்கள் மூலம் மாணாக்கர்களின் உடல் நலத்தை மேம்படுத்துதல்
- குறித்த கால அளவுகளில் மாணாக்கர்களுக்கு தொழில் சார்ந்த வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகள் கிடைக்கச் செய்தல்

### 3.4 பள்ளி வசதியை மேம்படுத்திட பள்ளிகளின் தரம் உயர்த்துதல்

இடைநிலைக் கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதே அரசின் முக்கிய இலக்காகும். ஒவ்வொரு 5 கிலோமீட்டர் சுற்றளவிற்குள்ளாகவும் ஒரு உயர்நிலைப் பள்ளி அமைவதனை உறுதிசெய்வதே அரசின் முதன்மை நோக்கம் ஆகும். இதற்கென இதுவரை உயர்நிலைப்பள்ளி

வசதி கிடைக்கப்பெறாத குடியிருப்புகளை பள்ளிப் புவியியல் தகவல் முறைமையின் மூலம் இனம் கண்டு, நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதன்மூலம் குழந்தைகள் பள்ளிகளை அணுகல் மேம்படுத்தப்படுகிறது.

இந்த இலக்கினை அடைய, 2011-12 முதல் மொத்தம் 979 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த 979 பள்ளிகளில், 571 பள்ளிகள் அனைவருக்கும் இடைநிலைக்கல்வித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமும், 408 பள்ளிகள் தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இதேபோன்று, இக்காலக்கட்டத்தில் 504 உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

**தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்**

| கல்வி ஆண்டு | நடுநிலைப்பள்ளியிலிருந்து உயர்நிலைப்பள்ளியாக | | உயர்நிலைப்பள்ளியிலிருந்து மேல்நிலைப்பள்ளியாக |
|---|---|---|---|
| | மாநில அரசு நிதி | அஇகதி* | மாநில அரசு நிதி |
| 2011-12 | 158 | 552 | 100 |
| 2012-13 | -- | -- | 100 |
| 2013-14 | 50 | -- | 100 |
| 2014-15 | 50 | -- | 101 |
| 2015-16 | -- | -- | 1 |
| 2016-17 | -- | 19 | -- |
| 2017-18 | 150 | --- | 102 |
| மொத்தம் | 408 | 571 | 504 |

*அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம்

### 3.5 உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கான தரநிலை

மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இடைநிலைக் கல்வியின் முன்னேற்றத்தை மதிப்பிட மற்றும் கண்காணிக்க தகுந்த கருவியாகத் திட்ட மதிப்பீட்டிற்கான வரைவு ஆவணத்தை' (RFD) முன்னிறுத்துகிறது. RFD பின்வரும் செயல்திறன் குறியீடுகளை உள்ளடக்கியது.

### 3.5.1 சேர்க்கை

இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி நிலையில் பள்ளிச் சேர்க்கையானது வயது வேறுபாடின்றிச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 3.5.2 மொத்தச் சேர்க்கை விகிதம்

இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி நிலைகளில் பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையினை அவர்களின் வயது நிலையில் உள்ள மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிட்டுச் சேர்க்கை விகிதத்தினை அறிய உதவுகிறது.

மொத்தச் சேக்கை விகிதம் =

$$\frac{\text{குறித்த நிலையில் சேர்க்கை}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய மக்கள் தொகை}} \times 100$$

### 3.5.3 பாலினச் சமநிலைக்குறியீடு

இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி நிலைகளில் பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையினை, மாணவிகளின் எண்ணிக்கையோடு ஒப்பீடு செய்து, பாலின வாரியாகச் சேர்க்கை விகிதத்தினை அறிய இக்குறியீடு பயன்படுகிறது.

$$\text{பாலினச் சமநிலைக்குறியீடு} = \frac{\text{மாணவியர் சேர்க்கை எண்ணிக்கை}}{\text{மாணவர் சேர்க்கை எண்ணிக்கை}}$$

### 3.5.4 பாலினச் சமத்துவக் குறியீடு

பள்ளிச் சேர்க்கையில் பாலினச் சமத்துவத்தினை அறிய இக்குறியீடு வழிகாட்டுகிறது.

$$\text{பாலினச் சமத்துவக் குறியீடு} = \frac{\text{குறித்த நிலையில் பெண்களின் சேர்க்கை பங்கு}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு}}$$

### 3.5.5 சமூக சமத்துவக் குறியீடு

சமூக சமுத்துவம் என்பது குறிப்பிட்ட சமுதாயத்தினர் அல்லது தனிப்பட்ட குழுவிலுள்ள அனைவருக்குமான சமூக உரிமைகள், பேச்சுரிமை, சொத்துரிமை, மேலும் சமூகப் பொருள்களையும் சேவைகளையும் சமமாகப் பெறுவதனைக் குறிக்கும். சமூகப் பிரிவுகளில் இத்தகைய சமத்துவத்தைப் பெறாத மக்களையும் கல்வி சென்று சேர வேண்டும் என்பதே இக்குறியீடு காட்டுகிறது.

சமூக சமத்துவ குறியீடு - பட்டியல் இனப்பிரிவினர் =

$$\frac{\text{சேர்க்கையில் பட்டியல் இனப்பிரிவினரின் பங்கு}}{14-15 \text{ வயதுடைய பட்டியல் இனப்பிரிவினரின் பங்கு}}$$

சமூக சமத்துவ குறியீடு - பட்டியல் இனப்பிரிவினர் =

$$\frac{\text{சேர்க்கையில் பழங்குடியினரின் பங்கு}}{14-15 \text{ வயதுடைய பழங்குடியினரின் பங்கு}}$$

### 3.5.6 இடைநிலைக்கல்வி அடைவு விகிதம்

நம் கல்வி முறையின் உள்ளார்ந்த ஆற்றல் மேம்பாட்டை வெளிக்காட்டும் அளவுகோலாக இக்குறியீடு திகழ்கிறது.

இடைநிலைக்கல்வி அடைவு விகிதம் =

$$\frac{\text{10 ஆம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணாக்கர்கள் எண்ணிக்கை}}{\text{முந்தைய ஆண்டில் 9 ஆம் வகுப்பில் சேர்ந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை}}$$

இந்தச் செயல்திறன் குறியீடுகள் சார்ந்து மாநிலத்தின் முன்னேற்றமானது கீழ்க்காணும் அட்டவணையில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.5.7 குறியீடுகள் (இடைநிலை)

| குறியீடு | 2017-18 |
|---|---|
| சேர்க்கை | 22,54,862 |
| சேர்க்கை – மாணவியர் | 11,09,448 |
| சேர்க்கை - பட்டியல் இனத்தினர் | 5,40,280 |
| சேர்க்கை – பழங்குடியினர் | 24,997 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் | 92.78 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - மாணவியர் | 94.14 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - பட்டியல் இனத்தினர் | 99.89 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - பழங்குடியினர் | 71.76 |
| பாலினச் சமநிலைக் குறியீடு | 1.06 |
| பாலினச் சமத்துவக் குறியீடு | 1.03 |
| பட்டியல் இனத்தோர் சமூக சமத்துவக் குறியீடு | 1.09 |
| பழங்குடியினர் சமூக சமத்துவக் குறியீடு | 0.90 |
| இடைநிலைக்கல்வி அடைவு விகிதம் | 98.58 |

### 3.5.8 குறியீடுகள் (மேல்நிலை)

| குறியீடு | 2017-18 |
|---|---|
| சேர்க்கை | 18,10,212 |
| சேர்க்கை – மாணவியர் | 9,58,412 |
| சேர்க்கை - பட்டியல் இனத்தினர் | 4,06,286 |
| சேர்க்கை – பழங்குடியினர் | 16,793 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் | 74.66 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - மாணவர் | 68.02 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - மாணவியர் | 81.74 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - பட்டியல் இனத்தினர் | 74.81 |
| மொத்தச் சேர்க்கை விகிதம் - பழங்குடியினர் | 50.83 |

### 3.5.9 இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதம்

மாநிலத்தில் செயற்படுத்தப்படும் மாணாக்கர் நலன் சார்ந்த விரிவான திட்டங்களின் விளைவாக, இடைநிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதம் பெருமளவில் குறைந்துள்ளதை கீழ்க்காண் அட்டவணை தெளிவு படுத்துகிறது.

**இடைநிற்றல் விகிதம்**

| கல்வி ஆண்டு | மாணவர் | மாணவியர் | சராசரி |
|---|---|---|---|
| 2011-12 | 11.07 | 11.34 | 11.21 |
| 2017-18 | 4.38 | 2.84 | 3.61 |

### 3.5.10 இடைநிலைக் கல்வியில் தக்கவைப்பு விகிதம்

புதுமையான கற்றல்/கற்பித்தல் திட்டங்கள் மற்றும் பிற கல்விசார் முனைப்புகள் ஆகியவற்றின் மூலம் பள்ளிகளின் செயல்திறனை ஊக்குவித்து நடைமுறைப்படுத்தியதன் விளைவாக இடைநிலைக் கல்வியில் தக்கவைப்பு விகிதமானது குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

**தக்கவைப்பு விகிதம்**

| கல்வி ஆண்டு | மாணவர் | மாணவியர் | சராசரி |
|---|---|---|---|
| 2011-12 | 88.99 | 88.60 | 88.75 |
| 2017-18 | 95.62 | 97.16 | 96.39 |

### 3.5.11 மாற்றல் விகிதம்

பள்ளிக் கல்வியின் உயர்நிலையில் புதிதாக உள்நுழையும் மாணாக்கர்களின் எண்ணிக்கையினை, அதற்கு முந்தைய நிலையில் பயின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கையுடன் கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுடன் ஒப்பிட்டு கல்வி நிலைசார் மாற்றல் விகிதத்தினை இக்குறியீடு உணர்த்துகிறது.

**மாற்றல் விகிதம்**

| கல்வி ஆண்டு | இடைநிலை (8ஆம் வகுப்பிலிருந்து 9ஆம் வகுப்பு வரை) | | | மேல்நிலை (10ஆம் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு வரை) | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாண வியர் | சராசரி | மாணவர் | மாண வியர் | சராசரி |
| 2017-18 | 95.62 | 97.16 | 96.39 | 77.60 | 88.90 | 83.17 |

### 3.5.12 மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம்

பள்ளிகளில் இடைநிலைக் கல்வி பயிலும் மாணாக்கர்களின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கோடு முன்னெப்போதும் இல்லாத அளவில் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன. அதன் விளைவாகத் தமிழ் நாட்டில் இடைநிலைக் கல்வியில் தற்போதைய மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம் 26:1 ஆகும். இது மத்திய அரசின் மாணவர் ஆசிரியர் விகிதாச்சார நிர்ணயமான 40:1 ஐ விட சிறந்ததாகும். இவ்விகிதாச்சாரம் மாநில அளவில் இடைநிலைக் கல்வித் தரத்தை உயர்த்த உதவியுள்ளது.

## 3.6 கல்வித் தர மேம்பாட்டு முனைப்புகள்

### 3.6.1 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர் நியமனம்

பள்ளிக் கல்வித்துறையில் போதிய எண்ணிக்கையில் தகுதியான பாடவாரி ஆசிரியர்களையும், ஆசிரியரல்லாப் பணியாளர்களையும் நியமிப்பதற்குத் தமிழக அரசு முன்னுரிமை அளிக்கிறது. பள்ளிக்கல்வித் துறையில் அவ்வப்போது எழும் காலிப்பணியிடங்கள் கண்டறியப்பட்டு, எவ்விதச் சுணக்கமுமின்றி அவற்றை உடனுக்குடன் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசின் தொடர் முயற்சிகளின் காரணமாக, 2017-18 ஆம் ஆண்டிலும் கீழ்க்காண் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையில் பணி நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

| வ. எண் | பதவி | பணி நியமன முறை | நிரப்பப்பட்ட பணியிடங்களின் |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் (நேரடி | தமிழ்நாடு அரசுப் பணியாளர் | 40 |
| 2 | உதவியாளர் | பதவி உயர்வு | 54 |
| 3 | இளநிலை உதவியாளர் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் | 203 |
| 4 | தட்டச்சர் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் | 125 |
| 5 | பட்டதாரி ஆசிரியர் (தமிழ் | ஆசிரியர் தேர்வு வாரியம் | 197 |
| 6 | பட்டதாரி ஆசிரியர் | ஆசிரியர் தேர்வு வாரியம் | 8 |
| 7 | சிறப்பு பயிற்சி பட்டதாரி | ஆசிரியர் தேர்வு வாரியம் | 59 |
| 8 | முதுகலை ஆசிரியர் | ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் | 1,574 |

### 3.6.2 பயிற்சி

### 3.6.2.1 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி

ஆசிரியர்களின் கற்பித்தல் மற்றும் உளவியல் சார் வழிகாட்டுதல் திறன்களைச் செம்மைப்படுத்தும் நோக்கில் பணியிடைப் பயிற்சியானது இரண்டு நிலைகளில் தனித்தனியாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### நிலை 1

முதல்நிலைப் பயிற்சியானது பாடம் சார் கற்றல்/கற்பித்தல் நோக்கங்களை மையமாகக் கொண்டது.

- கற்றல்/கற்பித்தலில் முன்னெடுக்கப்படும் நவீனத் தொழிநுட்ப உத்திகளை ஆசிரியர்களிடம் அறிமுகப்படுத்துதல்
- பாடம்சார் கருத்துப்புரிதலை மேம்படுத்தி, அன்றாடப் பாடப்பிரிவுகளுக்கான, கற்பித்தலை எளிமைப்படுத்தும் கருத்து வரைபடங்களை ஆசிரியர்கள் தாங்களாகவே தயாரிக்கும் உத்திகளை அறிமுகம் செய்தல்
- வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலை வளப்படுத்த, வலைத்தளங்களில் பெருகியிருக்கும் பாடவாரி மின்னணு வளங்கள் குறித்த புரிதலை ஏற்படுத்தி, அவற்றின் அன்றாட பயன்பாடு குறித்த நடைமுறைகளைக் கற்பித்தல்

நிலை 2

ஆசிரியர் பணியிடைப் பயிற்சியின் இரண்டாம்நிலை, பின்வரும் நோக்கங்களைக் மையமாகக் கொண்டு ஐந்து நாள் நடைபெற்றது.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி – ஆசிரியர்களின் கணினிசார் திறன்மேம்பாடு குறித்த பயிற்சியானது வழங்கப்படுகிறது
- மாற்றுத்திறன் கொண்ட மாணாக்கர்களுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய இடைநிலைக் கல்வித்திட்டம்– மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப கற்பித்தல் உத்திகள் மற்றும்

உளவியல் வழிகாட்டுத் திறன்களை ஆசிரியர்கள் அடைய உதவுவதன் மூலம், அக்குழந்தைகளுக்கு ஏற்ற கற்றல் சூழல் அன்றாட வகுப்பறைகளில் நிலவுதலை உறுதிசெய்தல்

- பாலினச்சமன்பாடு – பள்ளிகளில் பாலினச் சார்பற்ற வகுப்பறைகளை உருவாக்குதல் மற்றும் அன்றாட வகுப்பறைச் செயல்பாடுகளில் பாலினச் சமத்துவத்தை மேம்படுத்துதல்

2017-18 ஆம் ஆண்டில், 37,360 பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.1,128.90 இலட்சம் செலவில், இப்பயிற்சியானது சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

### 3.6.2.2 பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சி - தலைமை ஆசிரியர்களுக்கான பயிற்சி

பள்ளித் தலைமை ஆசிரியர்களிடையே தலைமைப் பண்புகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஒவ்வோராண்டும் பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுப் பயிற்சிக்கு அரசு ஏற்பாடு செய்கிறது. 2017-18 ஆம் ஆண்டில் 250 பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.12 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாகப் பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை குறித்த சிறப்புப் பயிற்சி ஒன்றினைத் தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகம் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தியுள்ளது. கொடைக்கானல் அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற ஒரு மாத சான்றிதழ் பயிற்சியில்

15 தலைமை ஆசிரியர்கள் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர்.

### 3.6.2.3 பள்ளி மேலாண்மை வளர்ச்சிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி

அரசுப் பள்ளிகளின் அன்றாடச் செயல்பாடு மற்றும் வளர்ச்சியில் சமூகப் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்கில், பள்ளி மேலாண்மை வளர்ச்சிக்குழு உறுப்பினர்களுக்கு ஒவ்வோராண்டும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் 29,540 பேருக்கு ஒரு நாள் பயிற்சியானது அனைத்து மாவட்டங்களிலுள்ள ஒன்றியங்களில் ரூ.88.62 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது. பள்ளியின் நீண்டகால வளர்ச்சி இலக்குகளை மையப்படுத்திய, வளர்ச்சித்திட்ட வரைவு தயாரித்தல் மற்றும் குறுகிய கால அடிப்படை வளர்ச்சி சார்ந்த திட்டமிடுதல் ஆகியன இப்பயிற்சியின் முக்கியமான கருப்பொருள்கள் ஆகும்.

### 3.6.2.4 நிருவாக அலுவலர்களுக்கான பயிற்சி

நிருவாக அலுவலர்களுக்கான ஒரு வாரப் பயிற்சியானது, அனைவருக்கும் இடைநிலை கல்வி ஆண்டுத் திட்டத்தின் ஒருங்கிணைந்த அங்கமாகும். 2017-18 ஆம் ஆண்டு, மதுரை பில்லர் மையத்தில் ஐந்து நாள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 149 மாநில மற்றும் மாவட்ட நிருவாக அலுவலர்கள் பங்கு பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

இப்பயிற்சியானது, நிருவாக அலுவலர்களுக்குப் புத்தாக்கத்திற்கான ஒரு வாய்ப்பாகவும், கல்விசார் விவாதங்களுக்கான பயனுள்ள தளமாகவும் அமைந்தது. இப்பயிற்சியில் கல்வி, வளரிளம் பருவ உளவியல், தனிமனித மற்றும் சமூகநலம் பேணுதல் முதலிய முக்கியத் தலைப்புகளில் வல்லுநர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

அப்பயிற்சியின் விவரம் வருமாறு:

| ஆண்டு | பயிற்சி | பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017-18 | பாட ஆசிரியர்களுக்கான பயிற்சி | 37,360 |
| | தலைமையாசிரியர்களுக்கான பயிற்சி | 250 |
| | பள்ளி மேலாண்மை வளர்ச்சி குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி | 29,540 |
| | நிருவாக அலுவலர்களுக்கான பயிற்சி | 149 |

### 3.6.2.5 தற்காப்புக்கலைப் பயிற்சி

பெண்களுக்கு ஆளுமைத்திறன் வளர்த்தல் நோக்கில் ஒரு முன்முயற்சியாக, தமிழகத்தில் கல்வியில் பின்தங்கியுள்ள 13 மாவட்டங்களில் 44 ஒன்றியங்களிலுள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்குத் தற்காப்புக் கலைப் பயிற்சித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. முதற்கண், மாநிலத்தில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேற்பட்ட பட்டியலின மற்றும்

பழங்குடியின பிரிவு மாணவியர்களின் எண்ணிக்கையைக் கொண்ட 242 பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பள்ளி ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் அனுபவமிக்கப் பெண் தற்காப்புக்கலைப் பயிற்சியாளர்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் இடைநிலை வகுப்புகளில் பயிலும் மாணவியருக்கு, கராத்தே, ஜூடோ மற்றும் டேக்வாண்டோ முதலிய தற்காப்புக் கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி வாரத்திற்கு இரு நாள் என, மூன்று மாதங்கள் வழங்கப்பட்டது. இதற்கென ரூ.21.78 இலட்சம் செலவிடப்பட்டது.

### 3.6.3 பள்ளிகளில் தகவல் மற்றும் தொலைத் தொடர்புத் தொழில்நுட்பம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 110 விதியின்கீழ் சட்டசபையில் அறிவித்ததற்கிணங்க, மாநிலத்தில் உள்ள 3,090 உயர்நிலை மற்றும் 2,939 மேல்நிலைப்பள்ளிகளில் அதிநவீன ஆய்வகக்கூடங்கள் நிறுவப்படும் என அறிவித்தார். இத்திட்டத்தைச் செயல்படுத்துதலுக்கான பணிகள் இறுதி நிலையை அடைந்துள்ளன. ரூ. 462.60 கோடி ரூபாய் செலவில், ஒளிப்பட வீழ்த்திகள், அச்சுப்பொறிகள், தடையில்லா மின் வழங்கி, இணைய நிழற்படக்கருவிகள் மற்றும் அதிவேக அலைவரிசை கொண்ட இணைய இணைப்பு ஆகிய வசதிகளை உள்ளடக்கிய அதிநவீன ஆய்வகக்கூடங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6.4 தேசிய அளவிலான கலைத்திறன் திருவிழா (கலா உத்சவ்)

மாணாக்கர்களின் கலைத்திறனை ஊக்குவிப்பதற்காக தேசிய அளவிலான "கலைத்திறன் திருவிழா" (கலாஉத்சவ்) ஒவ்வோராண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மாணாக்கர் திறனறிப் போட்டிகள் பள்ளி, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்படும் குழுக்கள், தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கின்றன. இந்நிகழ்வு மாநிலத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தைத் தேசிய அளவில் வெளிப்படுத்துவதற்கான ஓர் அரிய களமாக அமைகிறது. இக்கலைத்திறன் திருவிழா வாயிலாக நடனம், இசை, திரையரங்கு மற்றும் காட்சிக்கலைகளைப் புரிந்து கொள்ளவும், வெளிப்படுத்தவும் மாணாக்கர்கள் அறிந்துகொள்கிறார்கள்.

| வ. எண் | கலையின் பெயர் | பங்கேற்ற மாணாக்கர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மாவட்ட அளவில் | மாநில அளவில் |
| 1 | இசை | 1,793 | 171 |
| 2 | நடனம் | 2,143 | 196 |
| 3 | திரையரங்குக் கலை | 1,335 | 180 |
| 4 | காட்சிக் கலை | 1,206 | 86 |

2017-18 ஆம் ஆண்டில் தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் மற்றும்

திருவண்ணாமலை மாவட்டங்களைச் சார்ந்த குழுக்கள், போபாலில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்றதுடன், நாகப்பட்டினம் மாவட்ட மாணாக்கர்குழு இசைப்பிரிவில் தேசிய அளவில் இரண்டாமிடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளது. இந்த விருதானது வெள்ளி கோப்பை, வெள்ளி பதக்கம் மற்றும் ரூ.75000 ரொக்கப் பரிசு கொண்டதாகும். இத்திட்டத்திற்காக 2017-18 ஆம் ஆண்டில் ரூ.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.6.5 பள்ளிகளில் திறன் தேடல்

திறன்தேடல் என்பது சிறப்பான கல்வித் திறமை பெற்ற கிராமப்புற மாணாக்கர்களை அடையாளம் காணும் தமிழக அரசின் தனித்துவமான ஒரு திட்டமாகும். மாநிலம் முழுவதும், கல்வி மாவட்ட அளவில் 134 மையங்களில் இத்திட்டமானது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் கிராமப்புற மாணாக்கர்களின் கல்விசார் திறன்களை மேம்படுத்துதலின் வழியாக அவர்கள், அனைத்துவிதமான போட்டித் தேர்வுகளில் பங்கேற்க ஊக்குவிப்பதாகும். இந்த மையங்களில் போட்டித்தேர்வு முன்னேற்பாட்டு வகுப்புகள் வார இறுதி நாளிலும் மற்றும் காலாண்டு, அரையாண்டு விடுமுறை நாட்களிலும் நடத்தப்படுகின்றன.

மேலும், மாணாக்கர்கள் தங்களின் தனித்திறன் மற்றும் விருப்பம் சார்ந்து முறையான ஒரு தொழில் வழியைத் தெரிவுசெய்ய உதவும், வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு திட்டங்கள் இந்த மையங்களின் வழக்கமான செயல்பாடுகளின் ஓர் அங்கமாகிறது.

இப்பயிற்சி மையங்களின் மூலம் 10235 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்தின் விளைவாக, 6573 மாணாக்கர்கள் TRUST தேர்வில் பங்கேற்க ஊக்கப்படுத்தப்பட்டதோடு, அவர்களுள் 3387 மாணாக்கர்கள் TRUST உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். 2017-18 ஆம் ஆண்டில், இத்திட்டச் செயல்பாடுகளுக்கென ரூ.112 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 3.6.6 திறன் குறைந்த மாணாக்கர்களின் சாதனை அடைவு

திறன் குறைந்த மாணாக்கர்களின் சாதனை அடைவு என்பது கற்றல் அடைவுகளில் பின்தங்கியுள்ள மாணாக்கர்கள் அரசுப் பொதுத்தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டமாகும். இத்திட்டமானது, சிறப்புக் கவன ஈர்ப்பு மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஆய்வு நோக்கில் செயல்படுத்தப்பட்டது.

2017-18 ஆம் ஆண்டில், இத்திட்டப் பணிகளுக்கென ரூ.35.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 3.6.7 படைப்புசார் கற்றல் (IMPART)

படைப்புசார் கற்றல் என்பது இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்து, அவர்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்தும் சிறப்புத் திட்டமாகும். இத்திட்டமானது கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், நீலகிரி, பெரம்பலூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. இத்திட்டத்தில், படைப்புசார் கற்றல் நோக்கோடு, ஆசிரியர்களின் உதவியுடன், படைப்புகளை உருவாக்க மாணாக்கர் குழுக்கள் ஊக்கப்படுத்தப்பட்டன. சிறந்த படைப்புகள் மாவட்ட அறிவியல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. 2017-18 ஆம் ஆண்டில் இத்திட்டப்பணிகளுக்கு ரூ.32.20 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

### 3.6.8 பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு

பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீடு என்பது NUEPA முன்மொழியும் தரநிலைகளின் அடிப்படையில், தலைமையாசிரியர் பள்ளியின் நிலையை தன்மதிப்பீடு செய்து, பள்ளி முன்னேற்றத்திற்கான ஆண்டுவாரியான திட்டத்தினை வரையறுக்க வழிகோலுவதாகும். 2017-18 ஆம் ஆண்டில், இத்திட்டச் செயல்பாட்டிற்கான வழிகாட்டுதல் பயிற்சியானது, அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நடத்தப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 2017-18 இல் ரூ.32.20 இலட்சம் செலவில் மாநிலத்தின் 5,908 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலான பயிற்சிப் பணிமனை நடைபெற்றது.

### 3.6.9 தொழிற் கல்வி

இடைநிலை/மேல்நிலைக் கல்வியில் மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வி வழங்குதல் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டக்கூறுகளில் முதன்மையானதாகும். இதற்கென

ரூ.383.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 67 மேல்நிலைப் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, ஒரு நாள் வழிகாட்டுப் பயிற்சியானது 29.01.2018 அன்று நடைபெற்றது. இத்திட்டத்தினை மாநிலத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்த விரிவான ஒரு திட்ட வரைவு தயார் செய்து, திட்ட அமலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.6.10 அறிவியல் கண்காட்சி

மாணாக்கர்களிடையே அறிவியல் மனநிலையை வளர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்த பள்ளிக் கல்வித்துறை ஆர்வமாக உள்ளது. அறிவியல் கண்காட்சியானது விஞ்ஞானம், புதுமை மற்றும் படைப்பாற்றல் ஆகியவை சார்ந்த தங்கள் தேடலை வெளிப்படுத்த மாணாக்கர்களுக்குத் தேவைப்படும் சிறந்த ஒரு களமாக அமைகிறது. ஒவ்வோர் ஆண்டும் அறிவியல் கண்காட்சிகள் கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், "நீடித்த மேம்பாட்டிற்கான புதுமைகள்" என்ற தலைப்பில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி கரூர் மாவட்டத்தில் நடைபெற்றது. தெலுங்கானாவில் நடைபெற்ற தென்னிந்திய விஞ்ஞானக் கண்காட்சியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த படைப்புகள் காட்சிப்படுத்தப் பட்டன. இதேபோல், தென்னிந்திய அளவிலான சிறந்த படைப்புகள் புது டெல்லியில்

நடைபெறவிருக்கும் தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 3.6.11 அடல் டிங்கரிங் ஆய்வகம்

மாணாக்கர்களிடையே தகவமைப்புக் கற்றல், கணினியினைப் பயன்படுத்துதல், விரைவான கணக்கீடுகள் செய்தல் முதலிய அறிவியல் சார்ந்த திறன்கள், 3D அச்சுப்பொறிகள், மின்னணுக் கருவிகள் மற்றும் முன்மாதிரி உபகரணங்களைக் கொண்ட நவீன ஆய்வகங்களின் துணை கொண்டு வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். மாநிலத்தின் 44 பின்தங்கிய ஒன்றியங்களில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 44 அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் புதுமைக்கூறு நிதி உதவியுடன் நிறுவப்படவுள்ளன.

### 3.6.12 தொடு வானம்

தமிழ்நாடு முழுவதும், தேசிய அளவிலான போட்டிப் தேர்வுகளுக்கான 412 பயிற்சி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மையங்களில், கணினி, VSAT வலை, LCD ஒளிப்படவீழ்த்திகள், தடையில்லா மின்சாரம் ஆகிய நவீன உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக, அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்கள் அனைத்து விதமான போட்டித் தேர்வுகளையும் எதிர்கொண்டு எளிதில் வெற்றி பெற உதவும் விதமாக,

சிறந்த பாட வல்லுநர்களைக்கொண்டு வார இறுதி நாட்கள் மற்றும் பள்ளி விடுமுறை நாளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. SPEED அறக்கட்டளை, சைதன்யா கல்வி நிறுவனக் குழுமம் மற்றும் ALLEN முதலிய தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து ஆசிரியர்களின் திறன் மேம்பாடு மற்றும் மாணாக்கர்களைப் போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்துதல் என ஆக்கப்பூர்வ பணிகளைப் பள்ளிக் கல்வித்துறை மேற்கொள்கிறது. இம்மையங்களில், தமிழ் மற்றும் ஆங்கில வழியில் அனைத்துப் பாடங்களுக்கான கட்டகங்கள், மின்னணுப் பாடப்பொருள் கொண்ட மடிக்கணினிகள் மற்றும் இதர உதவிகள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.6.13 வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் மிகச்சிறப்பாக செயல்பட்ட 25 மாணாக்கர்கள் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்குத் தேர்வு செய்யப்பட்டார்கள். இக்குழுவானது அங்கு உள்ள கல்வி நிறுவனங்கள், அருங்காட்சியகங்கள், நூலகங்கள், அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதோடு, அந்நாட்டு அறிஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுடன் கலந்துரையாடி தங்களது அறிவாற்றலை வளர்த்துக் கொள்வார்கள். 2017-18 ஆம் ஆண்டில், இந்த புதுமையான நிகழ்வுக்கென ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.6.14 பெருந்தலைவர் காமராசர் விருது

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு, பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்பட உள்ளது. கலை, விளையாட்டு, அறிவியல் மற்றும் பாட இணைச் செயல்பாடுகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கக் கூடிய மாணாக்கர்கள் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்படுவார்கள். 32 மாவட்டங்களில், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் இருந்து வகுப்பிற்கு 15 மாணாக்கர்கள் என ஒவ்வொரு மாவட்டத்திற்கு 30 மாணாக்கர்கள் வீதம் மாநிலத்தில் மொத்தம் 960 மாணாக்கர்கள் தேர்வுசெய்யப்பட்டு இவ்விருது வழங்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.145.30 இலட்சம் ஆகும்.

### 3.6.15 கனவு ஆசிரியர் விருது

தமிழகத்தின் அனைத்துவகை அரசுப் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்குக் 'கனவு ஆசிரியர் விருது' வழங்கப்பட உள்ளது. பள்ளிகளில் கணினி வசதிகளுடன் பாடங்களைக் கையாளும் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பள்ளியின் நலன்களுக்காக சமூக உறுப்பினர்களோடு ஒருங்கிணைந்து செயல்படுகின்ற ஆசிரியர்கள், மாணாக்கர் சேர்க்கையினை அதிகப்படுத்துதல் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கக் கூடிய ஆசிரியர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் 192

ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழுடன் ரூ.10,000 ரொக்க பரிசும் கூடிய இந்த விருது வழங்கப்படும்.

### 3.6.16 புதுமைப் பள்ளி விருது

மாணாக்கர் சேர்க்கையினை மேம்படுத்துதல், கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல், பரிந்துரைக்கப்பட்ட உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவு செய்தல், பள்ளி மேலாண்மை வளர்ச்சிக்குழு மற்றும் பெற்றோருடன் இணைந்து செயல்படுதல் எனச் சிறந்து விளங்கக்கூடிய பள்ளிகளுக்குப் "புதுமைப்பள்ளி" விருது வழங்கப்பட உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு தொடக்கப்பள்ளி, ஒரு நடுநிலைப்பள்ளி, ஒரு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஒரு மேல்நிலைப் பள்ளி என நான்கு அரசு பள்ளிகள் வீதம் ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாய் மற்றும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் பரிசுத் தொகை இரண்டு இலட்சம் ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு மொத்தம் 128 பள்ளிகள் தேர்வு செய்யப்படும். இப்பரிசுத் தொகையானது பள்ளியினை மேலும் வலுப்படுத்தி ஒரு மாதிரி பள்ளியாக உருமாற்ற வழிவகை செய்யும். இதற்காக ரூ.192 இலட்சம் 2017-18 ஆம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.6.17 திறமையை வெளிகொணரும் சுற்றுலா

மாணாக்கர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதோடு அவர்களுக்குக் கள அனுபவத்தை

வழங்கும் நோக்கில் தமிழக அரசால் மாணாக்கர்களுக்கு ஒவ்வோராண்டும் கல்விச் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அனைவருக்கும் இடைநிலைக்கல்வித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினால் 2017-18 ஆம் ஆண்டில் 67 கல்வி மாவட்டங்களில் உள்ள 6,700 மாணாக்கர்கள் கேரளாவில் தும்பாவில் உள்ள "விக்ரம் சாராபாய் வானியல் ஆய்வு மையத்திற்கு" அழைத்துச் செல்லப்பட்டுப் பயனடைந்துள்ளார்கள். இப்பயணம் மாணாக்கர்கள் விண்வெளி அறிவைக் கற்றுக் கொள்ளவும், உணர்வுபூர்வமான மற்றும் அறிவார்ந்த உள்ளீடுகள் மூலம் வலுப்பெறவும் உதவியது. மேலும், இப்பயணமானது அண்டை மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் மரபுகளை வெளிப்படுத்த மாணாக்கர்களுக்கு உதவியது. இத்திட்டப் பணிக்கென 2017-18 ஆம் ஆண்டில் ரூ.134 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 3.6.18 மாநில அளவிலான அரசுப் பொதுத் தேர்வு சீரமைத்தல்

அனைத்து விதமான போட்டித் தேர்வுகளிலும் மாணாக்கர்கள் சிறந்து விளங்குவதற்கு ஏதுவாக மேல்நிலைப் பொதுத் தேர்வில் 2017-18 ஆம் கல்வியாண்டு முதல் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு:

- மேல்நிலை முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு மாநில அளவில் அரசுப் பொதுத் தேர்வுகள் அறிமுகம்
- மேல்நிலை முதலாம் ஆண்டும், இரண்டாம் ஆண்டும் என இரண்டு ஆண்டுகளுக்கும் சமமான முக்கியத்துவம் வழங்கப்பட்டு 1200 மதிப்பெண்கள் வழங்குதல்
- மேல்நிலை முதலாம் ஆண்டுப் பொதுத் தேர்வில் பாடங்கள் சிலவற்றில் தோல்வியுறும் மாணாக்கர்கள் ஆண்டு விரையமின்றி இரண்டாம் ஆண்டிற்குச் சென்று, தோல்வியுற்ற பாடங்களை உடனடித் தேர்வு ஜூன்/ ஜூலை மாதத்திலோ அல்லது இரண்டாம் ஆண்டுத் தேர்விலோ சேர்த்து எழுத வழிவகை செய்தல்
- அனைத்துப் பாடங்களிலும் அகமதிப்பீட்டிற்கென 10 மதிப்பெண்கள் அளித்தல்
- பொதுத்தேர்வின் கால அளவை 3 மணியிலிருந்து 2 மணி 30 நிமிடங்களாகக் குறைத்தல்
- மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுத் தேர்வுகளுக்கான ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்

### 3.6.19 நன்னெறிக் கல்வி

பள்ளிகளில் நன்னெறிக் கல்வியைக் கற்பித்து மாணாக்கர்களின் நல்லொழுக்கத்தை மேம்படுத்துதல்

வேண்டும். அதற்கெனத் திருக்குறளில் உள்ள அறத்துப்பால் மற்றும் பொருட்பாலிலிருந்து 1050 குறட்பாக்களைத் தேர்வு செய்து 6 வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரைக்குமான புதிய பாடத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. வகுப்பு தோறும் 150 குறட்பாக்களை முழுமையாக உணர்ந்து கற்பதனால், இவ்வகுப்பு மாணாக்கர்கள் திருக்குறள் அறநெறிகளால் வாழ்க்கையில் பெரும் பயனடைவார்கள்.

### 3.7 உட்கட்டமைப்பு

கூடுதல் வகுப்பறைகள், தளவாடங்கள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், குடிநீர்வசதி மற்றும் சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைத் தேவைக்கேற்ப அரசுப் பள்ளிகளுக்கு, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி மற்றும் நபார்டு நிதி உதவியின் மூலம் அரசு வழங்குகிறது.

#### 3.7.1 அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகள்

தற்போதுள்ள அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவது அனைவருக்கும் இடைநிலைக் கல்வி முதன்மைத் திட்டக்கூறுகளில் ஒன்றாகும். அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அனைத்து அரசுப்பள்ளிகளிலும் நிறுவுதலே இதன் முக்கியமான இலக்காகும். அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் இதுவரை

பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலையினைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது:

| வ. எண் | இனம் | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | புதிய பள்ளிகள் 2016-17 | 19 | 24.85 |
| 2 | பள்ளியின் உட்கட்டமைப்பு பலப்படுத்துதல் 2016-17 | 54 | 45.34 |
| 3 | பள்ளியின் உட்கட்டமைப்பு பலப்படுத்துதல் 2017-18 | 36 | 39.01 |

### 3.7.2 நபார்டு நிதியுதவியின் கீழ் கட்டுமானப் பணிகள்

தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துவதற்குப் பெருமளவிலான பொருள் உதவியை நபார்டுவங்கி வழங்குகிறது. தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் நபார்டுத் திட்டக் கட்டுமான பணிகளின் பிரிவு நிலையினைப் பின்வரும் அட்டவணை விவரிக்கிறது:

## நபார்டு நிதியுதவியின் கீழ் கட்டுமானப் பணிகள்

| வ. எண் | திட்ட எண் மற்றும் ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | RIDF XVIII (**கட்டம்** XI) (2012-13) | 131 | 16,401.55 |
| 2 | RIDF XIX (**கட்டம்** XII) (2014-15) | 210 | 24,930.60 |
| 3 | RIDF XX (**கட்டம்** XIII) (2014-15) | 155 | 20,870.97 |
| 4 | RIDF XX (**கட்டம்** XIII) T&DW (2015-16) | 416 | 4,157.96 |
| 5 | RIDF XXI (**கட்டம்** XIV) (2015-16) | 228 | 35,557.27 |
| 6 | RIDF XXII (**கட்டம்** XV) (2016-17) | 149 | 24,000.19 |
| | **மொத்தம்** | 1,289 | 1,25,918.54 |

### 3.8 சமூகச் சமத்துவக் குறுக்கீடுகள்

#### 3.8.1 மாதிரிப் பள்ளிகள்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வியின் மூலமாக கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில், இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் கல்வி அடைவினை மேம்படுத்தும் வகையிலும் 44 மாதிரிப்பள்ளிகள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பள்ளிகளில் அகலமான வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள்,

கூட்ட அரங்குகள், நூலகம் ஆண், பெண் இருபாலருக்குமான தனித்தனி நவீன கழிவறைகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்றவைகள் உள்ளடக்கிய மிகச் சிறந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய மாதிரிப்பள்ளிகள் மிகச் சிறந்த செயல்திறன் கொண்ட பள்ளிகளாக மாறிவருவதால், ஒவ்வோர் ஆண்டும் இப்பள்ளிகளில் சேர்வதற்கான ஆர்வம் அதிகரித்து வருவதால், இடம் கிடைப்பதே அரிது என்ற நிலையை எட்டியுள்ளது. இப்பள்ளிகளில் 560 மாணாக்கர்களும் 17 ஆசிரியர்களும் 7 ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் உள்ளனர். 2017-18 ஆம் கல்வியாண்டில், இந்த 44 மாதிரிப்பள்ளிகளிலும் 10,190 மாணவர்களும் 9,014 மாணவியர்களும் ஆக மொத்தம் 19,204 மாணாக்கர் பயின்று வருவது குறிப்பிடத்தக்கது.

### 3.8.2 தேசியத் திறன் மற்றும் வருவாய் உதவித்தொகை

தேசியத் திறன் மற்றும் வருவாய் உதவித் தொகைத் திட்டமானது பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள, தகுதிவாய்ந்த மாணாக்கர்களுக்கு இடைநிலைப் படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் உதவித்தொகை வழங்குவதற்கான இந்திய அரசின் முன்னோடித் திட்டமாகும். அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில், 8 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 55% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியுறும் மாணாக்கர்கள், மாநில அரசு நடத்தும் தகுதித்தேர்வின் மூலம் இவ்வுதவித்தொகைக்குத் தேர்வு செய்யப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு, 9 ஆம் வகுப்பு

முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு முறையே ரூ.6,000/- வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது காலாண்டு அடிப்படையில் நேரடியாகப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில், 6,247 மாணாக்கர்கள் தேசியத் திறன் மற்றும் வருவாய் தேர்வில் பங்கேற்றனர்.

### 3.8.3 பெண்கள் ஊக்கத்தொகைக்கான தேசியத் திட்டம்

பெண்கள் ஊக்கத்தொகைக்கான தேசியத் திட்டமானது இடைநிலைக் கல்வியில் பயிலும் மாணவியர்களின் தக்கவைத்தல் விகிதத்தை உயர்த்தும் நோக்கில் 2008-09 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட தேசிய அளவிலான திட்டம் ஆகும். அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 9 ஆம் வகுப்புப் பயிலும் தகுதியுள்ள மாணவியர் இந்தத் திட்டத்தின் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாணவியரின் பெயரில் ரூ. 3,000/- வைப்பு நிதியாக வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. பயனாளிகள் தங்களது 18 ஆம் அகவையினை நிறைவுசெய்யும்போது, மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறும் போதும் இந்தத் தொகையினை வட்டியோடு சேர்த்து வங்கிக் கணக்கிலிருந்து மீளப்பெற்றுக் கொள்ளலாம். தமிழகப் பள்ளிகளிலிருந்து, 2017-18 ஆம் ஆண்டில், உதவித்தொகைக்குத் தகுதிவாய்ந்த 82,378

விண்ணப்பங்கள், தேசிய உதவித்தொகை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 3.8.4 மாணவியர் விடுதி

இடைநிலைக் கல்வியில், இரு பாலருக்கும் இடையே நிலவும் சேர்க்கைச் சதவிகித வேறுபாட்டைக் களையவும், கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் பெண் கல்வியினை ஊக்கப்படுத்தவும், கல்வியில் பின்தங்கிய ஒன்றியம் ஒவ்வொன்றிலும் 100 படுக்கை வசதி கொண்ட மாணவியர் விடுதிகள், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்ட நிதிஒதுக்கீட்டின் மூலம் நிறுவப்பட்டு சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன. 9 முதல் 12 ஆம் வகுப்புகள் வரை பயிலும் 14 முதல் 18 வயதிற்கு உட்பட்ட அரசுப் பள்ளி மாணவியர், அதிலும் குறிப்பாக, பட்டியல் இன மற்றும் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சார்ந்த மாணவியர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் பயனடைய வழிகோலுவதே இத்திட்டத்தின் இலக்காகும். இந்த விடுதிகளில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா பள்ளிகளில் பயின்ற மாணவியருக்குச் சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில், 44 மாணவியர் விடுதிகளில் 3950 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான மொத்தம் 891.88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சமூகவாரியாகப் பயனடைந்த பயனாளிகளின் விவரங்கள் கீழேபட்டியலிடப்பட்டுள்ளன:

| மாணவியர் விடுதிகள் | பயனடைந்த மாணவியர் எண்ணிக்கை | | | | | | KGBV-யிலிருந்து பயனடைந்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பட்டியல் இனத்தவர் | பழங்குடியினர் | இஸ்லாமியர் | கிறஸ்தவர் | சிறப்பு கவனம் தேவைப்படுபவர்க | |
| 44 | 3,950 | 1,055 | 500 | 10 | 15 | 35 | 687 |
| சதவீதம் | | 26.71 | 12.66 | 0.25 | 0.38 | 0.89 | 17.39 |

### 3.8.5 மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளடக்கிய இடை நிலைக்கல்வி

மாற்றுத்திறனாளிகளுக்கான உள்ளடக்கிய இடைநிலைக் கல்வியானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுள், உடற்குறைபாடு உடையோருக்கான சட்டம் (1995) மற்றும் தேசிய அறக்கட்டளைச் சட்டம் (1999)-இன் படி, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகளைக் கொண்ட அனைத்து மாணாக்கர்களுக்கும் பொதுவானதாகும். இடைநிலைக் கல்வியில், மாற்றுத்திறன் கொண்ட மாணாக்கர்களின் பங்களிப்பை மேம்படுத்த, பின்வரும் சிறப்புத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன:

- சிறப்பு ஆசிரியர்கள் பணிநியமனம்
- மாற்றுத்திறன்மாணவியருக்கான ஊக்கத்தொகை
- மருத்துவ முகாம்கள்
- புத்தாக்கம் மற்றும் சூழல் கட்டமைப்பு முகாம்கள்
- திறன்சார் உதவி உபகரணங்கள் வழங்குதல்
- பாதுகாவலர் மற்றும் போக்குவரத்து படி
- உதவியாளர் படி
- வாசிப்பு உதவியாளர் படி
- சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான தனித்துவமான வளமையம்

2017-18 ஆம் ஆண்டில், 6,972 மாற்றுத்திறன் மாணவியருக்கு 139.44 இலட்சம் செலவில் கல்வி ஊக்கத் தொகையானது வழங்கப்பட்டுள்ளது. 1181.53 இலட்சம் ரூபாய் 2017-18 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட, மேற்குறிப்பிடப் பட்டுள்ள ஆக்கபூர்வ செயல்பாடுகள் மூலம், 14,469 மாற்றுத்திறன் கொண்ட மாணாக்கர்கள் பயனடைந்து உள்ளார்கள்.

| மாற்றுத் திறன் வகை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| பார்வையின்மை | 443 | 367 | 810 |
| குறை பார்வை | 1,402 | 1,642 | 3,044 |
| செவித்திறன் குறைபாடு | 1,184 | 1,112 | 2,296 |
| இயக்கக் குறைபாடு | 1,888 | 1,430 | 3,318 |

| மாற்றுத் திறன் வகை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| மனவளர்ச்சியின்மை | 2,111 | 1,351 | 3,462 |
| பல்வகைக் குறைபாடு | 177 | 203 | 380 |
| மன இறுக்கம் | 22 | 16 | 38 |
| பெருமூளை வாதம் | 189 | 147 | 336 |
| பேச்சுக் குறைபாடு | 509 | 276 | 785 |
| **மொத்தம்** | 7,925 | 6,544 | 14,469 |
| **சதவீதம்** | 54.77 | 45.23 | |

## 3.9 கல்வி இணைச் செயல்பாடுகள்

### 3.9.1 மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகள்

குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வோராண்டும் பள்ளிக் கல்வித் துறையில் 26 விளையாட்டு பிரிவுகளில் 11 முதல் 17 வயதிற்குட்பட்ட 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணாக்கர்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. தேசியப் பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பின்கீழ், ஒவ்வோராண்டும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2017-18 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான போட்டிகளில் 77 தங்கம், 58 வெள்ளி மற்றும் 69 வெண்கலப் பதக்கங்களுடன் தமிழகம் தரவரிசையில் 6ஆம் இடம் பெற்றுள்ளது. வெவ்வேறு நிலைகளில் போட்டிகளை நடத்திட ஒவ்வோராண்டும் தொடரும் செலவினமாக அரசு ரூ.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்கிறது.

### 3.9.2 சதுரங்க விளையாட்டு

இந்தியாவில் சதுரங்க விளையாட்டினை மாணாக்கர்களிடையே ஊக்கப்படுத்தி, வளர்ப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சதுரங்க விளையாட்டில் மாணாக்கர்களின் திறனை மேம்படுத்துவதற்காக சதுரங்க விளையாட்டு அரசுப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளி அளவில் 7 முதல் 17 வயதுவரை உள்ள மாணாக்கர்களுக்குச் சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2017-18 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில அளவிலான சதுரங்கப் போட்டிகளில் 24 மாணாக்கர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். 2017-18 ஆம் ஆண்டில், பல்வேறு நிலைகளில் இப்போட்டிகளை நடத்த ஏதுவாகத் தொடர் செலவினமாக ரூ.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.9.3 யோகா

யோகா என்பது மனம், உடல் மற்றும் ஆன்மா ஆகியவற்றின் சங்கமமாகத் திகழ்வதோடு குழந்தைகளின் கற்றல் வெளிபாடுகளில் முன்னேற்றம் காண வழிவகுக்கிறது. யோகா பள்ளிகளின் அன்றாடச் செயல்களில் ஒன்றாக மாறிவிட்டது. 2017-18 ஆம் கல்வியாண்டு முதல் யோகா பயிற்சிகள் பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

### 3.9.4 நாட்டு நலப்பணித் திட்டம்

சுகாதார முகாம்கள், இரத்ததான முகாம்கள் மற்றும் விழிப்புணர்வுப் பேரணிகள் முதலிய சமூக சேவைத் திட்டங்களில் தன்னார்வ நோக்கோடு பணியாற்ற மாணாக்கர்களை ஊக்குவிப்பதன்மூலம் மாணாக்கர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடுவதனை நாட்டு நலப்பணித் திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இயங்கும் 1,953 நாட்டு நலப்பணி திட்ட அலகுகளில், 97,650 மாணவ மாணவியர் தன்னார்வ நோக்கோடு செயலாற்றி வருகின்றனர். ஒவ்வோராண்டும் இந்தத் திட்டத்தின் தொடர் செயல்பாடுகளுக்கென ரூ.244 இலட்சமும், சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூ.219 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில், வட்டார அளவில் 1,953 அதிகாரிகளுக்கு புத்தாக்கப் பயிற்சி ஒரு நாள் முகாம் நடத்தப்பட்டது.

### 3.9.5 சாரண சாரணியர் இயக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் சாரண சாரணியர் இயக்கம் செயல்பட்டு வருகின்றது. சாரணர் பணிகளாக முக்கியமான இடங்கள் மற்றும் தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தல், மரங்களை நடுதல், பொது சுகாதாரம் மற்றும் உடல்நலம் பற்றிய விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்துதல், அவ்வப்போது ஏற்படும் போக்குவரத்து நெரிசலை

நெறிப்படுத்துதல் மற்றும் முதலுதவிக்கான பயிற்சி அளித்தல் ஆகியவை இதன் முக்கிய செயல்பாடுகள் ஆகும். தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில மற்றும் மாவட்டத் தலைமை அலுவலகங்களைப் பேணுவதற்காகவும் ஊழியர்களின் ஊதியத்திற்காகவும் ஒவ்வோராண்டும் தொடர் செலவினமாக ரூ.7 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சிறந்த சாரண சாரணியர்களுக்கு “இராஜ்ய புரஷ்கார் விருது” மாண்புமிகு தமிழக ஆளுநரால் ஒவ்வோராண்டும் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்படுகின்றது.

### 3.9.6 இளம் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 3,19,850 மாணாக்கர்களுடன் கூடிய 6,397 இளம் செஞ்சிலுவைச் சங்க அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியர் இளம் செஞ்சிலுவைச் சங்கத்தின் காப்பாளர் ஆவார். இம்மன்றச் செயல்பாடுகளில், ஆசிரியர்கள் உளவியல் ஆலோசகர்களாகவும், முழு ஈடுபாடுள்ள மாணாக்கர்கள் தன்னார்வலர்களாகவும் செயல்பட ஊக்கமளிக்கப்படுகிறது. குழந்தைகளிடம் மனித நேய மதிப்பீடுகளைத் தூண்டுவதோடு மட்டுமல்லாது, திறனை மெருகேற்றவும் இளம் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.

### 3.9.7 கலைத் திருவிழா

மாநிலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த பல்வேறு கலைகளை அழிவிலிருந்து பாதுகாத்து, அவற்றை உயிர்ப்பிக்கும் விதமாகத் தமிழக அரசானது கலைத் திருவிழாவினைத் தமிழகத்தில் உள்ள அனைத்துவகை அரசுப் பள்ளிகளிலும் நடத்துகிறது. மாணாக்கர்கள், தங்கள் உள்ளார்ந்த திறமைகளையும் மற்றும் தனித்துவமான கலைத் திறன்களையும் வளர்க்க இந்நிகழ்வு உதவுகின்றது. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்காகத் தொடக்க, உயர்தொடக்க, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பிரிவுகளில் போட்டி நடத்தப்படுகிறது. பள்ளி, ஒன்றிய, கல்வி மாவட்ட மற்றும் வருவாய் மாவட்ட அளவில் கலைத் திருவிழாப் போட்டிகள் ரூ.4 கோடி செலவில் நடத்தப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான போட்டிகள் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்விற்குப் பின்னர் நடத்தப்படும்.

### 3.9.8 சுற்றுச் சூழல் மன்றம்

பள்ளி மாணாக்கர்களிடையே சுற்றுப்புறத் தூய்மை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே "சுற்றுச்சூழல் மன்றத்தின்" முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில், 11,460 அரசுப் பள்ளிகளில் இம்மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மன்றங்களைப் பேணுவதற்காக ஒவ்வோராண்டும் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் வாயிலாக மன்றம் ஒன்றுக்கு ரூ.5,000 வழங்கப்படுகிறது. மரம் நடுதல், தோட்டப் பராமரிப்பு மற்றும்

சுற்றுச்சூழல் தொடர்பான செயல்பாடுகளை இம்மன்றங்கள் மேற்கொள்கின்றன.

## 3.10 வழிகாட்டல் மற்றும் ஆலோசனை

### 3.10.1 மாணாக்கர்களுக்கான நடமாடும் ஆலோசனை மையங்கள்

வளரிளம் பருவத்தில் மாணாக்கர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் திறம்படக் கையாள வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் இன்றியமையாத் தேவையாகும். பள்ளியில் பயிலும் வளரிளம் பருவ மாணவ, மாணவியரின் தவிர்க்க இயலா உளவியல் தேவையினை மனத்திற்கொண்டு, மாநிலத்தின் 32 மாவட்டங்கள் 17 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இங்குள்ள பள்ளி மாணாக்கர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்க முழுமையான, நவீன வசதிகளைக்கொண்ட 17 ஊர்திகளில் நடமாடும் ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வூர்திகளில் புதிய தொழில்நுட்பக் கருவிகளான தொலைக்காட்சி மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2017-18 ஆம் கல்வியாண்டில் மாநிலத்தில் உள்ள ஏறத்தாழ 1,240 பள்ளிகளில் பயிலும் 216592 மாணாக்கர்கள் இம்மையங்கள் வழி உளவியல் ஆலோசனைப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| குழு ஆலோசனை | 99160 | 105696 | 204856 |
| தனிநபர் ஆலோசனை | 5672 | 6064 | 11736 |
| மொத்தம் | 104832 | 111760 | 216592 |

**3.10.2 கட்டணமில்லா உதவி எண் - 14417**

14417 என்ற 24x 7 கட்டணமில்லா ஆலோசனை உதவி எண்ணானது 01.03.2018 அன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. இது அரசின் ஒரு முன்னோடி முயற்சியாகும். இத்திட்டத்தின் வாயிலாகத் மாணவர், ஆசிரியர் மற்றும் பெற்றோர், குறிப்பாக, கிராமப்புற மற்றும் பழங்குடி மக்கள் வாழ்பகுதி பள்ளி மாணாக்கர்களுக்கான, நலத்திட்டங்களைப் பற்றிய பயனுள்ள தகவல்கள், பாடத்திட்டம் மற்றும் தேர்வு குறித்த தெளிவு, வளரிளம் பருவ மாணாக்கர்களுக்கான உளவியல் வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புத் தகவல்களை எளிதில் பெற இயலும். 2017-18 ஆம் ஆண்டில், இத்திட்ட நடைமுறைப்படுத்துதலுக்கு ரூ.1.98 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

**3.11 பிற திட்டங்கள்**

**3.11.1 பெற்றோர் ஆசிரியர் கழகம்**

பெற்றோர் ஆசிரியர் கழகமானது பள்ளிகளுக்கும், சார்ந்த சமூகத்திற்கும் இடையேயான ஓர் உறவுப் பாலமாக அமைகிறது. பள்ளி நிருவாகம் திறம்படச் செயல்படத்

தேவையான வளங்களை ஒருங்கிணைப்பதற்குப் பெற்றோர் ஆசிரியர் கழகமானது உதவுகிறது. மேலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும், பெற்றோர் ஆசிரியர் கழகச் செய்தி இதழில், மாணாக்கர்களின் தனித்திறன்களுக்கு இடமளிக்கப்படுகிறது.

### 3.11.2 உயர் கல்விக் கடன் முகாம்கள்

"மேல்நிலைப் பள்ளி வரை கட்டணமில்லாக் கல்வி" என்பது அரசின் முன்னோடி சாதனைத் திட்டமாகும். இருப்பினும், பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ள மாணாக்கர்கள், உயர்கல்வியைத் தொடர்வது சாத்தியமற்றதாகிறது. எனவே, இவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கும் நோக்கில், வங்கிக்கடன் முகாம்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பங்களிப்போடு, மாவட்ட அளவில் நடத்தப்பட்டன. மேலும், 2018-19 ஆம் ஆண்டில் ஒன்றிய அளவில் முகாம்கள் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி, தகுதிவாய்ந்த மாணாக்கர்கள், தங்கள் உயர்கல்வியினைத் தொடர, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நிறுவியுள்ள சிறப்பு இணையத்தளம், www.vidyalakshmi.co.in மூலம் விண்ணப்பிக்க இயலும். மாவட்ட ஆட்சியரின் தலைமையில், ஊரக வளர்ச்சி மேம்பாட்டு முகமைத் திட்ட அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர், முன்னோடி வங்கி மேலாளர், பொறியியல் கல்லூரி முதல்வர்கள், மருத்துவ மட்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

முதல்வர்கள் அடங்கிய குழுவினரின் வாயிலாகத் தகுதி வாய்ந்த விண்ணப்பத்தாரர்களுக்குக் கடன் தொகை விரைவாக அளிக்கப்படுகிறது. **மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுத் தகுதியான மாணாக்கர்களுக்கு வங்கிக்கடனுதவி உடனே கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

### 3.11.3 பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறையினைக் கைவிடல்

அரசு பொதுத் தேர்வுகளில் வழங்கப்பட்டு வந்த தரவரிசை முறை மாணாக்கர்களிடையே மனச்சுமையை ஏற்படுத்தி வந்தது. மாநில, மாவட்ட அளவிலான தரங்களை எப்படியாவது பெற வேண்டும் என்று மனஅழுத்தத்திற்கு ஆளானார்கள். மாணாக்கர்களிடம் காணப்படும் இம்மனச்சுமையை நன்கு அறிந்த அரசு 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் இதுவரை பின்பற்றி வந்த தரவரிசை முறை 2017-18 ஆம் ஆண்டிலிருந்து முற்றிலுமாக கைவிடப்பட்டது. அரசின் இம்முடிவானது மாணாக்கர்கள் பெற்றோர்கள் கல்வியாளர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இம்முறையானது கல்வி நிறுவனங்களுக்கிடையே நிலவி வரும் ஆரோக்கியமற்ற போட்டியையும் முற்றிலும் தவிர்க்கும் வண்ணம் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

### 3.11.4 எரியூட்டுக் கருவிகள் மற்றும் அலமாரிகள்

பள்ளிகளில் பயிலும் வளரிளம் பருவ மாணவியர்களின் மாதவிடாய் சுகாதாரத்தினை உறுதி செய்தலில் அரசு தனிக்கவனம் செலுத்துகிறது. எனவே,

மாணவியர் பயிலும் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை அப்புறப்படுத்த உதவியாக மின்மயமாக்கப்பட்ட எரியூட்டுக் கருவிகள் 3,334 பெண்கள் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 2017-18 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கென ரூ.1124.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, மாணவியர்களுக்கு வழங்கப்படும் நாப்கின்களைப் பள்ளிகளில் பாதுகாப்பாகச் சேமிப்பதற்குத் தேவையான அலமாரிகளை, பள்ளி அளவில் கொள்முதல் செய்ய ரூ.64.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளையும் மேற்கொள்ள ரூ.11.88 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 3.11.5 தனியார் நிறுவன சமூக பொறுப்பாண்மை நிதி

தமிழகப் பள்ளிக் கல்வித்துறையில் ஒரு மாற்றம் காண, தமிழக அரசும், இந்திய தொழில்முனைவோர் கூட்டமைப்பும் கைகோர்த்துள்ளன. பெருநிறுவனங்களின் சமூகப் பங்களிப்பின்கீழ் நிகழும் கல்விசார் திட்டங்களை ஒருங்கிணைத்து, ஊக்குவிக்கும் நோக்கோடு ஒரு கூட்டுப் பணிக்குழுவானது நிறுவப்பட்டுள்ளது. இக்கூட்டுப் பணிக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று பெருநிறுவனங்களின் சமூகப் பங்களிப்பின் வழி பல்வகையான, கல்வி நலன் சார் திட்டங்களைத் தமிழகப் பள்ளிக் கல்வித்துறை முன்னெடுத்து செய்து வருகிறது.

### 3.11.6 ஊடகத்தின் வாயிலாக மாணாக்கர்களுக்கான தேர்வு சார்ந்த ஆலோசனைகள்

தமிழக அரசு, THE LEDE என்ற நிறுவனத்துடன் இணைந்து போட்டிகள் நிறைந்த இவ்வுலகில் மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தேர்வு குறித்து எழும் மனஅழுத்தம், கவலை, பயம் மற்றும் குழப்பங்கள் ஆகியவற்றை நீக்க விழிப்புணர்வுப் பரப்புரைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பரப்புரை மாணாக்கர்களின் மனஅழுத்தம், கவலை, பயம் மற்றும் உளவியல் மனச்சோர்வு ஆகியவற்றை முற்றிலுமாகப் போக்க உதவும். இதற்கென மனநல ஆலோசகர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கும் வல்லுநர்கள் தயார் நிலையிலும் உள்ளார்கள். மாணாக்கர்களுக்கு மேலும் உதவும் வகையில் ஒரு தனிப்பட்ட புலனம் (whatsapp) எண், ஒரு முகநூல் (face book), ஒரு கீச்சகக் கணக்கு (Twitter) மற்றும் ஒரு மின்னஞ்சல் வலை தள முகவரி (e-mail id address) ஆகியவை தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

## 3.12 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகளின் (TANII) கீழ், கீழ்க்காண் திட்டங்கள் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன:

**கழிவு – உயிர் சிதைத்துருவாக்கி (BIO-DIGEST) கழிப்பறைகள்**
சிதைவுறா மனித கழிவுப்பொருள்களை அகற்றல் குறித்த சிக்கலுக்குரிய தீர்வாக, மனிதக் கழிவுகளைப் பயன்படுத்தக்

கூடிய நீர் மற்றும் வாயுவாக மாற்ற வழிவகை செய்யும், நவீன சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஏற்ற கழிவு உயிர் சிதைத்துருவாக்கி (BIO-DIGEST) கழிப்பறைகள் ரூ.55.06 இலட்சம் செலவில் மாநிலத்தில் உள்ள 44 மாதிரிப் பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோராண்டும் இந்த 44 கழிப்பறை அலகுகளின் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுப் பராமரிப்புச் செலவிற்கென ரூ.7,000 ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மின்சாம்பல் ஆக்கிகள்**

பதின்மவயது மாணவியருக்கு வழங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட நாப்கின்களை மின்சாம்பலாக்கி மூலம் எரித்து, ஆரோக்கியமான சூழலை உறுதி செய்வதற்காக மின்சாம்பலாக்கிகள் 100 தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பெண்கள் பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளன. சுகாதாரம் மற்றும் தூய்மையான சூழலை மாணவியருக்கு உறுதி செய்து நடைமுறைப்படுத்த ரூ.46.60 இலட்சம் செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.13 புதிய கல்வி மாவட்டம்**

திறமையான நிர்வாகத்திற்கென ஏற்கனவே உள்ள தருமபுரி கல்வி மாவாட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு அரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கல்வி மாவட்டம் உருவாக்கப்பட்டது. அரூர் கல்வி மாவட்டத்தில்

117 அரசுப் பள்ளிகளும் எஞ்சிய 170 அரசுப் பள்ளிகள் தருமபுரி கல்வி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

### 3.14 நிர்வாக அமைப்பினை மறுசீரமைப்பு செய்தல்

பள்ளிகளில் முறையான ஆய்வு மற்றும் கண்காணிப்பினை திறம்பட செய்திட, கள அளவிலான நிர்வாக அமைப்பிற்கு அதிகாரம் பகிர்ந்தளிப்பு செய்து மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான மறுசீரமைப்பில், வருவாய் மாவட்டங்களில் உள்ள அனைத்து வகையான பள்ளிகளையும் முதன்மை கல்வி அலுவலர்கள் நிர்வகிப்பார்கள்; கல்வி மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளின் விவகாரங்களையும் மாவட்ட கல்வி அலுவலர்கள் நிர்வாகம் செய்வார்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட எல்லைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளையும் கண்காணித்து முறைப்படுத்துவார்கள். இவ்வகையில் மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 3.15 நிர்வாகம்

பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் 58,474 பள்ளிகளில் 1.23 கோடி மாணாக்கர்கள் கல்வி பயில்கின்றனர், 5.74 இலட்சம் ஆசிரியர்கள் கல்வி பணியில் ஈடுபட்டுள்ளனர். பள்ளிக்கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து வகை பள்ளிகளும் மாவட்ட அளவில் 32 முதன்மைக் கல்வி அலுவலர்களையும், 120 மாவட்ட கல்வி

அலுவலர்களையும் மற்றும் 836 வட்டாரக் கல்வி அலுவலர்களையும் கொண்டு சீரியமுறையில் நிர்வகிக்கப்படுகின்றன.

### 3.16 நிதி ஒதுக்கீடு

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கென 2018-19 ஆம் ஆண்டிற்கு **ரூ.13,164.33 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

## 4.1 முன்னுரை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசுடன் இணைந்து ஆங்கில வழியில் கல்வியினை வழங்கி வருகிறது. ஆரம்ப காலங்களில் மெட்ரிகுலேசன் பள்ளிகளானது சென்னை பல்கலைக்கழகத்தாலும் மதுரை பல்கலைக்கழகத்தாலும் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த பள்ளிகள் நிர்வாகம் மற்றும் நிதி சம்பந்தமாக தன்னாட்சி பெற்றிருந்தன. 1978 ஆம் ஆண்டில், இவ்வகைப் பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்ககத்தின் நிர்வாக ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், 2001 ஆம் ஆண்டு மெட்ரிகுலேசன் பள்ளிகளைச் செவ்வனே நிர்வகிக்க தனி இயக்ககத்தின் அவசியம் உணரப்பட்டு, மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் முதன்மைப் பணியானது அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யும் விதிகளை பூர்த்தி செய்யும் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதும், மெட்ரிகுலேசன் பள்ளிகள் நிர்வாகத்தினை கண்காணிப்பதுமாகும். இப்பள்ளிகளில் 38.80 லட்சம் மாணாக்கர்கள் கல்வி பயில்கின்றனர்.

## 4.2 தொலைநோக்கு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பாதுகாப்பான கற்கும் சூழலில் தரமான கல்வி அளிக்கப்படுவதை

உறுதிசெய்வதே மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் தொலை நோக்காகும்.

**4.3 நோக்கங்கள்**

- புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்குதல்
- அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விதிகளை பூர்த்தி செய்யும் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்
- போதுமான பாதுகாப்பான உட்கட்டமைப்பு வசதியினை உறுதி செய்தல்
- பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் பாதுகாப்பினை உறுதிசெய்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்த மாநில தொடர்பு அமைப்பாக செயல்படுதல்
- அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யும் கல்வித் தகுதியின்படி ஆசிரியர்கள் நியமனத்தை உறுதி செய்தல்
- குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அனைத்து பள்ளிகளிலும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறையை (CCE) நடைமுறைப்படுத்துதல்

## 4.4 நிர்வாகப் பொறுப்புகள்

### 4.4.1 அங்கீகாரம் மற்றும் அனுமதி

அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்படும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், புதிய பள்ளி துவக்க அனுமதி வழங்குதல் ஆகியவை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அரசால் வரையறுக்கப்படும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் மெட்ரிகுலேசன் பள்ளியினை மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரமானது அதிகபட்சமாக 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்பட்ட அங்கீகாரம் முடிவடையும் நிலையில் உள்ள பள்ளிகளுக்கு அங்கீகாரம் புதுப்பித்து ஆணை வழங்கப்படுகிறது.

2017-18 ஆம் கல்வியாண்டில், 54 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு துவங்க அனுமதியும் ஏற்கனவே செயல்படும் 98 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

### 4.4.2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 - நடைமுறைப்படுத்துதல்

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 12(1) (சி) இன் கீழ் தனியார் சுயநிதிப் பள்ளிகளில், வாய்ப்பு மறுக்கப்பட்ட

மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்பில் 25% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

2013-14 ஆம் கல்வியாண்டு முதல் 2016-17 ஆம் கல்வி ஆண்டு வரையிலான காலத்திற்கு 25% இட ஒதுக்கீட்டில் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி கட்டணத் தொகை ரூ.401.98 கோடி மாநில அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2017-18 ஆம் கல்வியாண்டில், 90,607 குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். பிரிவு வாரியாக சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பிரிவு | சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள் |
|---|---|---|
| 1. | வாய்ப்பு மறுக்கப்பட்டவர் | 18,275 |
| 2. | நலிவடைந்த பிரிவினர் | 71,905 |
| 3. | ஆதரவற்றவர் | 39 |
| 4. | எச்.ஐ.வி | 7 |
| 5. | சுகாதாரப்பணியாளர் குழந்தைகள் | 118 |
| 6. | சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் | 263 |
| | மொத்தம் | 90,607 |

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 இல், பிரிவு 12(1) (சி) இன்படி

25% இட ஒதுக்கீட்டில் மாணாக்கர் சேர்க்கை செய்ய அரசால் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணாக்கர் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்த இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையானது இணைய வழியாக விண்ணப்பித்தலின் மூலம் தகுதியுடைய மாணாக்கர்களுக்கு தனியார் சுயநிதிப் பள்ளிகளில் சேர்ந்திட வழிவகுத்துள்ளது. தகுதியுள்ள விண்ணப்பங்கள் ஒரு பள்ளியின் மாணாக்கர் சேர்க்கை எண்ணிக்கையை காட்டிலும் அதிகமாக இருந்தால், குலுக்கல் முறைத் தேர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்பட்ட ஒரு அலுவலரின் முன்னிலையில் மாணாக்கர்கள் தேர்வு நடைபெறுகிறது. எச்.ஐ.வி மூன்றாம் பாலினத்தவர், சுகாதாரப் பணியாளர்களின் குழந்தைகள், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தேர்வு செய்யப்படுகின்றனர். பொதுமக்கள் இணைய வழியில் இலவசமாகப் பதிவு செய்ய மாவட்ட மற்றும் வட்டார அளவில் உள்ள கல்வி அலுவலகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த முன்முயற்சியின் மூலம் மாணாக்கர்கள் சேர்க்கை நடைமுறையினால் வெளிப்படைத் தன்மை அறிமுகப்படுத்துவதுடன் இப்பணியினை மேற்பார்வை செய்யும் அலுவலர்களின் பணிச்சுமையினை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

### 4.5 சிறப்பு முயற்சிகள்

#### 4.5.1 இணைய வழியாக அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்தல்

தற்போது உள்ள நடைமுறையின்படி துவக்க அனுமதி, அங்கீகாரம் மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தினை பரிசீலனை செய்வது சிக்கலாகவும் நேரத்தை ஈர்ப்பதாகவும் உள்ளது. மேலும், இந்நடைமுறையால் ஆய்வு அலுவலர்களுக்கு போதிய நம்பகத்தன்மையான புள்ளி விவரம் பராமரிப்பதில் சிரமம் உள்ளது. இதனை சரிசெய்ய இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த புதிய முயற்சியினால், புதிதாக பள்ளி தொடங்க அனுமதி, ஆரம்ப அங்கீகாரம் புதுப்பித்தல், கூடுதல் வகுப்பு துவக்க அனுமதி, மெட்ரிகுலேசன் பள்ளியை மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோருதல் சார்ந்த விண்ணப்பங்களை அதன் தொடர்புடைய ஆவணங்களுடன் பள்ளி நிர்வாகங்கள் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம்.

இந்த இணைய விண்ணப்பம், துறை சார்ந்த கள அலுவலர்களுக்கு மாற்றப்பட்டு, ஆய்வு அலுவலர் பள்ளியினை நேரடியாக ஆய்வு செய்து உரிய பரிந்துரையுடன் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநருக்கு அனுப்பிவைப்பார். மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சார்ந்த பள்ளி விவரங்கள் மற்றும் பரிந்துரைகளை பரிசீலனை செய்து தகுதிபெறும் பட்சத்தில் உரிய ஆணைகள் பிறப்பிப்பார். இந்த புதிய முயற்சியால் பள்ளி நிர்வாகங்களுக்கு எளிமையான சேவையினை அவர்தம் பள்ளிகளிலேயே எவ்வித

சிரமமுமின்றி வழங்கிட இயக்ககம் உறுதி செய்கிறது. மாநில அரசால் இம்முயற்சிக்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.5.2 மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் முதன்முறையாக பணியிடைப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சிக் கட்டகங்கள் பின்வரும் தலைப்புகளில் தயாரிக்கப்பட்டுள்ளன:

- குழந்தை உளவியல்
- ஆசிரியர் மாணவர் உறவு
- குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அதற்குத் தீர்வு
- கல்வியில் தகவல் மற்றும் தொழில் நுட்ப செயல்திறன்
- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு
- வளரிளம் பருவத்தினருக்கேற்ற பள்ளிச் சூழலை உருவாக்குதல்
- தண்டனைகளும் எதிர்மறை விளைவுகளும், அதனை தவிப்பதற்கான தேவைகளும்
- திறன் சார்ந்த மதிப்பீட்டு முறைகள்
- மதிப்பீட்டு முறைகளில் புதிய அணுகுமுறைகள்
- 11 ஆம் வகுப்புப் பாடத்திட்டம் மற்றும் பொதுத்தேர்வு
- போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தல்

- உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான வழிகாட்டுதல்கள்

இந்த புதிய முயற்சியானது தனியார் பள்ளிகளில் பயிலும் ஆசிரியர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், தங்கள் பணியில் வளர்ச்சியினை அடையவும் வாய்ப்பாக அமையும்.

**4.5.3 பேருந்து அட்டை வழங்குதல்**

பள்ளி மாணாக்கர்கள் எவ்வித சிரமமுமின்றி பள்ளிக்கு வந்து செல்ல அரசால் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. விலையில்லா பயண அட்டை வழங்கும் இத்திட்டமானது மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் 3,32,132 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**4.6 தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழு**

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணத்தை ஒழுங்குபடுத்தவும், கூடுதலாக கட்டண வசூலிலும் , நன்கொடை வசூலிலும் ஈடுபடும் பள்ளிகளின் செயல்பாட்டை சட்டரீதியாக தடுக்கவும், தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 உருவாக்கப்பட்டது. தமிழகத்திலுள்ள சுமார் 10,200 தனியார் பள்ளிகளுக்கு 2017-18 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 6500 பள்ளிகளுக்கு கட்டண நிர்ணயக் குழுவால்

கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பள்ளிகளுக்கு 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆம் கல்வியாண்டுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய ஆவணங்கள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் பள்ளிகளில் கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக பெறப்படும் மனுக்கள் தீர்வு செய்வதிலும் கட்டண நிர்ணயக்குழு ஈடுபட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட பள்ளியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதலாக வசூலித்த ரூ.63,86,290/-ஐ மாணாக்கர்களிடம் திரும்ப வழங்க கட்டண நிர்ணயக் குழுவால் ஆணையிடப்பட்டுள்ளது.

**4.7 தனியார் பள்ளிகளை முறைப்படுத்துதல்**

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் தனியார் பள்ளிகளானது, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்தும்) சட்டம், 1973, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்தும்) விதிகள், 1974, மெட்ரிகுலேசன் பள்ளி ஒழுங்குப்படுத்தல் விதித்தொகுப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் விதித்தொகுப்பு, ஆகிய விதிகளின்படி நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு பொதுப்பாடத்தின்படி மாநிலத்தில் செயல்பட்டுவரும் தனியார் பள்ளிகள் அனைத்தும் மாநிலப் பள்ளிக் கல்வி பொதுப்பாட சட்டம், 2010 இன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே, அனைத்து வகை தனியார் பள்ளிகளுக்கும் பொதுவான சட்டம் மற்றும் விதிகளை வகுத்திட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**4.8 நிதி ஒதுக்கீடு**

2018-19 ஆம் நிதியாண்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு **ரூ.208.23 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் மாணாக்கர்களுக்கு பாதுகாப்பான கற்றல் சூழலும் தரமான கல்வியை அளிப்பதிலும் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதையும் உறுதி செய்கிறது.

# 5. அரசுத் தேர்வுகள்

## 5.1 முன்னுரை

மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கான பொதுத் தேர்வுகளை அரசு தேர்வுகள் இயக்ககம் நடத்திட பொறுப்பேற்றுள்ளது. மிக முக்கியமான இம்மூன்றுத் தேர்வுகள் மட்டுமின்றி இதர 32 தேர்வுகளையும் நடத்தி மதிப்பெண் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் உயர்கல்வி தொடர்வதற்கும் வேலை வாய்ப்பு பெறுவதற்குமான மிக முக்கிய மற்றும் மதிப்பு வாய்ந்த ஆவணமாகும்.

1975 முதல் செயல்படத் துவங்கிய அரசுத் தேர்வுகள் இயக்ககம், பல புதுமையான முறைகளைத் திறம்படப் புகுத்தியதன் வாயிலாகத் தேர்வுகளை நடத்துவதில் சிறப்பான முன்னேற்றம் அடைந்து உள்ளது. அரசுத் தேர்வுகள் இயக்ககம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அவசியத் தேவையினை உணர்ந்து, பொதுத்தேர்வுகள் நடத்தும் முறைகளை துல்லியமாக மேம்படுத்திடவும், தாமதத்தினை குறைத்திடவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டிஜிட்டல் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 5.2 நோக்கம்

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தேர்வுகள் நடத்தும் நடைமுறைகளை

எளிதாக்குதல் மற்றும் தேர்வு முடிவுகள் வெளியிடும் செயல்முறைகளை துரிதப்படுத்துதல்.

## 5.3 குறிக்கோள்கள்

- அனைத்து தேர்வுகளை நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடத்துதல்
- தேர்வுகள் நடத்தும் நடைமுறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்
- மதிப்பீட்டு முறைகளை வலுப்படுத்துதல்
- தேர்வு முடிவுகளை குறித்த நேரத்தில் வெளியிடுதல்
- தேர்வர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டச் சான்றிதழ்கள் வழங்குதல்

## 5.4 நிறுவன கட்டமைப்பு

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 35 விதமான தேர்வுகள் நடத்துவதனை முதன்மையான பொறுப்பாக கொண்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் 27,31,217 மாணாக்கர்கள் இடைநிலை மற்றும் மேல்நிலை (முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு) பொதுத் தேர்வுகளை எழுதியுள்ளனர். அனைத்துத் தேர்வுகளையும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைக்குள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்துகிறது. தேர்வு மையங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தேர்விற்கான முன்பணங்கள் விநியோகம் செய்தல், தேர்வு முடிவுகள் வெளியிட்டப் பின்னர் மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகம் போன்ற முக்கியப் பணிகள் 7 மண்டல அலுவலக துணையுடன் இயக்ககத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

### 5.5 இணையதள சேவைகள்

மாணாக்கர் சமுதாயம் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு தேவையான தகவல்களை பெறுவதற்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் www.dge.tn.gov.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வுகள், தேர்வுகளுக்கான கால அட்டவணை, விண்ணப்பப் படிவங்களின் மாதிரிப்படிவம், கட்டண விவரங்கள், சான்றிட்ட மதிப்பெண் நகல், புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் பெறுதலுக்கான நடைமுறைகள், பொதுத் தேர்வுகளுக்கான மாதிரி வினாத்தாட்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள் மற்றும் 10 ஆம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவியல் பாட செய்முறை தேர்விற்கான அறிவுரைகளும் இந்த இணையதளத்தின் வாயிலாக மாணாக்கர்கள் தெரிந்து கொள்ளலாம். இந்த இணையதள உருவாக்கத்தினால் தேர்வர்களுக்குத் தேர்விற்கு விண்ணப்பிக்கும்போது ஏற்படும் சிரமங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இணையதள உருவாக்கத்தின் வாயிலாக, தேர்வுகள் எழுதவுள்ள பள்ளி மாணாக்கர்கள் மற்றும் தனித் தேர்வர்களது பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்கு தேவையான விவரங்களைப் பெற்றுக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் மார்ச் 2017-18 ஆம் ஆண்டு முதல் பாரத ஸ்டேட் வங்கியின் கட்டணச் சேகரிப்பு இணையதளத்தின் வழியாக தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வழிவகை

செய்யப்பட்டுள்ளது. பள்ளிகள் தங்களது அனைத்து மாணாக்கர்களின் நுழைவுச் சீட்டுகளையும் பதிவிறக்கம் செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு விநியோக மையங்களுக்கு நேரில் சென்று தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் முறை நீக்கப்பட்டு, தற்போது தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை இணையதளத்தில் நேரடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளமான www.dge.tn.nic.in வாயிலாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக வழங்கப்படும் தற்காலிகச் சான்றிதழ் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மட்டுமே செல்லத்தக்கவையாகும். மேலும், இச்சான்றிதழ்கள் உயர்கல்வி அனுமதிக்கு பயன்படுத்தப்படுகிறது.

**5.6 தமிழ் வழியில் பயிலும் மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களித்தல்**

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வினை தமிழ் வழியில் பயின்று தேர்வெழுதும் பள்ளி மாணாக்கருக்குத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு வருகிறது. மார்ச் 2018, மேல்நிலைப் பொதுத்தேர்வில் 10,46,741 பள்ளி மாணாக்கரும், இடைநிலைப் பள்ளி இறுதி விடுப்புச்

சான்றிதழ் பொதுத் தேர்வில் 5,55,621 பள்ளி மாணாக்கரும் தமிழ் வழியில் பயின்றதால் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்று பயனடைந்துள்ளனர்.

### 5.7 சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்

இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வு எழுதும் டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், கண்பார்வையற்றோர், காதுகேளாதோர் மற்றும் இதர மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்குத் தேர்வெழுதுவதற்கு அனைத்து பாடங்களுக்கும் கூடுதலாக நேரம் வழங்கப்படுகிறது. மேலும், அவர்கள் சொல்வதை எழுதுபவர் நியமனம்/ ஏதேனும் ஒரு மொழிப்பாட விலக்களிப்பு/ தேவையின் அடிப்படையில் கணிப்பான் பயன்படுத்த அனுமதி போன்ற சலுகைகள் வழங்கப்படுகிறது. மார்ச் 2018, மேல்நிலைப் பொதுத் தேர்வில் 4,635 சிறப்புக்கவனம் தேவைப்படும் தேர்வர்களுக்கும், இடைநிலைப் பள்ளி இறுதி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வில் 3,659 சிறப்புக்கவனம் தேவைப்படும் தேர்வர்களுக்கும் உரிய சலுகைகள் வழங்கப்பட்டுத் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர்.

### 5.8 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள், விண்ணப்பிக்கும் வழிமுறைகளை பற்றித் தெரிந்துக் கொள்வதில் இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. எனவே, அவர்களுக்கு வழிகாட்ட அரசுத் தேர்வுகள் இயக்ககம் தேர்வுகளுக்கு

விண்ணப்பிப்பவர்களுக்கென மாநிலம் முழுவதும் 213 தேர்வு சேவை மையங்களைப் பள்ளிகளில் அமைத்துள்ளது.

**5.9 சிறைகளில் தேர்வுமையம்**

சிறைவாசிகளும் கல்வியில் ஏற்றம் கண்டிட, சிறை வளாகத்திலேயே தேர்வு மையம் அமைத்திட இயக்ககம் அனுமதித்துள்ளது. மார்ச் 2018இல், புழல் மத்தியச் சிறையில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 165 சிறைவாசிகள் தேர்வெழுதியுள்ளனர். 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 186 சிறைவாசிகள் எழுத கூடுதலாக மூன்று மையங்கள் பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் புழல் மத்தியச் சிறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**5.10 தேர்வுகளை நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடத்துதல்**

ஒவ்வோர் தேர்வு நாளன்றும் வாகனங்களில் வினாத் தாட்கள் தேர்வு மையங்களுக்கு பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்லப்பட்டு, தேர்வு முடிவுற்றவுடன் அதே வாகனங்களைப் பயன்படுத்தி விடைத்தாள் கட்டுகளை, விடைத்தாள் சேகரிப்பு மையங்களில் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், விடைத்தாள் கட்டுகள் அனைத்தும் பாதுகாப்பாக விடைத்தாள் சேகரிப்பு மற்றும் விடைத்தாள் திருத்தும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. பொதுத்தேர்வுகள் நடைபெறும் காலங்களில் பொதுத்தேர்வுகளை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடத்தும்பொருட்டு அவசியமான தேவைகளுக்குத்

தேர்வுக் காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுத் தேர்வுகள் தொடங்கும் நாள் முதல் தேர்வுகள் முடியும் வரை, இக்கட்டுப்பாட்டு அறை காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுகிறது. பெறப்படும் புகார்களின் அடிப்படையில் உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 5.11 ஜூன் / ஜூலை மாதங்களில் சிறப்புத் துணைத் தேர்வு நடத்துதல்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் மார்ச் /ஏப்ரல் மாதங்களில் நடத்தப்படும் 10 மற்றும் 12 பொதுத் தேர்வுகளில் தோல்வியுறும் மாணாக்கர்களுக்கு ஒரு முழு கல்வியாண்டு வீணாகாமல் அக்கல்வியாண்டிலேயே அவர்தம் உயர் கல்வியினை தொடர்வதற்கு உதவியாக உடனடி சிறப்புத் துணைத்தேர்வு ஒவ்வோர் ஆண்டும் ஜூன்/ஜூலை மாதத்தில் நடத்தப்படுகிறது. இதனால், பல்வேறு காரணங்களினால் தேர்வுகளில் தோல்வியுறுபவர்கள் இடைநிறுத்தம் தடுக்கப்படுகிறது.

### 5.12 விடைத்தாள்களின் சிறப்பம்சங்கள்

தேர்வறையில் ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டு, தேர்வு எழுதும் அனைத்துத் தேர்வர்களின் புகைப்படம் அடங்கிய முகப்புத்தாளுடன் விடைப்புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. இதனால், தேர்வின் சமயத்தில் தேர்வர்களை அடையாளம் காண தேர்வுக்கூட கண்காணிப்பாளர்கள் மற்றும் அனைத்து நிலை தேர்வுப் பணியாளர்களுக்கும் ஏதுவாக

உள்ளது. முகப்புத்தாளின், மேல்பகுதி பிரித்தெடுக்கும் வசதியுடன் அச்சிடப்பட்டுள்ளதால், தேர்வு முடிந்ததும் இப்பகுதி பிரித்தெடுக்கப்பட்டு, விடைப்புத்தகத்தினை மதிப்பீடு செய்ய விடைத்தாள் மதிப்பீட்டு முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. விடைத்தாள் மதிப்பீடு மையங்களில் பார்கோடு ரீடர் மூலம் விடைத்தாளுக்குரிய மாற்றெண்கள் துல்லியமாக கணினியில், மிக எளிதாக பதிவேற்றம் செய்யப்படும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. படிப்பு உதவித்தொகை பெறுவதற்காக நடத்தப்படும், தேசிய அளவிலான திறனறிவுத் தேர்வு, தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு, தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வுகளிலும் தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடிய OMR விடைத்தாட்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட மற்றும் சம்பந்தப்பட்டப் பாடங்களுக்கேற்ப முதன்மை விடைப் புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. விடைத்தாளுடன் விடையளிக்கப்பட வேண்டிய படிவங்கள், வரைகட்டத்தாள் மற்றும் நிலவரைபடங்கள் அவ்விடைத்தாளுடனே அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

### 5.13 மறுமதிப்பீட்டிற்கான விடைத்தாட்களை பதிவேற்றம் செய்தல்

உயர்கல்வி, மருத்துவப்படிப்பு, பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்பிற்குச் செல்ல உள்ள அனைத்து மாணாக்கர்களும் ஒரு மதிப்பெண் கூட குறைந்து

விடக்கூடாதென கருதப்படுகின்ற நிலையில், மேல்நிலைப் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டப் பிறகு மாணாக்கர் விடைத்தாட்களின் நகல் பெற மறுமதிப்பீடு மற்றும் மதிப்பெண் மறுகூட்டல் வேண்டி அதிகப்படியாக விண்ணப்பிக்கப் படுகின்றன. அவர்களது கவலையைப் போக்கித் தகுதியான மதிப்பெண்களை வழங்குவது அவசியமானதாகிறது. எனவே, இதனை உறுதி செய்யும் வகையில் மாணாக்கர்களது விடைத்தாள் ஊடுநோக்கப்பட்டு, இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யும் முறையும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட மாணாக்கர்கள் தங்களது விடைத்தாளில் மதிப்பெண்கள் கூடுதலாக வர வாய்ப்புள்ளது என்பதை அறிந்த பிறகே மாணாக்கர்கள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கின்றனர்.

## 5.14 பொதுத்தேர்வுகளுக்கான தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

மாணாக்கர்கள் தேர்வு முடிவுகளை பதற்றம் ஏதுமின்றி தெரிந்துகொள்ள பின்வரும் இணைய தளங்களில் www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in, www.tnresults.nic.in தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. மார்ச், 2017 இல் நடைபெற்ற மேல்நிலை மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதிய தேர்வர்களுக்கான மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகள், மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் பதிவின்போது வழங்கப்பட்ட அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தியாகப் பெறும் வசதி வழங்கப்பட்டு, 18,49,850

தேர்வர்கள் இதன் வாயிலாக பயனடைந்தனர். இப்புதிய முயற்சி மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. சென்ற வருடம் வரை, மேல்நிலைத் தேர்வு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவுகளை பள்ளிகள் வாயிலாக அறிந்துகொள்ளும் பொருட்டு, மதிப்பெண்களுடன் கூடிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் அச்சிட்டு பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நடைமுறைக்கு அதிக காலம் தேவைப்பட்டது. மார்ச், 2018 முதல், அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை பள்ளிகளுக்கு அச்சிட்டு வழங்குவதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதள வாயிலாக பதிவிறக்கம் செய்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.15 மதிப்பெண் சான்றிதழ்கள்

தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் பெயர் மற்றும் பாடங்கள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்பட்டு வருகிறது. பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறும் வரை ஒவ்வொருமுறை தேர்வெழுதும்போதும் தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வைத்துள்ளனர். இத்தகைய தேர்வர்களுக்கு அவர்களின் தேர்ச்சியடைந்த முழு விபரங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண்

சான்றிதழ்கள் தேர்வர்களின் கோரிக்கையின் பேரில் வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில் 5,968 மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும், 4,932 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் வழங்கப்பட்டுள்ளன. மதிப்பெண் சான்றிதழ்களை மேம்படுத்தப்பட்டப் பாதுகாப்புத் தன்மையுடன் வெளியிடப்படுவதனால் போலி மதிப்பெண் சான்றிதழ்கள் தயாரிக்க இயலாது. மேலும், மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மையினை அறியும்போது போலி மதிப்பெண் சான்றிதழ்களை எளிதாக கண்டுபிடிக்க முடிகின்றது. மேலும் கூடுதலாக மேம்படுத்தப்பட்டப் பாதுகாப்பு தன்மையுடன், 2D பார்கோடிங் முறையுடனும், தேர்வர்களின் புகைப்படத்துடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

### 5.16 மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மை தன்மையினை அறிதல்

உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் நியமன அதிகாரிகள் மதிப்பெண் சான்றிதழின் உண்மை தன்மைக் குறித்த அறிக்கையினைக் கோரும் பட்சத்தில் இந்த இயக்ககம் அவ்வறிக்கையினை வழங்கி வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில், 4,19,474 மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை வழங்கப்பட்டுள்ளன.

### 5.17 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்

10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகளில் தேர்ச்சியடைந்து பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணாக்கர்களுக்குப் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் வழங்கப்படுகின்றது. 2017-18 ஆம் ஆண்டில் 6,420 புலப்பெயர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்பிப்போர் விண்ணப்பத்தினை இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.18 பல்வேறு வகையான பிற தேர்வுகள் நடத்துதல்

#### 5.18.1 தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வும் நடத்தப்படுகிறது. ஜூன் 2017 இல் நடைபெற்ற இத்தேர்வில் 13,467 தேர்வர்கள் தேர்வு எழுதியுள்ளனர். இத்தேர்வர்கள் விடைத்தாள் ஒளிநகல் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு, விடைத்தாள் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

#### 5.18.2 எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு

அரசுத் தேர்வுகள் இயக்ககம், குறைந்த பட்சக் கல்வித் தகுதியினை வழங்குவதற்கும், வேலைவாய்ப்புக்காகவும், அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காகவும், எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை

நடத்தி வருகின்றது. ஜனவரி, 2018 இல் நடைபெற்ற இத்தேர்வில் 12,365 தேர்வர்கள் தேர்வெழுதினர்.

### 5.18.3 அரசுத் தொழில்நுட்பத் தேர்வு

அரசுத் தேர்வுகள் இயக்ககம் தேர்வர்களுக்கு தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கும், வேலைவாய்ப்புக்காகவும், ஓவியம், தையல், விவசாயம், இசை, அச்சுக்கலை, கைத்தறி, நெசவு மற்றும் பிற பாடப்பிரிவுகளில் அரசுத் தொழில் நுட்பத் தேர்வினை நடத்தி வருகிறது. இத்தேர்வு கீழ்நிலை, மேல்நிலையென இருநிலைகளில் நடத்தப்படுகிறது மற்றும் 2017 இல் நடைப்பெற்ற இத்தேர்வில் 11,594 தேர்வர்கள் தேர்வெழுதினர்.

### 5.18.4 தமிழ்நாடு ஊரக மாணாக்கர் திறனாய்வுத் தேர்வு

தமிழ்நாடு ஊரக மாணாக்கர்களுக்கான திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் ஊரக மாணாக்கர்களை ஊக்குவிக்கும் விதமாக நடத்தப்படுகிறது. ஒவ்வொரு கல்வியாண்டிலும் 9ஆம் வகுப்புப் படிக்கும் ஊரக மாணாக்கர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மிகாமல் இருக்கும்பட்சத்தில், இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் மேற்படி எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்குக் கல்வி உதவித் தொகை

வழங்கப்படுகிறது. தற்போது மாணாக்கர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2017 இல் நடைபெற்ற இத்தேர்வினை 59,112 மாணாக்கர்கள் எழுதியதில், தேர்ச்சிப் பெற்ற 3,100 மாணாக்கர்கள் உதவித்தொகை பெற்றுள்ளனர்.

### 5.18.5 தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால், தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித்தொகை பெறுவதற்கான தேர்வு நடத்தப்படுகிறது. மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மாணாக்கர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். மாநில அரசுப் பள்ளிகள்/அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்று 8 ஆம் வகுப்பில் பயிலும் (பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணாக்கர்கள் 50% மதிப்பெண்கள் மற்றும் ஏனையோர் 55% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்) மாணாக்கர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் தேர்வெழுதலாம். தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.6000/-(மாதந்தோறும் ரூ.500/-வீதம்) உதவித் தொகையாக 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆண்டுதோறும் 6,695 மாணாக்கர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2017 இல் நடைபெற்ற இத்தேர்வினை 1,55,537 மாணாக்கர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

**5.18.6 தேசிய அளவிலான திறனறித் தேர்வு**

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் தேசிய அளவிலான முதல்நிலை திறனறித் தேர்வினை தமிழகத்தில் நடத்த, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு அங்கமாகச் செயல்படுகிறது. மத்திய/மாநிலப் பள்ளி குழுமங்களில் 10 ஆம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதிபடைத்தவர்கள் ஆவர். முதல்நிலைத் தேர்வுக்கான முடிவுகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டு, பின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சிப்பெற்ற மாணாக்கர்களுக்கு நேர்காணல் நடத்தப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் தேர்ச்சிப் பெறும் 40 தமிழக மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றது. இந்நேர்காணலில் தெரிவு செய்யப்படும் மாணாக்கர்களுக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை மாதந்தோறும் ரூ.1250/-ம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பிற்கு மாதந்தோறும் ரூ.2,000/-ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது. 2017 இல் நடைபெற்ற இத்தேர்வினை 1,59,729 மாணாக்கர்கள் எழுதியதில், 255 மாணாக்கர்கள் முதல்நிலைத் தேர்வில் தகுதிப் பெற்றுள்ளனர்.

**5.18.7 மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்**

ஆண்டுதோறும் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் பல தேர்வுகளை சென்னையில் நடத்திட, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது.

**5.19 மின்ஆளுமையின் முயற்சிகள்**

**5.19.1 தேர்வுத் துறையினை கணினிமயமாக்குதல்**

"தேர்வுத் துறையின் பணிகளை முற்றிலும் கணினிமயமாக்குதல்" திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு மின்ஆளுமை நிறுவனத்தின் வாயிலாக பணிகள் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.2.72 கோடியினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சேமிப்பிலிருந்து அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**5.19.2 தேசிய கல்வித் தரவுக் களஞ்சியம்**

அனைத்துத் தேர்வு வாரியங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த மாணாக்கரின் மதிப்பெண் சான்றிதழ்களை மின்னணு வடிவத்தில் ஆதார் எண்ணைப் பயன்படுத்தி மாணாக்கர் தங்களுடைய மதிப்பெண் சான்றிதழ்களை மின்னணு முறையில் பதிவிறக்கம் செய்துக் கொள்ள பல்கலைக்கழக மானியக் குழு என்.எஸ்.டி.எல் தரவு மேலாண்மை நிறுவனத்தை அங்கீகரித்துள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்கள் இணையதள வாயிலாக மின்னணு முறையிலேயே பதிவேடுகளை சரிபார்த்துக் கொள்ளலாம். இதன் பொருட்டு, இவ்வியக்ககம் என்.எஸ்.டி.எல் தரவு மேலாண்மை நிறுவனத்துடன், ஒப்பந்தம் செய்யப்பட்டு கடந்த சில வருடங்களுக்கான மாணாக்கரின் கல்வி ஆவணங்களை மின்னணு வடிவத்தில் சேமித்து வைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.19.3 மின் ஆவணக் காப்பகம்

மின்னணு முறையில் மதிப்பெண் சான்றிதழ்களை வழங்குதல், ஆய்வு செய்தல் மட்டுமல்லாமல், காகித வடிவிலான ஆவணங்களை கையாள்வதை தவிர்ப்பதற்கும் மின்ஆவணக் காப்பகம் ஒரு சிறந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வெழுதி, ஆதார் எண்ணைக் குறிப்பிட்டு Digilocker Account கோரிய அனைத்து மாணாக்கரும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தகவல் களஞ்சியம் வாயிலாக மின்னணு மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மார்ச் 2017 தேர்வு பருவத்தில் மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத் தேர்வெழுதிய 19,44,184 தேர்வர்களுக்கு மின்னணு மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான மின்னணு கணக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

### 5.20 நிதி ஒதுக்கீடு

தேர்வுகளை சுமூகமான முறையில் நடத்திட 2018-19 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.114.55 கோடி இவ்வியக்ககத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் மாணாக்கர்கள், பெற்றோர் மற்றும் சமுதாயத்தின் நலன் கருதியே முன்னெடுத்து செல்லப்படுகிறது. கடந்த வருடங்களில் பல புதுமையான முயற்சிகளைப் புகுத்தித் தேர்வுகளை நடத்துவதிலும், தேர்வு முடிவுகளை வெளியிடுவதிலும் எளிய மற்றும் நியாமான முறையில் நிரூபித்துக் கொண்டு இருக்கின்றது. இனிவரும் காலங்களில் அனைத்து நிலைகளிலும் மென்மேலும் பல உயரிய இலக்கினை எய்திட அரசுத் தேர்வுகள் இயக்ககம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

# 6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

## 6.1 முன்னுரை

தமிழகத்தில், கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் எழுத்தறிவின்மை நிலையை நீக்கிடும் வகையில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககமானது, 15 வயது மேற்பட்டவர்களுக்கு எழுத்தறிவை வழங்குதல் என்கிற உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த 1976 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வியக்ககத்தின் வாயிலாக தொடர் கற்போர்கள், தான் பெற்ற கல்வி சார் திறன்களைத் தொடர்ந்து தக்க வைத்திடவும், அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பதை ஊக்குவித்திடும் வகையிலும், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம், கற்போர்களுக்கான பள்ளிசாரா கல்வி, மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், முழு எழுத்தறிவு இயக்கம், தொடர் கல்வி, வளர்கல்வி இயக்கம், கற்கும் பாரதம் மற்றும் சமநிலைக் கல்வி ஆகிய வயது வந்தோருக்கான திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககமானது, கற்போர்களின் திறன்களை மேலும் மேம்பாடு அடையச்செய்திடவும், அவர்களைத் தொடர்ந்து வருவாய் ஈட்டச்செய்திடவும், பற்பல வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதை உறுதி செய்திடவும், அவர்களின் சமுதாயம் சார் திறன்களில் மேம்பாடு அடையச்

செய்தல் அடிப்படையிலும், தொழிற்திறன் பயிற்சி வழங்குதலை முக்கிய நோக்கமாகவும் கொண்டுள்ளது.

**6.2 தொலைநோக்கு**

அடிப்படை எழுத்தறிவு, தொழிற்திறன் கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலின் மூலம் முழு எழுத்தறிவு நிலையை அடைந்திடுதல்.

**6.3 நோக்கங்கள்**

- தரமான அடிப்படை எழுத்தறிவைக் கற்போர்களுக்கு வழங்கிட வழிவகை செய்தல்
- தொடர் கற்போர்கள் பள்ளிக்கு நிகரான கல்வியை இயல்பாகப் பெறச் செய்தல்
- தொழிற்திறன் பயிற்சிகளின் வாயிலாக வருவாய் திறனை மேம்படச் செய்தல்
- தொடர் கற்போர்களை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் தயார் செய்தல்

**6.4 கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்துதல்**

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், பெண்கள் எழுத்தறிவு 50 விழுக்காட்டிற்கும் குறைவாகப் பெற்றுள்ள தருமபுரி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், அரியலூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 9 மாவட்டங்களில் கற்கும் பாரதம் திட்டம் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 3, 5 மற்றும் 8 ஆகிய வகுப்புகளுக்கு நிகரான பள்ளி சாராக் கல்வியை, கற்போர்கள் பெற்றிடும் வகையில் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தில், 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள், பட்டியல் இனத்தவர்

மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் பிற வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, 24.57 இலட்சம் எழுத்தறிவு பெறாத வயது வந்தோரை இலக்காகக் கொண்டு அவர்கள் அனைவரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக்கிடுதலை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தை முழுஎழுத்தறிவு பெற்ற மாநிலம் என்ற நிலையை அடையச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கற்கும் பாரதம் திட்டமானது ரூ.160.90 கோடி மொத்தத் திட்ட மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் 75:25 என்ற நிதிப்பங்களிப்புடன் 2014-15 ஆம் நிதியாண்டு வரை செயல்படுத்தப்பட்டது. மேலும், 2015-16 ஆம் நிதியாண்டு முதல் 60:40 என்ற நிதிப்பங்களிப்புடன் மாற்றி அமைக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.4.1 கற்கும் பாரதம் திட்டம் - வயது வந்தோர் கல்வி மையங்கள்

3602 வயது வந்தோர் கல்வி மையங்கள் கிராமப் பஞ்சாயத்து அளவில் 9 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாக மேலாண்மை, கல்வி மற்றும் தொழில் நுட்பச் செயல்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக அடிப்படை எழுத்தறிவு மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்கும் வாய்ப்பை கற்போருக்குக் கள அளவில் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளன. கற்கும் பாரதம் திட்ட வழிகாட்டு விதிகளின் படி, 26 மாவட்ட

ஒருங்கிணைப்பாளர்களும், 100 ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்களும், 5389 மையப் பொறுப்பாளர்களும் மதிப்பூதிய அடிப்படையில், வயது வந்தோர் கல்வி மையங்களில் பயின்று வருகின்ற கற்போர்களுக்கு அடிப்படை எழுத்தறிவை கற்பித்திடும் வகையில் பணிபுரிந்து வருகின்றனர். அடிப்படைக் கல்வி, தொழிற்திறன் மேம்பாடு மற்றும் சமநிலைக்கல்வி ஆகியன இவ்வயது வந்தோர் கல்வி மையங்களில் கற்போர்க்கு வழங்கப்பட்டு வருகின்றன.


### 6.4.2 வயது வந்தோர் கல்வி மையங்களில் கற்போர்களுக்கான அடிப்படை எழுத்தறிவு

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடத்திட்டத்தினைக் கொண்டு வயது வந்தோர் கல்வி மையங்களில் உள்ள கற்போர்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றன. அடிப்படை எழுத்தறிவுத் திட்டத்தில் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படைக் கணக்குத் திறன்களை உள்ளடக்கியுள்ள பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 300 மணி நேரம் பயிற்சி வழங்கி ஆண்டுதோறும் ஆகஸ்டு மற்றும் மார்ச் மாதங்களில் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

### 6.4.3 வயது வந்தோர் கல்வி மையங்களில் தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு

கடந்த 2012 ஆம் ஆண்டில், தகவல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் உபகரணங்களின் வாயிலாகக் கற்போர்கள் தரமான கல்வியைப் பெற்றிடும்

வகையில் அரியலூர், தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் 40 வயது வந்தோர் கல்வி மையங்களுக்குக் கணினிகள் மற்றும் இதர பொருள்களை ரூ.1 கோடி மதிப்பில் வழங்கி வசதிகள் செய்யப்பட்டு அவை மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த 2016-17 ஆம் ஆண்டில், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 10 வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு (தலா 5 மையங்கள்) மாநிலப் புதுமைச் செயல்பாடுகள் திட்டத்தின்கீழ் ரூ. 25 இலட்சம் செலவில் மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.



மாதிரி வயது வந்தோர் கல்வி மையம்

இம்மையங்களில், கற்போருக்கு மேற் குறிப்பிட்டுள்ள தகவல் மற்றும் தொழில்நுட்பப் பொருட்களைப் பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இம்முறையானது, கல்லாதோர் மத்தியில் கல்வி கற்கும் திறனை மேலும் உயர்த்திட உதவியாக உள்ளது. இம்மாதிரி வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக

இதுவரை 26,857 திறன் மேம்பாட்டு செயல்பாடுகளுக்கான பயிற்சி பெற்றுள்ளனர்.

### 6.4.4 திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள்

கற்போர் மையங்களானது, 3602 கிராம பஞ்சாயத்துகளில் கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்பது மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் கற்போருக்குஅடிப்படை எழுத்தறிவுக் கல்வியோடு, அவர்கள் வருமானம் ஈட்டும் வகையில் செயற்கை ஆபரணத் தயாரிப்பு, பினாயில் தயாரித்தல், சோப்பு எண்ணெய் மற்றும் சோப்புப் பவுடர் தயாரித்தல், மெழுகு மற்றும் வாசனைப் பொருள்கள் தயாரித்தல், பொம்மைகள் தயாரித்தல், சம்கி வேலைப்பாடு பயிற்சி, எம்ராய்டரி மற்றும் தையல் பயிற்சி ஆகிய தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.



கைவினைப் பொருட்கள் தயாரிப்பு


மேலும், கற்போர்களுக்கு தொழிற் திறன் பயிற்சிகளோடு, நிதி அறிவுத்திறன் கல்வி, சட்ட அறிவு, கடமைகள் மற்றும் உரிமைகள், தேர்தல் விழிப்புணர்வுக் கல்வி, பேரிடர் மேலாண்மை மற்றும் குடிமைப் பாதுகாப்பு

ஆகியவற்றிலும் பயிற்சிகள் தனி நபர் ஊடக இயக்கம் மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

**தொழிற்திறன் பயிற்சியில் சாதனைச் சுவடு**

**கற்கும் பாரதம் திட்டம்**

**பெருந்துறை வட்டாரம் – ஈரோடு மாவட்டம்**



என் பெயர் A. கோமதி. கணவர் பெயர் அர்த்தனாரி. நான் கருக்கம்பாளையம் ஊராட்சி கூதாம்பியில் 24 வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு படிக்கவோ எழுதவோ தெரியாது. கற்கும் பாரதம் மையம் மூலம் ஓரளவு படிக்கவும், எழுதவும், மேலும் சோப்பு ஆயில் செய்யவும் கற்றுக்கொண்டேன். சோப்பு ஆயிலை எனது கிராமம் மற்றும் திங்களூர் கிராமத்தில் விற்பனை செய்து வருமானம் ஈட்டி வருகிறேன்.


இப்படிக்கு

A. கோமதி

### 6.4.5 கற்கும் பாரதம் திட்டத்தின் கீழ் அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு

கற்போர்களுக்கு, தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையம் மற்றும் தேசிய திறந்த நிலைப்பள்ளி நிறுவனம் இணைந்து கற்போருக்கான அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டு தேர்வினை நடத்தி சான்றிதழ் வழங்குகிறது. தமிழகத்தில், இத்திட்டம் செயல்படும் கல்வியில் பின்தங்கியுள்ள 9 மாவட்டங்களில், கடந்த ஆகஸ்டு, 2017 வரை மொத்தம் 24.67 இலட்சம் பேர் அடிப்படை எழுத்தறிவை முடித்து தேசிய திறந்தநிலைப் பள்ளி நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்றுள்ளனர்.

2018 மார்ச் மாதம் 25ஆம் தேதி அன்று நடைபெற்ற அடிப்படை எழுத்தறிவுத் தேர்வில் முன் குறிப்பிடப்பட்டுள்ள கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வயது வந்தோர் கல்வி மையங்களில் 74,156 கற்போர்கள் பங்கேற்றுள்ளனர். தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம், அடிப்படை எழுத்தறிவைப் பெற்றுவரும் கற்போர்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கீழ்க்காணும் வரைபடத்தின் வாயிலாக அறிய முடிகிறது.




## அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை வெற்றிகரமாக முடித்துள்ள கற்போர்களின் விவரம்

| வருடம் | அடிப்படைத் தேர்வில் தேர்ச்சி பெற்றோர் | அடிப்படை எழுத்தறிவில் முன்னேற்றம் |
|---|---|---|
| 2010-11 | 267555 | 10.89 |
| 2011-12 | 1512607 | 61.55 |
| 2012-13 | 1726088 | 70.23 |
| 2013-14 | 1793393 | 72.97 |
| 2014-15 | 2136756 | 86.94 |
| 2015-16 | 2272387 | 92.46 |
| 2016-17 | 2388596 | 97.19 |
| 2017-18 | 2467040 | 100.40 |
| 2017-18 இலக்கு | 74,156 | - |

ஆதாரம்: ப.ம.வ.க.இ

### 6.4.6 சமநிலைக் கல்வித் திட்டம்

தமிழகத்தில், கற்கும் பாரதம் திட்டத்தின் ஓர் உட்கூறாக, திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள 46,472 தொடர் கற்போர்களுக்கு 3 ஆம் வகுப்பிற்கு நிகரான கல்வியையும், விழுப்புரம், தர்மபுரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களில் 25,570 தொடர் கற்போர்களுக்கு 5 ஆம் வகுப்பிற்கு நிகரான கல்வியையும் சமநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



சமநிலைக் கல்வித் திட்டம்

### 6.5 மெய்நிகர் வகுப்பறை

வயது வந்தோருக்கான கல்வித் திட்டதில் ஒரு புதுமையான முயற்சியாக, சமநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் நிலை A (III) மற்றும் நிலை B (V) ஆம் வகுப்புகளுக்கு நிகரான கல்வி சார் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகளானது, தொழில்நுட்பக் கருவிகளை

ஒருங்கிணைத்து கற்கும் பாரதம் செயல்படுத்தப்படும் 9 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மெய்நிகர் வகுப்பறை (SMART VIRTUAL CLASS ROOMS) முனையங்கள் வழியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலக் கருவூல மைய கல்வி சார் அலுவலர்கள், அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கற்கும் பாரதம் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்போடு சமநிலைக் கல்வித் திட்ட மைய பயிற்றுநர்கள் மற்றும் கற்போர்களுக்கு தமிழ், கணிதம், சூழ்நிலையியல் மற்றும் கணினி அடிப்படைத் திறன்கள் ஆகிய பாடங்களில் நேரடி மற்றும் கலந்தாலோசனை அடிப்படையில் மெய்நிகர் வகுப்பறைகள் மூலம் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே இம்முயற்சியானது வயது வந்தோர் கல்வித்திட்டத்தில் ஒரு புதிய முயற்சியாகும்.






மெய்நிகர் வகுப்பறை முனையம், DIET,சென்னை

### 6.6 வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் தாக்கம்

தமிழக அரசானது, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாக பெண்கள் எழுத்தறிவு விழுக்காட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்ட 9 மாவட்டங்களில் பெண்கள் எழுத்தறிவு விழுக்காட்டில் உண்டாகியுள்ள குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தைக் கீழ்க்காண் வரைப் படங்களின் வாயிலாகக் காணலாம்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001 லிருந்து 2011 வரை - பெண்கள் எழுத்தறிவு விழுக்காட்டில் முன்னேற்றம்**

| 2001இல் நிலை | | 2011இல் நிலை | |
|---|---|---|---|
| மாவட்டம் | எழுத்தறிவு விகிதம் | மாவட்டம் | எழுத்தறிவு விகிதம் |
| பெரம்பலூர் | 54.26 | அரியலூர் | 62.22 |
| | | பெரம்பலூர் | 66.11 |
| விழுப்புரம் | 53.16 | விழுப்புரம் | 63.51 |
| திருவண்ணா மலை | 56.31 | திருவண்ணா மலை | 65.71 |
| தருமபுரி | 49.10 | தருமபுரி | 60.03 |
| | | கிருஷ்ணகிரி | 64.86 |
| சேலம் | 55.61 | சேலம் | 65.43 |
| ஈரோடு | 55.26 | ஈரோடு | 66.11 |
| | | திருப்பூர் | 72.07 |

6.7 சாதனைகள்

இந்தியாவிலேயே, கற்கும் பாரதம் திட்டத்திற்கென நிர்ணயிக்கப்பபட்ட இலக்கினை 100% முழுமையாக எட்டியுள்ள ஒரே மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. கற்கும் பாரதம் திட்டத்தின் இலக்கான 24.57 இலட்சம் கல்லாதோர் என்பதை தாண்டி 24.67 இலட்சம் பேர் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், வயது வந்தோர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தமிழகமானது கடந்த 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தேசிய எழுத்தறிவு விருதுகளைப் பெற்றுள்ளது.

- 2013 ஆம் ஆண்டில்,
  அரியலூர் மாவட்டம் சிறந்த மாவட்டத்திற்கான விருதைப் பெற்றுள்ளது. ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஒன்றியத்திலுள்ள குப்பாண்டம்பாளையம் சிறந்த கிராமப் பஞ்சாயத்துதிற்கான விருதைப் பெற்றுள்ளது
- 2015 ஆம் ஆண்டில்,
  மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையமானது, கற்கும் பாரதம் திட்டத்தில் சிறப்பான பங்களிப்பினை அங்கீகரித்து தேசிய எழுத்தறிவு விருதைப் பெற்றுள்ளது. தருமபுரி மாவட்டம் சிறந்த மாவட்டத்திற்கான விருதைப் பெற்றுள்ளது. சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள பாலமலை கிராம பஞ்சாயத்தானது சிறந்த கிராமப் பஞ்சாயத்திற்கான விருதைப் பெற்றுள்ளது

- 2016 ஆம் ஆண்டில்,
  **சேலம் மாவட்டம், சேலம் ஊரக ஒன்றியத்திற்குட்பட்ட வட்டமுத்தாம்பட்டி சிறந்த கிராம பஞ்சாயத்திற்கான, தேசிய எழுத்தறிவு விருதினைப் பெற்றுள்ளது. கல்விசார் திட்டங்களில் தமிழக அரசின் அளப்பரிய செயல்பாடுகளே இப்பெருமை மிகு விருதுகளைப் பெற அடித்தளமாக அமைந்தன**

## 6.8 **நிதி ஒதுக்கீடு**

2018-19 ஆம் நிதியாண்டிற்கு வரவு செலவு திட்டத்தில் **ரூ.29.59 கோடி** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 7. பொது நூலகங்கள்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு

**- திருவள்ளுவர்**

## 7.1 முன்னுரை

பொது நூலகங்கள் மக்களின் கல்வி, பண்பாடு, மற்றும் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தகவல் மையங்களாகும். மாறி வரும் தகவல் தொழில்நுட்ப சூழலில், உலகளாவிய மாற்றங்களை மக்களுக்கு உணர்த்துவதில் பெரும் பங்காற்றி வருவதுடன், வாழ்நாள் கற்றல் மற்றும் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் உன்னதப் பணியின் முக்கியத்துவம் அறிந்து செயலாற்றி வருகிறது. வாசகர்களின் தேடல் மற்றும் கற்றல் வளங்கள் சார்ந்து குறைந்த செலவில் நிறைந்த மக்களின் ஆர்வம் மற்றும் தேவைக்கேற்ப புதுமையான உத்திகளைப் புகுத்தி, எல்லைகளையும், நோக்கங்களையும் விரிவுபடுத்தி செயல்படுத்துதல் என்ற இலக்கினை அடையப் பொது நூலகங்கள் அதிமுக்கியவத்துவம் அளித்து செயல்பட்டு வருகின்றன.

**இலக்கு**

சமுதாயத்திற்குத் தேவைப்படும் தகவல் மற்றும் அறிவாற்றலை வளர்ப்பதற்கான நெறிமுறைகளை ஆராய்தல், உருவாக்குதல் மற்றும் பகிர்ந்து கொள்ளும் பணியில் மக்களை ஒருங்கிணைத்து சமூக உருவாக்கத்தினை வலுப்படுத்துவதே இதன் இலக்கு.

**தொலைநோக்கு**

சமத்துவம், பாதுகாப்பு மற்றும் வரவேற்கத்தக்க உன்னதமான சூழலை உருவாக்கி, ஆக்கப்பூர்வமான தகவல் மற்றும் எண்ணங்களுடன் மக்களை ஒருங்கிணைத்தல்.

**7.2 நோக்கங்கள்**

- மக்களுக்குத் தரமான தகவல்களைக் குறித்த நேரத்தில் நேர்த்தியான முறையில் வழங்குதல்
- நூலகங்களில் வலுவான, பொருத்தமான வளங்களைத் உருவாக்குதல்
- புதுமையான சேவைகளுடன் மக்களை ஒருங்கிணைத்தல்.
- நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, நூலகங்களை மேம்படுத்துதல்
- நமது கலாச்சாரக் கருப்பொருட்கள் மற்றும் ஆவணங்களை மின்னணு வடிவில் பாதுகாத்தல்
- அனைத்து சேவைகளையும் உள்ளடக்கியதாக நூலகங்களை உருவாக்குதல்

**7.3 தமிழகத்தில் நூலகங்கள்**

உலகத் தரத்திலான நூலக அமைப்பினை உருவாக்கி, வாசிக்கும் தன்மை, ஆராய்ச்சிப் பணிகளுக்கான உதவி மற்றும் மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களைப் பொலிவுடன் வழங்குவதற்கேதுவாக, தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இன் படி பொது நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு வாசகர்களின் தகவல்

தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக கீழ்க்காணும் 4,622 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| | | |
|---|---|---|
| 1 | கன்னிமாரா பொது நூலகம் (மாநில மைய நூலகம்) | 1 |
| 2 | அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| 3 | மாவட்ட மைய நூலகங்கள் | 32 |
| 4 | கிளை நூலகங்கள் | 1926 |
| 5 | நடமாடும் நூலகங்கள் | 14 |
| 6 | ஊர்ப்புற நூலகங்கள் | 1915 |
| 7 | பகுதிநேர நூலகங்கள் | 733 |
| | மொத்தம் | 4622 |

### 7.3.1 கன்னிமாரா பொது நூலகம்

கன்னிமாரா பிரபு அவர்களின் விருப்பத்தினை நிறைவேற்றும் விதமாக "கன்னிமாரா பொது நூலகம்" எனப் பெயரிடப்பட்டு, உருவாக்கப்பட்டது. சென்னை மாகாண ஆளுநர் சர் ஆர்தர் எலி பங்க் ஹாலக் அவர்களால் 05.12.1896 அன்று பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. கி.பி.1553 க்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த அரிய நூல்கள், 8,49,779 நூல்களுடன், 3,500 பருவ இதழ்கள் மற்றும் 160 நாளிதழ்களை இந்நூலகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம், இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித் தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியினைப் பெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் வெளியீடுகள் மற்றும் பதிப்புகளின் வைப்பு நூலகமாகவும் செயலாற்றி வருகிறது.




கன்னிமாரா பொது நூலகம் - சென்னை (பழைய படம்)

பருவ இதழ் பிரிவு, இந்தியா முழுவதும் அகில இந்திய மொழிகளில் வெளியிடப்படும் நூல்களைக் கொண்ட மொழியியல் பிரிவு, பாடநூல்கள் பிரிவு, குடிமைப்பணி கல்வி மையம், அரிய நூல்கள் பிரிவு ஆகிய சில பிரிவுகள் பொது மக்களால் தொடர்ந்து பயன்படுத்தப்படும் பிரிவுகள் ஆகும். இணைய இதழ்கள் மற்றும் மின் புத்தகங்களின் அரிதான தொகுப்புகளடங்கிய

இலக்கமுறை சேவையினை 24 மணி நேரமும் பயனாளிகளுக்கு வழங்கி வருகிறது.

இந்நூலகப் பராமரிப்புப் பணிகளுக்காக தமிழக அரசால் தொடர் செலவினத்தில் 50% மற்றும் தொடராச் செலவினத்தில் 1/3 பங்கு செலவிடப்பட்டு வருகிறது. எஞ்சிய செலவினம் மைய அரசால் வழங்கப்படுகிறது. 2017-18 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட மொத்த மானியம் ரூ.44.00 இலட்சம் ஆகும்.

### 7.3.2 அண்ணா நூற்றாண்டு நூலகம்

அண்ணா நூற்றாண்டு நூலகம் மிகுந்த கலைநயத்துடன், பசுமைக் கட்டட அமைப்பிற்கான ஆற்றலுடன் 3.75 இலட்சம் சதுர அடியில் ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக சென்னை, கோட்டூர்புரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது, இந்நூலகம் சுமார் 5.71 இலட்சம் பலதரப்பட்ட பொருள்கள் அடங்கிய நூல்களை உள்ளிருத்தி வாசகர் சமூகத்திற்கு சேவையாற்றி வருகிறது.




அண்ணா நூற்றாண்டு நூலகம் - சென்னை

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உள்ள நூல்களின் தொகுப்பு முழுவதும் இணைய வழியாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும், விரைவாகவும் அணுகும் வகையில் இந்நூலகத்தில் ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூல்களுக்கு RFID குறியிடுதல் முறையினால் தானியங்கி செயல்பாட்டின் மூலம் நூல்கள் பாதுகாக்கப்படுகின்றன. கண்காணிப்புப் புகைப்படக் கருவிகள் தகுதியான இடங்களில் நிறுவப்பட்டுள்ளதன் வாயிலாக நூலக வளாகத்தில் பாதுகாப்பு சட்டப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் தனித்துவமாக விளங்கும் பார்வையற்றோருக்கான பிரிவில் 2,000 க்கும் மேற்பட்ட பதிவுபெற்ற உறுப்பினர்கள் மற்றும் 950 க்கும் மேற்பட்ட இணையதள உறுப்பினர்கள் (brailleacl.googlegroups.com) உள்ளனர். இப்பிரிவில் 2,600

க்கும் மேற்பட்ட பிரெய்லி நூல்கள், ஒலித்தொகுப்பின் குறுந்தகடுகள், DVD மற்றும் 1.1 TB பிற இலக்கமுறைப் பொருட்கள் உள்ளன.

15,000 சதுர அடியில் பரந்து விரிந்து, 1.6 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள், பலதரப்பட்ட ஊடக உபகரணங்கள், செயற்கை முறையில் அமைக்கப்பட்ட மரம் ஆகியவற்றைக் கொண்ட குழந்தைகள் பிரிவு 4 முதல் 14 வயதுடைய குழந்தைகள் மகிழ்ச்சியாக, கருத்தாழத்துடன் படிப்பதற்கேற்ற இடமாகவும், திறமைகளை வளர்ப்பதற்கான மேடையாகவும் உள்ளது. கதை சொல்லுதல், வினாடி-வினா, அறிவியல் ஆய்வுகள், பொம்மலாட்டம், சதுரங்க வகுப்புகள் மற்றும் பிற சிறப்பு நிகழ்ச்சிகள் குழந்தைகளுக்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்பட்டு வருகிறது.



அண்ணா நூற்றாண்டு நூலகம் - குழந்தைகள் பிரிவு

கீழ்த்திசை சுவடிகள் நூலகப் பிரிவில், விலை மதிப்பற்ற 50,180 பனை ஓலைச் சுவடிகள் மற்றும் 22,134 காகிதச் சுவடிகள் உள்ளன. இந்நூலகம் தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற தொன்மையான இந்தியக் கலாச்சாரம் சார்ந்த துறைகளில் முனைவர் மற்றும் ஆய்வு நிலை நிறைஞர் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான ஆராய்ச்சி மையமாக சென்னைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2017-18 ஆம் நிதியாண்டில் அண்ணா நூற்றாண்டு நூலகப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.449.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 7.3.3 தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

உலகப் புகழ் பெற்ற அறிவுக் களஞ்சியமாகவும், அரிய பனை ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பழமை வாய்ந்த அரிய நூல்களைக் கொண்டதாக "தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்" திகழ்கிறது.



சரசுவதி மகால் நூலகம் - தஞ்சாவூர்

இந்தியாவின் பழமை வாய்ந்த நூலகங்களில் ஒன்றான இந்நூலகம் 1535 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மன்னர் சரபோஜி (1798-1832) காலத்தில் தனது புகழின் உச்சத்தை அடைந்தது. 1918 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டியம் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சுமார் 47,334 சுவடிகளில் 24,165 பனை ஓலைச் சுவடிகள் மற்றும் 23,169 காகிதச் சுவடிகள், 45,000 புத்தகங்கள், கலை, பண்பாடு மற்றும் இலக்கியம் சார்ந்த வரைபடங்கள், ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் உள்ளன. 3,578 பழமையான, மதிப்புமிக்க, அரிய கையெழுத்துப் பிரதிகள் இலக்கமுறைப்படுத்தப்பட்டன. தஞ்சாவூரின் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒலி-ஒளிக் காட்சி மற்றும் ஆவணப்படம் இந்நூலகத்தில் திரையிடப்படுகிறது. 2013 ஆம் ஆண்டில் இந்நூலகத்தை சர்வதேச ஆராய்ச்சி

நூலகமாக தரம் உயர்த்திடும் பொருட்டு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தலைமையின் கீழ் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975 இன்படி, 1986 இல் அன்றைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் காலஞ்சென்ற டாக்டர்.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின் படி தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம் தமிழ்நாடு பதிவாளர் சங்கத்தின் கீழ் பதிவுபெற்ற சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. இந்நூலகத்தின் வளர்ச்சிக்கும், பணியாளர்களின் நலனுக்குமான பராமரிப்பு மானியத்தை தமிழ்நாடு அரசு ரூ.40 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தியுள்ளது. மேலும், 2017-18 ஆம் நிதியாண்டில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் உட்பட பிற செலவினங்களுக்கான பராமரிப்பு மானியத் தொகையாக ரூ.117.65 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 7.3.4 டாக்டர். உ. வே. சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

தமிழறிஞரும், நூல் ஆராய்ச்சியாளருமான டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவாக அவரது புதல்வர் திரு.சா.கலியாணசுந்தரம் மற்றும் திருமதி.ருக்மணி தேவி அருண்டேல் ஆகியயோர் பெரும் முயற்சியால் 05.07.1943 அன்று டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் நூலகம் தொடங்கப்பட்டது. இந்நூலகத்திற்கான புதிய கட்டடம் 22.04.1967 அன்று திறக்கப்பட்டது. இந்நூலகத்தில் தொன்மை வாய்ந்த 2,200 அரிய தமிழ் நூல்கள் ஓலைச்சுவடிகளாகவும் மற்றும் மகாவித்துவான்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. மேலும், தமிழறிஞர்கள் பலர் டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்களுக்கு எழுதிய 3,421 கடிதங்கள், தனிப்பாடல்கள், 1883 முதல் 1939 முடிய டாக்டர்.உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள் மற்றும் பயன்படுத்திய பொருட்கள், 37,355 புத்தகங்கள், 855 கையெழுத்துப் பிரதிகள் மற்றும் சேகரித்த 2,170 பனை ஓலைச் சுவடிக் கட்டுகள் போன்றவற்றை இந்நூலகம் பாதுகாத்து வருகிறது. 1923 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பழமையான, அரிய, அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் கடிதங்கள் இலக்கமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகத்தின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்கும், பணியாளர்களின் நலனுக்கும் அரசு ஒவ்வோர் ஆண்டும் மானியம் அனுமதியளித்து வருகிறது. 2017-18 ஆம் நிதியாண்டில் மானியமாக ரூ.17.88 இலட்சம் வழங்கியுள்ளது.

**7.3.5 மறைமலை அடிகள் நூலகம்**

புத்தகங்கள் மீது தீராத பற்றுக் கொண்ட மறைமலை அடிகள், தமது வருமானத்தின் பெரும் பகுதியை ஆய்வு நோக்கிலான வாசகர்களுக்குப் பயன் தரும் நூல்களை வாங்கி, பாதுகாத்து வந்ததைத் தொடர்ந்து, அன்னாரது மறைவுக்குப் பின் 1958 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ வி.சுப்பையா பிள்ளை என்பவரால் மேற்படி நூல்களுடன் பல அரிய வகை நூல்களையும் சேர்த்து, சென்னை லிங்கி செட்டி தெருவில் “மறைமலை அடிகள் நூலகம்" துவக்கப்பட்டது. தற்போது இந்நூலகம் கன்னிமாரா பொது நூலக

வளாகத்தில் செயல்பட்டு வருகின்ற போதிலும், தொடர்ந்து தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நூலகத்தில் உள்ள 80,000 புத்தகங்களில் 1,400 புத்தகங்கள் பழமை வாய்ந்த அரிய நூல்களாகும். ஒவ்வோர் ஆண்டும் ரூ.1.00 இலட்சம் பராமரிப்பு மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**7.4 மாவட்ட மைய நூலகங்கள்**

தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950, விதி எண். 45 (2) (அ) மற்றும் 45 (4) (அ) இன்படி மாவட்ட மைய நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 32 மாவட்ட மைய நூலகங்கள் பின்தங்கிய மற்றும் ஏழை மக்களின் கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும், தரம் வாய்ந்த அறிவு சார்ந்த தகவல்களை வழங்கும் வகையிலும் செயலாற்றி வருகின்றன. மிகக் குறைந்த கட்டணத்தில் ஒருவர் நூலக உறுப்பினராக முடியும். நூலகத்தின் அண்மையில் வசிக்கும் எவரும், காப்புத்தொகை ரூ.50 செலுத்தி நூலகத்தின் உறுப்பினராகப் பதிவு செய்து, ஒரே நேரத்தில் அதிகபட்சமாக மூன்று நூல்களை இரவல் பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்பட்டு வருகிறது. எவ்வித பாகுபாடும் இன்றி ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ஆண்டு சந்தாவாக ரூ.10 பெறப்படுகிறது. இதுநாள் வரை 10,12,181 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் மற்றும் 32,73,611 வாசகர்கள் நூலகங்களை பயன்படுத்தி உள்ளனர். இந்நூலகங்கள் பல்வேறு துறை சார்ந்த 31,42,210 நூல்கள் மற்றும் விரிவான பத்திரிகைத் தொகுப்புகளுடன் செயல்படுகின்றன. ஒவ்வொரு மாவட்ட மைய நூலகமும்

பருவ இதழ்கள், பார்வைக் குறிப்பு நூல்கள், குடிமைப்பணி தேர்வுகள் , பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சொந்த நூல்கள் வாசிக்கும் பிரிவுகளுடன் இணைய வசதி செய்யப்பட்டுள்ளது.

**7.5 கிளை நூலகங்கள்**

பெருமளவிலான மக்கள் தொகைக்குச் சேவையாற்றும் நோக்கில், 5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட நகர மற்றும் கிராமப்புற பகுதிகளில் அமைக்கப்பட்டதே கிளை நூலகங்கள். தற்போது சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள் கொண்டுள்ள 1,926 கிளை நூலகங்கள் மூலம் 56,12,613 உறுப்பினர்களும் 2017-18 ஆம் ஆண்டில் மட்டும் 3,87,31,144 பார்வையாளர்களும் பயன் பெற்றுள்ளனர். மேலும், இந்நூலகங்களில் குழந்தைகள், மாணாக்கர்கள், பெண்கள், பணிநாடுவோர் மற்றும் முதியோர்களுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றன. இத்துறை மூலம் நடைமுறைப் படுத்தப்பட்ட "வகுப்பறை நூலகம்" என்ற திட்டத்தின் வாயிலாக 3,593 பள்ளிகளைச் சேர்ந்த 16,94,367 மாணாக்கர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**7.6 ஊர்ப்புற நூலகங்கள்**

கிராமப்புற மக்களை உறுப்பினர்களாகச் சேர ஊக்குவிக்கும் உன்னதத் திட்டத்தின்படி, 1996 ஆம் ஆண்டு முதல் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சமுதாயத்தில் உயர் மதிப்பைப் பெற களம் அமைத்து நல்கும் இடமாகவும், மக்களை ஒருங்கிணைக்கும் இடமாகவும் செயல்படும் ஊர்ப்புற நூலகங்களிலுள்ள

1,02,81,883 நூல்களின் மூலம் 17,77,976 உறுப்பினர்கள் மற்றும் 1,61,24,317 வாசகர்கள் பயன் பெற்றுள்ளனர். மின்னணு யுகத்தில் நவீன தொழில்நுட்ப வசதியினைப் பயன்படுத்தி ஊர்ப்புற நூலகங்களில் கணினி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 7.7 நடமாடும் நூலகங்கள்

மலைப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களைச் சென்றடையும் வகையில், புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களைத் தன்னகத்தே தாங்கி, வாகனத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள 14 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தொகுக்கப்பட்ட புத்தகங்கள், நில வரைபடங்கள், குறுந்தகடுகள் போன்றவற்றுடன் படைப்பாற்றல், தொடர் முன்னேற்றம் மற்றும் சமூக ஒத்துழைப்பை உருவாக்கும் பணியில் ஆர்வம் கொண்டு செயல்படுத்தப்பட்டதன் விளைவாக, 1,33,099 பார்வையாளர்கள் மற்றும் 26,019 உறுப்பினர்கள் நடமாடும் நூலகங்கள் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

### 7.8 பகுதிநேர நூலகங்கள்

வளர்ந்து வரும் மாநிலத்தில், முழுமையான கல்வியறிவு என்ற இலக்கினை அடைவதற்கு, அடித்தட்டு நிலையிலும் பயனுள்ள பொது நூலகச் சேவையை செயல்படுத்துவது இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950, விதி எண்.45(4)(சி) இன்படி ஒவ்வொரு கிராமத்திலும் பகுதி நேர நூலகங்கள் அல்லது புத்தக விநியோக மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் உள்ள 733

பகுதிநேர நூலகங்களின் வழியாக 2017-18 ஆம் ஆண்டில் 2,45,694 உறுப்பினர்கள் மற்றும் 25,37,602 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

## 7.9 மாநில ஆதார வளமையம்



பிசியோதெரப்பி – மாநில ஆதார வளமையம் - சென்னை

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க, மாநில ஆதார வளமையத்தில் ரூ.17.00 இலட்சம் செலவில் நூலகப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் புத்துயிர் பெற்று ஆற்றலை வளர்க்கும் நோக்கத்தில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆதார வளங்களுடன் இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வகைப்பட்ட குறைபாடுகள், சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்கு இம்மையத்தில் தனிப்பிரிவு உள்ளது.

### 7.10 நிதி ஆதாரம்

#### 7.10.1 நூலக வரி

பொது நூலகங்களின் செயல்பாடுகளுக்கான முக்கிய வருவாய் வசூலிக்கப்படும் வீட்டு வரி / சொத்து வரியில் பெறப்படும் நூலக வரியாகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இல் பிரிவு 12 (1) (a) இன்படி, 1950 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய்க்கு 3 காசுகள் வீதம் வசூலிக்கப்பட்டு வந்த நூலக வரியானது, நூலக ஆணைக்குழுக்களின் அதிகரித்து வரும் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அரசாணை (நிலை) எண்.252, கல்வித் துறை, நாள் 22.02.1972 இன்படி, 01.04.1972 முதல் ரூபாய்க்கு 5 காசுகள் என உயர்த்தியும், அரசாணை (நிலை) எண்.492, கல்வித் துறை, நாள் 19.05.1992 இன்படி, 01.04.1992 முதல் ரூபாய்க்கு 10 காசுகள் எனவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நூல்கள் வாங்குதல், செய்தித் தாள்கள் / பருவ இதழ்கள் வாங்குதல், தகவல் தொழில்நுட்ப வசதிகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுதல் / பராமரித்தல், அரிய மற்றும் பழமையான நூல்களை மின்னுருவாக்கம் செய்தல், நூலகங்களை அறிவுசார் தகவல் மையங்களாக மாற்றுதல், இணையதள சேவைகளை ஏற்படுத்துதல் உட்பட அனைத்து பணிகளுக்குமான செலவினங்கள் யாவும் நூலக வரியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. 2017-18 ஆம் நிதியாண்டில் ரூ.138.24 கோடி நூலக வரி வசூலிக்கப் பட்டுள்ளது.

### 7.10.2 இராஜா ராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்

இராஜா ராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை இந்தியாவில் உள்ள பொது நூலகங்கள் யாவற்றையும் கண்காணித்து, வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தி, ஒருங்கிணைக்கும் பணியில் செயல்படும் மைய அரசின் நிறுவனமாகும். இவ்வறக்கட்டளை துவங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதல், பொது நூலகம் மற்றும் தனியார் நூலகங்களுக்கான தொடர் வளர்ச்சியினை மேம்படுத்தி, பொது மக்களுக்குப் பயன் தரும் வகையில் ஏராளமான வசதிகளை அறிமுகப்படுத்தி உள்ளது. மாநில நூலகங்களுக்கான நிதியுதவி இணை மானியம் மற்றும் இணையில்லா மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் நிதியாண்டில் இத்துறைக்கு ரூ.600 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

### 7.11 பொது நூலகங்களின் உட்கட்டமைப்பு

பொது நூலகங்களுக்கு வரையறுக்கப்பட்ட அடிப்படை நிதி ஆதாரங்களைக் கொண்டு, துறையின் ஒருங்கிணைந்த தொடர் பெருமுயற்சியின் காரணமாக, 1,779 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 2,511 நூலகங்கள் இலவசக் கட்டடங்களிலும், 318 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில் நூலகத்திற்கான புதிய கட்டடங்களுக்கு ரூ.408.50 இலட்சம் மற்றும் நூலகக் கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்கு ரூ.150 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 7.12 நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல்

வாசகர்களின் தேவை மற்றும் அன்றாடம் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, அறிவியல், சமூக வரலாறு, இலக்கியம், கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் அறிவு சார்ந்த தேடல்களைக் கருத்தில் கொண்டு நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் நூல் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்படுகின்றன. ஒரு ஆண்டின் நூலக வரியிலிருந்து 25% நூல்கள் மற்றும் 6.5% பருவ இதழ்கள் வாங்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் ரூ.300 இலட்சம் மதிப்பில் இராஜா ராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிறுவன நிதியுதவியின் வாயிலாகவும் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கப்படுகின்றன.

### 7.13 கணினிமயமாக்குதல்

வளர்ந்து வரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தானியக்கத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, முன்னுரிமை அளித்து பொது நூலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இதனால், நூலகச் சேவைகளின் தரம் உயர்ந்துள்ளதுடன், தகவல் தேடல் பணிகளும் எளிமையாக்கப்பட்டுள்ளது. இணையதள வசதியுடன் கூடிய கணிப்பொறிப் பிரிவு 32 மாவட்ட மைய நூலகங்களிலும், 191 முழுநேர கிளை நூலகங்களிலும், ஊர்ப்புறங்களில் செயல்படும் 217 நூலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனைத் தவிர்த்து, 123 கிளை நூலகங்களிலும் கணிப்பொறி மற்றும் அதன் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### 7.14 குடிமைப்பணி கல்வி மையம்

பொது நூலகங்களை மக்களின் மைய நிறுவனங்களாக மாற்றும் பொருட்டு குடிமைப்பணி கல்வி மையங்கள் பொது நூலகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்குத் தேவையான நூல்களை அணுகி பெறுவதற்கும், பிற போட்டியாளர்களுடன் இணைந்து பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பும் இக்கல்வி மையங்களில் உருவாக்கப்படுகிறது. 32 மாவட்ட மைய நூலகங்கள் உட்பட 285 பொது நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசுத் துறைகள் சார்ந்த பணிகளுக்குரிய போட்டித்தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கு, போட்டித் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களை கணினி வழியில் பதிவு செய்யும் வசதி கன்னிமாரா பொது நூலகம் மற்றும் மாவட்ட மைய நூலகங்களில் இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், 32 மாவட்ட மைய நூலகங்களில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் போட்டித் தேர்வுப் பயிற்சி மையங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

### 7.15 வாசகர் வட்டம்

சமூகத்தின் கலை மற்றும் கலாச்சார வளர்ச்சியில் கவனம் செலுத்தும் வகையில், பொது நூலகத்தின் ஒரு முக்கியப் பங்காக வாசகர் வட்டம் உருவாக்கப்படுகிறது. கலை, கலாச்சார நிகழ்ச்சிகள், இலக்கியச் சொற்பொழிவு, இலக்கிய விவாதங்கள், பட்டிமன்றம், கட்டுரை, மேடைப்

பேச்சு மற்றும் வினாடி வினா ஆகிய நிகழ்ச்சிகள் வாசகர் வட்டங்கள் வாயிலாக நடத்துவதன் மூலம் அடித்தட்டு மக்களைச் சென்றடைவதற்குப் பாலமாக இவ்வமைப்பு செயல்படுகிறது. அறிவுத் தாகத்தில் ஒத்த நண்பர்கள் மற்றும் மனிதர்களுக்கு இது சிறந்த இடமாகத் திகழ்கிறது.

**7.16 உறுப்பினர்கள் / வாசகர்கள் / புரவலர்கள்**

பொது மக்களிடையே கல்வியறிவு மற்றும் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து, அன்றாட நூலக வாசகர்களுக்கு பல்வேறு துறைகளின் தகவல் மற்றும் அறிவை மேம்படுத்தும் வகையில் சிறப்பு இயக்கம் ஏற்பாடு செய்யப்பட்டதன் விளைவாக, கடந்த ஆண்டுகளில் 74,28,694 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் நூலகத்திற்கு ரூ.1,000/- வழங்குவதன் மூலம் புரவலராகவும், ரூ.5,000/- செலுத்துவதன் வாயிலாக பெரும் புரவலராகவும் மற்றும் ரூ.10,000/- வழங்குவதன் மூலம் கொடையாளராகவும் ஆகிறார்கள். இதுவரை 1,17,278 பேர் புரவலராகவும் மற்றும் 869 பேர் பெரும் புரவலராகவும், 328 பேர் கொடையாளராகவும் ரூ.1,249.03 இலட்சம் பங்களித்துள்ளனர். இந்த நிதியானது நிரந்தர வைப்பாக வங்கியில் செலுத்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் ஆண்டு வட்டித் தொகை நூலகங்களை வலுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

## பொது நூலகங்களின் புள்ளிவிவரம்

| ஆண்டு | 2014–15 | 2015–16 | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|---|
| நூலிருப்பு | 6 கோடி | 6.39 கோடி | 7.76 கோடி | 8.15 கோடி |
| வாசகர்கள் | 7.02 கோடி | 8.28 கோடி | 8.44 கோடி | 8.49 கோடி |
| உறுப்பினர்கள் | 68.83 இலட்சம் | 69.95 இலட்சம் | 72.88 இலட்சம் | 74.29 இலட்சம் |
| புரவலர்கள் | 99,114 | 1,06,768 | 1,10,623 | 1,17,278 |
| நூல்களில் பயன்பாடுகள் | 6.88 கோடி | 6.45 கோடி | 6.46 கோடி | 8.79 கோடி |

### 7.17 நூலக நிகழ்ச்சிகள்

### 7.17.1 நூலகர் தினம்

நூலகவியலில் தனது அடிப்படை சிந்தனையின் மூலம் பிரசித்திபெற்ற ஐந்து விதிகளை வகுத்த நூலகவியலின் தந்தை முனைவர்.எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களுக்கு மரியாதை மற்றும் புகழ் மிக்க அஞ்சலி செலுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்கள் 12 ஆம் நாள் "நூலகர் தினம்" இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. மக்களின் சமூக மற்றும் தொழில் நுட்பத் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையில் தொடர்ச்சியாக செயலாற்ற வேண்டுமென்பதனை நூலகர்களுக்கு உணர்த்த இது உதவுகிறது. இந்நாளில் மாநிலம் முழுவதும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பேரணிகள் மற்றும்

மரக்கன்றுகள் நடுதல் போன்றவை அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் மிகுந்த ஒத்துழைப்புடன் துறையால் நடத்தப்படுகிறது.

**7.17.2 நூலக தினம்**

நூலக வளங்களின் பயன்பாட்டினை அதிகரிக்கவும், சமூகத்தில் நூலகத்தின் பங்கினை உறுதி செய்யவும், அதன் முக்கியத்துவத்தை உணரும் வகையில், ஆண்டுதோறும் மே திங்கள் 22 ஆம் நாள் "நூலக தினம்" கொண்டாடப்படுகிறது.

**7.17.3 தேசிய நூலக வார விழா**

இச்சமூகத்திற்கு தரமான புத்தகங்களை நன்கொடையாக வழங்கும் எழுத்தாளர்களை அங்கீகரிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 14 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை தேசிய நூலக வார விழா கொண்டாடப்படுகிறது. சமூக ஆதரவைத் திரட்டும் வகையில் இசை நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுப் பேரணிகள், இலக்கியச் சொற்பொழிவுகள், விவாதங்கள், புதிய எழுத்தாளர்கள் மற்றும் புதிய நூல்கள் அறிமுகம் போன்றவை நடத்தப்படுகின்றன.

**7.17.4 உலகப் புத்தக தினம்**

உலகப் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் A.வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களால் வழங்கப்பட்ட மதிப்புமிக்க சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக, அவரது பிறந்த நாளான ஏப்ரல் 23 ஆம் நாள் உலகப் புத்தக தினம் மற்றும் காப்புறுதி தினமாகக் கொண்டாட யுனெஸ்கோ அறிவித்துள்ளதனைத் தொடர்ந்து, புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில்

உலகப் புத்தக தின விழா ஆர்வத்துடன் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் ஒவ்வொருவருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கு வாசிப்பின் இனிமை மற்றும் எழுத்தாளர்களின் ஈடுசெய்ய முடியாத பங்களிப்பின் பலன்களைப் புதுப்பித்து ஊக்கமளிக்கப்படுகிறது.

### 7.17.5 புத்தகக் கண்காட்சி மற்றும் திருவிழா

ஆண்டுதோறும் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சியான புத்தகக் கண்காட்சி மற்றும் திருவிழாவில் நடைபெறும் எழுத்தாளர்களின் உரைகள், குழு விவாதங்கள், படைப்பாற்றல் ஆகிய நிகழ்வுகளால் பிரசித்திபெற்ற எழுத்தாளர்களையும், ஆயிரக்கணக்கான புத்தக விரும்பிகளையும் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கிறது. கடந்த பத்து ஆண்டு கால வரலாற்றில் தேசிய புத்தகத் திருவிழாவானது, மாநிலத்தில் நடைபெறும் இலக்கிய நிகழ்வுகளுள் முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது. இந்நிகழ்வுளின் மீது பெரிதும் ஆர்வம் கொண்ட வாசகர்களைக் கருத்தில் கொண்டு, கன்னிமாரா பொது நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

### 7.17.6 அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறும் பொன்மாலைப் பொழுது

தமிழ் இலக்கியம், திரைப்படம், ஊடகம், மருத்துவம் என பல்வேறு களங்களில் உயர்ந்து, புகழ் பெற்ற பிரமுகர்களின் உரையாடல்கள் மூலம் பார்வையாளர்களின் ஆர்வம் மற்றும் புதுமை உணர்வுகளைத் தூண்டி கற்பனை வளத்தை உருவாக்குவதற்கும் ஒவ்வொரு சனிக்கிழமை

மாலை ஆறு மணிக்கு "பொன்மாலைப் பொழுது" என்ற இலக்கிய நிகழ்ச்சி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான www.youtube.com/aclchennai வழியாக ஒளிபரப்பப்படுகிறது.

### 7.17.7 அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் போட்டித் தேர்வாளர்களுக்கான வழிகாட்டும் திட்டம்

இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவல் பணி, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம், ஆசிரியர் தகுதித் தேர்வு, வங்கித் தேர்வுகள் போன்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்து வரும் போட்டியாளர்களின் எதிர்கால சாதனைகளுக்கு, உள்ளார்ந்த திறன்களை ஊக்குவித்து வளர்ப்பதற்கான வழிகாட்டும் திட்டங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சியின் மூலம் இந்திய ஆட்சிப் பணியில் மூத்த அலுவலர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் போட்டியாளர்களுடன் தொடர்பு கொண்டு விழிப்புணர்வு, தெளிவு மற்றும் அறிவாற்றலுக்கான நுண்ணறிவு ஆகியவற்றை வழங்குகின்றனர். இந் நிகழ்வுகளை நேரலையாகவும், பதிவுகளாகவும் நூலகத்தின் www.youtube.com/aclchennai என்ற வலைத்தளத்தில் காணலாம்.

## 7.18 பயிலரங்கம் மற்றும் கருத்தரங்குகள் நூலகம் மற்றும் தகவல் அறிவியல் வல்லுநர்களுக்கானவை

தேசிய மாநாடு, கருத்தரங்கம், சிறப்பு விரிவுரைகள், பட்டறைகள், நூலக வார விழாக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றின் மூலம் நூலகம் மற்றும் தகவல் அறிவியலாளர்களுக்கு தொழில்சார் அறிவு மற்றும் திறன்களை வழங்குவதில் அண்ணா நூற்றாண்டு நூலகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

- "தகவல் தொழில் நுட்பம் மற்றும் நவீன தேவைகளுக்காக ஒரு நூலகத் திட்டம்" 25-27, மே, 2017
- "பொது நூலக வல்லுநர்களுக்கான கோஹா மென்பொருள் குறித்த ஒரு நாள் பயிலரங்கம்" 23, ஆகஸ்டு, 2017
- "திறன்மிகு நூலகங்களை நிர்வகிப்பதற்கான நிபுணர்களின் தகுதிகள் சார்ந்து ஒரு நாள் கருத்தரங்கு" 11, நவம்பர், 2017
- "பொது நூலகச் சேவையில் புதுமை" 28, நவம்பர், 2017
- "உலகளாவிய போக்குகள், நூலகங்களில் புதுமை மற்றும் தகவல் மையங்கள்" என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் 2 மற்றும் 3, பிப்ரவரி, 2018

## 7.19 இலக்கமுறை நூலகம்

பாரம்பரிய நூலகத்திலிருந்து மாறுபட்ட , உரை, காட்சி, ஒலி / ஒளி சார்ந்த இலக்க முறை கருவிகளின் தொகுப்புகளுடன் ரூ.1.43 கோடி செலவில் மின்னணு நூலகம் ஈரோட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு

வாசிக்கும் பிரிவு, குறிப்பெடுக்கும் பிரிவு, இணைய வசதியுடன் கூடிய கணிப்பொறி பிரிவில் மின் புத்தகங்கள், மின் இதழ்கள், மின் கலைக்களஞ்சியங்கள், மின் ஆய்வறிக்கைகள் மற்றும் நிகழ்நிலை பொது அணுகல் அட்டவணை (OPAC) ஆகிய வசதிகள் உள்ளன.

கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் 32 மாவட்ட மைய நூலகங்களில் எல்லா மொழிகளிலும் வெளிவரும் அனைத்து மின் இதழ்கள் இங்கு உள்ளன. கிராமப்புற மாணாக்கர்கள் முன்னணி ஆங்கில இதழ்களை அணுகிப் படிப்பதற்கும், தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் ஈடுபட ஊக்கப்படுத்துவதற்கும் உதவும் வகையில் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு 61 முன்னணி பருவ இதழ்கள், 241 முழு நேர கிளை நூலகங்களுக்க 34 பருவ இதழ்கள், 320 கிளை நூலகங்களுக்கு 19 பருவ இதழ்கள் சந்தா செலுத்தி, பதிவு செய்து, வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

2017-18 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.1.30 கோடி நிதியுதவி மூலம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மின் பருவ இதழ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியமான அச்சு மற்றும் இணைய வழி நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

**7.20 2017–18 ஆம் ஆண்டின் புதிய முயற்சிகள்**

- கோயம்புத்தூர், கரூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் கடலூர் ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் திறம்பட செயலாற்றும் போட்டித் தேர்வு பயிற்சி

மையங்கள் போன்று, இதர 24 மாவட்ட தலைநகரங்களில் செயல்படும் மாவட்ட மைய நூலகங்களில் ரூ.24 இலட்சம் செலவில் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன

- யாழ்ப்பாணம் நூலகம் மற்றும் மலேசியா நூலகம் போன்ற தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் உள்ள நூலகங்களுக்கு ஒரு இலட்சம் அரிய தமிழ் நூல்கள் நன்கொடையாக வழங்க சேகரிக்கப் பட்டுள்ளது
- புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் அனைத்து பங்கேற்புடன் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன
- பள்ளி மாணாக்கர்களின் வாழ்நாள் கற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு 12 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் நடமாடும் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டுள்ளன

**7.21 சிறந்த சேவைக்கான விருதுகள்**

**7.21.1 முனைவர். எஸ்.ஆர். அரங்கநாதன் விருது**

நூலக அறிவு மேலாண்மைக் கருத்தாக்கத்தில் சிறந்து விளங்கும் நூலகர்களுக்கு முனைவர்.எஸ்.ஆர்.அரங்கநாதன் விருதாக ரூ.2,000/- பணமுடிப்புடன் கூடிய வெள்ளிப் பதக்கம் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள், வாசகர்கள், புரவலர்கள் மற்றும் பெரும் புரவலர்களின் எண்ணிக்கையினை அதிகரித்து நூலக வளர்ச்சியின் பொருட்டு உண்மையாகவும், உற்சாகத்துடனும் பணியாற்றும் நூலகப்

பணியாளர்களை உவந்து பாராட்டி, உற்சாகப்படுத்தும் வகையில் இவ்விருதானது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. 14.11.2017 அன்று அர்ப்பணிப்புடன் பணியாற்றிய 33 நூலகர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**7.21.2 சிறந்த நூலகங்களுக்கான கேடயம்**

நூலகங்களின் அறிவுசார் நுட்பங்களை மேம்படுத்தும் கூட்டு முயற்சிகளை ஊக்கமளித்து, ஊக்குவிக்கும் பொருட்டு 2012-13 ஆம் ஆண்டிலிருந்து சிறந்த நூலகங்களுக்கு கேடயங்கள் வழங்கப்படுகின்றன. உறுப்பினர்கள் மற்றும் புரவலர்கள் சேர்க்கையினை அதிகரித்தல், நன்கொடை பெறுதல், மாணவ சமுதாயத்திற்கு அறிவு சார் மேலாண்மை அளித்தல், மின்னணு மூலம் கற்றல் போன்ற செயல்பாடுகளில் மாநில அளவில் சிறப்பு முனைப்புடன் செயல்படும் நூலகங்களுக்கு இவ்விருதானது வழங்கப்படுகிறது.

**7.21.3 நூலக ஆர்வலர் விருது**

மாநில அளவில் செயல்படும் நூலகங்களின் தரத்தை மேம்படுத்தி, சிறப்பான நிலையினை எட்டுவதற்கு மிகுந்த ஊக்கம் மற்றும் பங்களிப்புடன் பணியாற்றும் வாசகர் வட்ட தலைவர்களை அங்கீகரிக்கும் விதமாக, சிறந்த மூன்று வாசகர் வட்ட தலைவர்களுக்கு ரூ.5,000/- மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழ் அடங்கிய "நூலக ஆர்வலர் விருது" வழங்கப்படுகிறது.

## 7.22 நிதி ஒதுக்கீடு

2018-19 ஆம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு **ரூ.120.67 கோடி** ஆகும்.

# 8. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 8.1 முன்னுரை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் முறைகளில் தரம்வாய்ந்த மாற்றங்களைப் பயன்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. சிறந்த கல்வி வல்லுநர்களின் உதவியோடு, 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குக் கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்கும் பொறுப்பும் இந்நிறுவனத்திற்கு உள்ளது. புதுமையான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பதில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பெரிதும் ஈடுபட்டுள்ளது. ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை இந்நிறுவனம் வடிவமைத்து வருகிறது. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம் துணையோடு தேவை அடிப்படையிலான தரமான பணியிடை பயிற்சியினை வழங்குவதில் இந்நிறுவனம் உதவி புரிகிறது. வகுப்பறைகளில் எழும் கல்வி சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணவும் ஆசிரியர்களைச் சிந்தனைத் திறன் கொண்ட கல்வியாளர்களாக மாற்றவும் உதவும் செயல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உதவுகிறது.

அண்மையில், தகவல் தொழில்நுட்பத்தின் உதவியோடு மாணாக்கர்களை 21 ஆம் நூற்றாண்டிற்கேற்ற கற்போராக மாற்றவும், அவர்கள்

பல்வேறு மென்திறன்களைப் பெறவும் உதவுவதில் இந்நிறுவனம் முனைந்துள்ளது. பள்ளிப் படிப்பை முடித்தபின் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வுகாணவும் தகுந்த உயர்கல்வி மற்றும் பணிகளைத் தேர்வுசெய்யவும் மாணாக்கர்களுக்கு வழிகாட்டும் திட்டத்தையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் அனைத்து நிலைகளிலும் குழந்தைகளின் தரமான கற்றல் அடைவுத் திறனை மேம்படுத்துவதில் மின்னியல் தொழில்நுட்பத்தினை முழுமையாகப் பயன்படுத்திக் குழந்தைகளின் கற்றல் அடைவுத் தரத்தினை மேம்படுத்துவதில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முன்னிலை வகித்து வருகிறது.

**8.2 தொலைநோக்கு**

நடைமுறை வாழ்க்கைச்சூழலுடன் தொடர்புபடுத்தி நுண்ணறிவுத் திறனுடன் மாணாக்கர்கள் கற்கும் வகையில், எண்ணியல் பாடங்கள் மற்றும் துணைக்கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு வகுப்பறைகளை வளப்படுத்தி, மெய்நிகர் வகுப்பறைகள், ஊடாட்ட ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றைக் கொண்ட மின்வழிக்கற்றல் தளத்துடன் எண்ணியல் முறையில் முனைந்து செயல்படும் பள்ளிக் கல்வி முறையை முன்னேற்றுவது மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.


**8.3 நோக்கங்கள்**

- கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், துணை நூல்கள் ஆகியவற்றை உருவாக்குதல்

- ஆசிரியர்களுக்கான பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்
- புதுமையான கல்வி உத்திகளையும் பயிற்சிகளையும் உருவாக்கிப் பரவலாக்குதல்
- கற்றல் துணைக் கருவிகள், பல்லூடக எண்ணியப் பொருள்கள் மற்றும் சார்ந்த விளக்க நூல்கள் ஆகியவற்றை உருவாக்குதல்
- பள்ளிக்கல்வியின் தரமேம்பாட்டிற்கும் அதனைத் தகுந்த குறைதீர் தொடர் நடவடிக்கைகள் வாயிலாகத் தக்கவைப்பதற்கும் தேவையான அமைப்புகளையும் அணுகுமுறைகளையும் வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்
- பள்ளிக்கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல்
- ஆசிரியர்களின் பணி மேம்பாட்டிற்கான செய்திமடல்கள், ஆய்விதழ்கள் ஆகியவற்றை வெளியிடுதல்
- கல்வி மற்றும் பிற தொடர் சேவைகளை வழங்குவதற்காக, சார்ந்த இயக்குநரகங்கள் மற்றும் துறைகள், பல்கலைக் கழகங்கள், அரசு சாரா நிறுவனங்கள், பிற கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்கள்/முகமைகள் ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்றுதல்

## 8.4 நிறுவன கட்டமைப்பு

### 8.4.1 நிறுவனங்கள்




| | |
|---|---|
| மா.ஆ.ப.நி. | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| வ.ஆ.ப.நி. | வட்டார ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| அ.ஆ.ப.நி. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |
| உ.ஆ.ப.நி. | உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (சிறுபான்மையினர் & சிறுபான்மையினர் அல்லாதோர் |
| சு.நி.ஆ.ப.நி. | சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் |

### 8.4.2 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களின் மறுசீரமைப்பு

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் வழிகாட்டுதல்களின்படி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களை வலுப்படுத்தும் பொருட்டு, மிக அதிக அளவில் பணிகளை வழங்கிடவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கள் மறுகட்டமைப்பு மற்றும் மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

### 8.4.2.1 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்:

இப்புதிய கட்டமைப்பு பின்வரும் 5 பிரிவுகளை கொண்டுள்ளது.

**கலைத்திட்டக் கல்விப் பிரிவு:**

இப்பிரிவானது கலைத்திட்டப் பாடங்கள், தொழிற்கல்விப் பாடங்கள், கலை மற்றும் பணி அனுபவப் பாடங்களை உருவாக்குவதற்காக அவை தொடர்புடைய கலைத்திட்ட வடிவமைப்பு, பாடத்திட்ட வடிவமைப்பு, பாடப்புத்தகம் மற்றும் பாடம் சார்ந்த கூடுதல் புத்தகங்களான மாணாக்கர் கையேடுகள், ஆசிரியர் கையேடுகளை தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ளும் .

**கல்வியியல் ஆய்வு, கள ஆய்வு மற்றும் மதிப்பீட்டு பிரிவு:**

இப்பிரிவானது மாணாக்கர்கள் கற்றலின் காலமுறை மதிப்பீடுகளான மாநில அடைவு ஆய்வு மற்றும் தேசிய அடைவு ஆய்வு ஆகியவற்றை நடத்துதல், தேசிய அடைவு ஆய்விற்கு பிந்தைய செயல்பாடுகளை வடிவமைத்தல் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, மாணாக்கர்களின் அடைவின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை ஆய்ந்தறியவும் அதன் முடிவுகளை தேவையின் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிகளை வடிவமைப்பதற்கும் பயன்படுத்த தர நிலை ஆய்வுகளை முன்னெடுத்துள்ளது.

**ஆசிரியர் கல்வி, தலைமைத்துவம் மற்றும் மேலாண்மைப் பிரிவு:**

இப்பிரிவு, ஆசிரியர்களை உருவாக்குவதில் தற்போது எழும் புதியமுறைகளை கண்டறிவதில் கவனம் செலுத்தும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட அளவிலான கல்வித்துறை தலைமை அலுவலர்கள் ஆகியோரின் தலைமைப் பண்புகளை மேம்படுத்தும் பொருட்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய கல்வியியல் திட்டமிடல் மற்றும் நிருவாகப் பல்கலைக்கழகம், அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை மற்றும் மும்பையிலுள்ள டாடா சமூக அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் சுமூகமாக ஒன்றிணைந்து செயல்படும்.

**தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பிரிவு:**


இப்பிரிவு, திக்ஷா தளத்தின் மூலம் பாடம் தொடர்பான மின்னணு பாடப்பொருள் உருவாக்குதல், குறைகளைக் களைதல், அவ்வளங்களைப் பரவலாக்குதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் போன்றவற்றிற்கான பணித்திறனை வளர்க்கிறது.

**திட்டம் மற்றும் மேற்பார்வைப் பிரிவு:**

இப்பிரிவானது அனைத்துப் பயிற்சி நிகழ்வுகளையும் மேற்பார்வையிடுதல் மற்றும் மாவட்ட சார்ந்த ஆசிரியர்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் பயிற்சிக்கான தேவைகள் குறித்த பின்னூட்டத்தை வழங்கவும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி

நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் மாவட்ட அளவிலான மேற்பார்வைக் குழுவைப் பள்ளிகளைப் பார்வையிடுமாறு நெறிப்படுத்துகிறது.

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்**
**மறுசீரமைக்கப்பட்ட நிருவாகக் கட்டமைப்பு**




**துணை இயக்குநர்களின்கீழ் 16 முதுநிலைவிரிவுரையாளர்கள்**
**24 விரிவுரையாளர்கள்மற்றும் 1 நூலகர்பணிபுரிவர்**

**செயல் மற்றும் பணிகள்**

- நெறிமுறைகள், கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் மாநிலத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகச் செயல்படுதல்
- உலகம் முழுவதும் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் விரைவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் உருவாக்குதல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009க்கு ஏற்ப, ஆசிரியர் மையக் கற்பித்தலை மாணாக்கர் மையக் கற்றலாக மாற்றும் வகையில் கற்றல் அடைவுகளைக் கடைப்பிடிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்
- மாநிலம் முதல் வட்டாரம் வரையிலும் தொடக்க நிலை முதல் மேல்நிலை வரையிலும் அனைத்து நிலைகளுக்கும் தேவை அடிப்படையிலான பயிற்சித் திட்டங்களைத் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல்
- கடினப் பாடப்பொருளை விளக்கிக்கூற ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் பொருத்தமான எண்ணியல் முறைப் பாடப்பொருளை உருவாக்குதல்
- தேசிய மற்றும் மாநில அளவிலான அடைவுத் தேர்வுகளின் முடிவுகளை ஆராய்ந்து மாணாக்கர்களின் கற்றல் அடைவுகளை பாதிக்கும் இடைவெளிகளைக் கண்டறிந்து பொருத்தமான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்தல்

- தொடக்க மற்றும் உயர்தொடக்க நிலைகளுக்கு தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பரிந்துரைத்துள்ள கற்றல் அடைவுகளை உள்ளடக்கிய உத்திகளைப் பயன்படுத்தி கற்றல் வெளியீடுகளை மேம்படுத்துதல்
- ஆசிரியர்களின் புதுமையான கற்பித்தல் உத்திகளை அடையாளம் காணல், ஆவணப்படுத்துதல் மற்றும் தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அனைவரும் பயன்பெறச் செய்தல்
- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களைக் கொண்டு முறையான பள்ளிப்பார்வை மேற்கொண்டு அவர்களின் வாயிலாக அவ்வப்போதே ஆசிரியர்களுக்குப் பணிசார் உதவிகளை வழங்குதல்
- கணினிவழிக் கற்றல் தளம் மற்றும் ஊடாட்டுத் திறன் பலகைகளைப் (Interactive Smart Board) பயன்படுத்தி புத்தாக்கம் செய்யப்பட்ட எண்ணியல்முறைப் பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தாளர்களுக்கு பணித்திறன் பயிற்சி வழங்குதல்
- பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்திற்கு ஆய்வு மற்றும் கல்விசார் உதவிகளை வழங்குதல்
- காலமுறை ஆய்வுகளின் வாயிலாக, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி

நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் சீர்தூக்கல்

- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், வட்டார வளமையங்கள் மற்றும் குறு வளமையங்கள் ஆகியவற்றின் அடிப்படைப் பணித்திறனை மேம்படுத்த பரிந்துரைகளை வழங்குதல்
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மின்னியத் தளத்தைப் பயன்படுத்திக் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்கும் பணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
- ஆசிரியர் பயிற்றுநர்களின் பணித்திறன்களை மேம்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஒற்றைச் சாளர முறையில் தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சிக்கு மாணாக்கர்களைத் தெரிவு செய்தல்
- தொடக்கக் கல்விப் பட்டயப் பயிற்சிக்கான ஆசிரியர் கல்விக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் அவ்வப்போது சீரமைத்தல்

- தொலைதூரப் பகுதிகளிலுள்ள மாணாக்கர்களின் கற்றலை மேம்படுத்த கல்விச் செயற்கைக்கோள் வசதியை முறையாகப் பயன்படுத்துதல்
- அங்கன்வாடிப் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தத் தேவையான பயிற்சிகளை வழங்குதல்
- மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக மாவட்ட அளவிலான அனைத்துக் கல்வி அலுவலர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்
- தமிழ்நாடு தொலைநோக்கு 2023 இலக்கினை அடைதல் மற்றும் பணிகளுக்கான வழிகாட்டல் மற்றும் உயர்படிப்புகளைத் தேர்வு செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் உயர்நிலை மற்றும் மேனிலை நிலைகளில் கற்றலைச் சீரமைத்தல்
- ஆசிரியர்கல்வி மற்றும் பள்ளிக்கல்வியில் உரிய மதிப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் கல்வியாளர்கள் நாட்டிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களைப் பார்வையிட ஏற்பாடு செய்தல்
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக்கழகம், மண்டல ஆங்கில நிறுவனம், தென்னிந்தியா, பெங்களூரு, மண்டல கல்வி நிறுவனம், மைசூரு, கலாச்சாரம் மற்றும் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தேசிய

அமைப்புகளான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிதியம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் மற்றும் பல அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டுக் கல்வித்தரம் சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணத் தக்க ஆதரவைப் பெறுதல்

**8.4.2.2 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மறுவகைப்படுத்துதல் செய்தல்**

கலைத்திட்டம் மற்றும் இதர காரணங்களினால் ஆசிரியர்களின் பணியிடை பயிற்சிக்கான தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு 20 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் உள்ள வசதிகளை கொண்டு தனிச்சிறப்புடன் பணியிடை பயிற்சிக்காகவே பயன்படுத்திக் கொள்ளவும் மற்றும் மீதமுள்ள 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் பணிக்கு முன்பான பயிற்சியினையும் பணியிடை பயிற்சியினையும் ஆசிரியர்களுக்கு தொடர்ந்து வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் இது குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மறுவகை படுத்தப்பட்டுள்ளன.

**8.5 ஆய்வுப்புலம் - 2017-18 இன் செயல்பாடுகள்**

**8.5.1 ஆய்வுத்திட்டங்கள்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதியார்

பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து ஆய்வு முன்மொழிவுகளைக் கூர்ந்தாய்ந்து மேலாய்வு செய்ய இரண்டு பணிமனைகளை நடத்தியது. இப் பணிமனைகளின்போது நடைபெற்ற கருத்தாடல் அமர்வுகள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்துதல் சார்ந்த ஆய்வு முறைகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு முடிவைக் கணித்தல் ஆகியவற்றில் திறன்பெற வழிவகுத்தன. இதன்வழி மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் 64 பேர் பயனடைந்துள்ளனர். இப் பணிமனையின்போது மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் முன்வைக்கப்பட்ட 32 ஆய்வு முன்மொழிவுகளும் மறுசீரமைக்கப்பட்டு இறுதி செய்யப் பட்டன. அனுமதிக்கப்பட்ட இந்த ஆய்வுகள் அனைத்தும் இப்பொழுது நிறைவடையும் நிலையில் உள்ளன. ஆய்வுச் செயல் திட்டங்களின் முதன்மையான பகுதிகளாக அமைந்துள்ளவை பின்வருமாறு:-

- பள்ளிகளில் சிறந்த கற்பித்தல் முறைகள் குறித்த தனியாள் ஆய்வுகள்
- முழுமையான மற்றும் தொடர் மதிப்பீட்டின் தாக்கம்
- வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் கல்விசார் பிரச்சினைகள்

- நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கற்போரின் பிரச்சினைகள்
- கல்வியில் மாணாக்கர்களின் பின்னடைவுக்கான காரணங்கள் அதைக் களைவதற்கான உத்திகள்
- தொடக்கப்பள்ளி மாணாக்கர்களின் படித்தல், எழுதுதல் மற்றும் பேசுதலில் காணப்படும் சிக்கல்கள்
- கணிதம் கற்றலில் காணப்படும் சிக்கல்கள்
- கற்றல் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றைக் களைவதற்கான இடையீடுகள்

### 8.5.2 மாவட்ட அளவிலான செயலாராய்ச்சிகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தொடர்ச்சியாக மண்டல அளவிலான ஆராய்ச்சிப் பணிமனைகளை நடத்தி 308 செயல் ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியது. இச்செயலாராய்ச்சிகள் பள்ளி ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சிகள் மற்றும் செயலாராய்ச்சிகளின் முடிவுகள் தொகுக்கப்பட்டு அவற்றை ஆராய்ச்சித் தொகுப்பறிக்கையாகத் தயாரித்து மாவட்ட மற்றும் மாநிலக் கருத்தரங்கம் வாயிலாகப் பள்ளிக் கல்வித்துறையின் அனைத்துநிலை உறுப்பினர்களுக்கும் பரவலாக்கப்படும்.

### 8.6 தரமான பணி முன்பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாணவ ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்தும் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு

வருகிறது. கற்றல் கற்பித்தலில் புதுமையான உத்திகளையும், அணுகுமுறைகளையும் மாணவ ஆசிரியர்கள் பெறும் வகையில் பணிமுன்முயற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாணவ ஆசிரியர்கள் அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை சிறப்பாக கற்பிக்க ஏதுவாக ஆய்வகங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவ ஆசிரியர்களின் கணினி பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு கணினி பயிற்சி அந்தந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படுகிறது. மாணவ ஆசிரியர்களின் உடல்நலம் மற்றும் மனநலத்தை மேம்படுத்தும் வகையில் யோகா பயிற்சிகளை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. நிறுவன வளாகங்கள் துய்மையாகவும் பசுமையாகவும் பராமரிக்கப்பட்டு வருவதுடன் மாணவ ஆசிரியர்களுக்கு தூய்மையை கடைபிடிக்கும் பழக்கமும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### 8.6.1 தொடக்கக் கல்வி பட்டயப் படிப்புகளை வழங்கும் நிறுவனங்கள்

மொத்தத்தில் 362 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படும் தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பில் முதலாமாண்டில் 4807 மாணாக்கர்களும் இரண்டாம் ஆண்டில் 6905 மாணாக்கர்களும் பயின்றுவருகின்றனர்.

**நிறுவனங்கள் மற்றும் மாணக்கர்கள் 2017-18**

| வ. எண் | நிறுவனப் பெயர் | எண்ணிக்கை | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 32 | 1047 | 1434 |
| 2 | வட்டார ஆசிரியர் கல்வி நிறுவனம் | 7 | 66 | 79 |
| 3 | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 9 | 113 | 165 |
| 4 | அரசு நிதி உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 34 | 264 | 328 |
| 5 | சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | 280 | 3317 | 4899 |
| | மொத்தம் | 362 | 4807 | 6905 |

## 8.7 மாவட்ட ஆசிரியர் கல்வியியல் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படும் ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சிகள்

ஆசிரியர் தகுதித் தேர்வை மாணவ-ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப் பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வதை உறுதிப்படுத்த அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. உள்ளூர்

வல்லுநர்களின் உதவியுடன் அனைத்து இரண்டாமாண்டு மாணாக்கர்களுக்கும் ஆசிரியர் தகுதித் தேர்விற்கான பயிற்சியினை இந்நிறுவனம் அளித்து வருகின்றன. இதற்கான மாதிரித் தேர்வுகளும் செய்முறை அமர்வின் பொழுது நடத்தப்படுகின்றன. இதனால் 2017-18 ஆம் ஆண்டில் 1700 மாணாக்கர்கள் பயனடைந்தனர்.

**8.8 கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தை மாற்றியமைத்தல்**

அரசாணை (நிலை) எண் 146, பள்ளிக்கல்வித் துறை, நாள் 30.06.2017 இன்படி அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கலைத்திட்ட உருவாக்கக் குழு உருவாக்கப்பட்டது. மேலும் கணிதம், அறிவியல், கலை மற்றும் மனித நேய பாடங்களுக்கான கலைத் திட்டங்களை உருவாக்குவதற்காகத் துணைக்குழுக்களும் உருவாக்கப் பட்டன.

சென்னை, கலைவாணர் அரங்கில் 20.07.2017அன்று 'புதிய கலைத்திட்டம் உருவாக்குதல்' சார்ந்த கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில், கல்விமுறையில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆலோசிக்க ஆசிரியர்கள், கல்வியாளர்கள், கல்விச் சிந்தனையாளர்கள், உலகளாவிய கல்வி வல்லுநர்கள் மற்றும் கல்வி அலுவலர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அழைக்கப்பட்டிருந்தனர் .இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இவ்வல்லுநர்கள் பள்ளிக்கல்விக்

கலைத் திட்டத்தினைச் சீரமைக்கப் பல்வேறு கருத்துகளையும் பரிந்துரைகளையும் வழங்கினர்.

வரைவுக் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் ஆகியவை உருவாக்கப்பட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இவற்றை, உலகம் முழுவதிலும் 20 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். 2 இலட்சம் கல்வி ஆர்வலர்கள் முழுப்பாடத்திட்ட ஆவணத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் பதிவிறக்கம் செய்துள்ளனர். இது சார்ந்து 7000 ஆக்கப்பூர்வமான கருத்துகள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் பெறப்பட்டு வல்லுநர்களின் சீரிய ஆலோசனைகளுக்குப் பிறகு பாடத்திட்டம் செறிவூட்டப்பட்டு இறுதிசெய்யப்பட்டது.

**8.9 புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடநூல்களைத் தயாரித்தல்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பாடநூல்களை உருவாக்குவதற்கெனப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் இருந்து புதிய குழுக்களை உட்படுத்திப் பாடநூல்கள் உருவாக்கும் பணியைத் தொடங்கியது. பாடநூல் தயாரித்தலில் முதல்கட்ட பணிகள் நிறைவுபெற்றுள்ளன. 1, 6, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்குச் சிறுபான்மை மொழிப்பாடங்கள் உட்பட 174 தலைப்புகளில் நூல்கள் உருவாக்கப்பட்டு அச்சிடப்பட்டன. கற்பித்தலுக்கான பொருட்கள் தயாரித்தலில் ஒரு பகுதியாகப் புதிய உத்திகளைச் செயல்படுத்த மாநிலக் கல்வியியல்

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் புதிய பாடப்புத்தகத்திலுள்ள கருத்துகளை வகுப்பறையில் ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்த ஆசிரியர் கையேடு தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளின் கூர்சிந்தனைத் திறனை வளர்க்கும் வகையில் பயிற்சி ஏடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இணைய தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட விரைவுத் துலக்கக் குறியீடுகள், புதிய பாடநூல்களைக் காணொலிக் காட்சிகளுடன் இணைப்பதால் பாடக்கருத்துகளைக் கற்பதை மேம்படுத்தும். அனைத்து வகுப்புகளுக்கும் பாடநூல்களை 2018-19 ஆம் கல்வியாண்டின் நிறைவுக்குள்ளேயே முழுமையாகத் தயாரித்து முடிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 8.10 திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் 2017-18

### 8.10.1 பணியிடைப் பயிற்சிகளை வழங்குவதில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் பங்கு

ஆசிரியர்களின் திறன் மேம்பாடு ஒரு தொடர் செயலாகும். பள்ளிகளில் பாடப்பகுதிகளை சிறப்பாக மாணவர்களிடையே கொண்டுசெல்லும் வகையில் ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தும் முக்கியப் பங்கினைப் பணியிடைப் பயிற்சிகள் ஆற்றுகின்றன. பள்ளி வகுப்பறைகளைப் பார்வையிட்டு ஆசிரியர்களுடன் கலந்துரையாடி மாணாக்கர்கள் அடைந்துள்ள கற்றல் விளைவுகளின் குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கு

ஏற்றவாறு பயிற்சிக் கையேடுகளைத் தயாரித்துக் குழந்தைகளின் கற்றல் முறைகளில் தரம் சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்தும் நிலையில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. வகுப்பறையில் உள்ள கற்றல் பிரச்சினைகளைக் களைவதற்கான புதிய உத்திகளை ஆய்வுசெய்யும் நோக்கில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் செயலாராய்ச்சிகளை மேற்கொள்கின்றன. ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இத்தகைய ஆய்வுகள், ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தி அவர்களைக் கூர்சிந்தனைத்திறன் மிக்கவர்களாகவும், புதிய முயற்சிகளை நடைமுறைப் படுத்துபவர்களாகவும் மாற்றுகின்றன. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் முழுமையான ஆசிரியர் மேம்பாட்டு முயற்சிகளான புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தலைக் காணொலிகளாகப் பதிவுசெய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு உதவி புரிகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தாங்கள் கற்றவற்றை வகுப்பறைக்குக் கொண்டு செல்வதில் ஏற்படும் பாடப்பொருள் பரிமாற்ற இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு, தனித்தனிப் பயிற்றுநர் மற்றும் பயிற்சியாளர் கையேடுகள் 2017-18ஆம் ஆண்டில் தயாரித்து வழங்கப்பட்டன.

### 8.10.1.1 பணியிடைப் பயிற்சி – தொடக்கநிலை

தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பாடங்களில் கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை மேம்படுத்தும் பயிற்சிகள் நடத்தப்பட்டன. உள்ளூர் சுற்றுப்புற வளங்கள் மற்றும் துணைக்கருவிகளை அறிவியல் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் வகையில் அறிவியல் மற்றும் கணிதப் பாடப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. "வகுப்பறைகளில் பல்லூடகப் பயன்பாட்டை ஒருங்ணைத்தல்" சார்ந்து ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். மொத்தத்தில், பல்வேறு பாடம் சார்ந்த பயிற்சிகள், பள்ளிச் சுகாதாரம் மற்றும் குழந்தை உளவியல் போன்ற பொதுவான பயிற்சிகளால் 1,14,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

### 8.10.1.2 பணியிடைப் பயிற்சி – உயர்தொடக்க நிலை

ஐந்து வகையான பயிற்சித் திட்டங்களில், இரண்டு நாள் பாடம், செய்யுள், இலக்கணம் கற்பித்தல் பயிற்சியும், இரண்டு நாள் நடைமுறை இலக்கணம் மற்றும் வகுப்பறைத் தொடர்புப் பயிற்சியும் கணிதத்திறன் வளர்த்தல் மற்றும் கணித உபகரணப்பெட்டி பயன்படுத்துதல் பயிற்சியும் மூன்று நாள் அறிவியல் உபகரணப் பெட்டி மற்றும் உள்ளூர் சுற்றுப் புற வளங்களை பயன்படுத்துதல் பயிற்சியும், இரண்டுநாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களை நிலவரைபட நூலைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளுதல் மற்றும் கண்டறிதல் பயிற்சியும் நடத்தப்பட்டன. மேற்காண் பயிற்சிகளில் 70,000 ஆசிரியர்கள் பயனடைந்தனர். இதுதவிர மாநிலக்

கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தேசியக் கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து 6950 நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளித் தலைமைத்துவ மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது.

### 8.10.1.3 பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்துடன் இணைந்து பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை நடத்தியது. இப்பயிற்சியில் பாடக்கருத்துகளைப் புரியவைத்தல், மாணாக்கர்களை அரசுத்தேர்வுகளுக்கு ஆயத்தம்செய்தல், மீத்திறன் மிக்க மாணாக்கர்கள் மற்றும் மெதுவாகக் கற்போர் ஆகியோருக்கு ஏதுவான கற்பித்தல் முறைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. பாடம் சார்ந்த பயிற்சி மட்டுமல்லாது, வகுப்பறைச் செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தினை இணைத்தல் மற்றும் வளரிளம் பருவ மாணாக்கர்கள் வழிகாட்டுதல் அளிக்க உளவியல் வழிகாட்டுதல் ஆகியவை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 5 நாள் பயிற்சியாக வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் வாயிலாக 37,630 பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

**8.10.1.4 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வகுப்பறைச் செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் கற்பித்தல் திறன்களை மேம்படுத்தும் பணியிடைப் பயிற்சியினை அளித்தது. இது தொடர்பான 'பயிற்சிக் கட்டகம் தயாரித்தல் பணிமனை' நாமக்கல்லில் 2017, ஏப்ரல் 25 முதல் 28 வரை நடைபெற்றது. இப்பணிமனையில், ஒவ்வொரு பாடத்தைச் சார்ந்த 15 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சியில் வழங்கப்பட வேண்டிய கருத்துகள் குறித்து விவாதித்தனர். முதல் நிகழ்வாக, ஒவ்வொரு பாடத்திலும் தெரிவுசெய்யப்பட்ட கருத்துகள், துணைக் கருத்துகள் மற்றும் முக்கிய கருத்துகளை ஒவ்வொரு பாடக்குழு வல்லுநர்களும் கண்டறிந்தனர். மேலும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பாடப்பொருளுக்கும் 6 முதல் 10 ஆம் வகுப்புப் பாடப்பொருளுக்கும் இடையிலமைந்த தொடர்புகள் கண்டறியப்பட்டன. தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனப் பாடத்திட்டம் மற்றும் மாநிலப்பாடத்திட்டம் ஆகியன ஒப்பு நோக்கப்பட்டு, இரண்டு பாடத்திட்டத்திலும் விடுபட்ட பாடப்பொருள்கள் கண்டறியப்பட்டன. இச்செயல்பாடு, இயற்பியல், கணிதம், வேதியியல், உயிர்-தாவரவியல், உயிர்-விலங்கியல், வரலாறு, பொருளாதாரம், கணக்குப்பதிவியல் மற்றும் வணிகவியல், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய 10 பாடங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டது.

மாநில அளவிலான கட்டகம் தயாரித்தல் பணிமனை கிருஷ்ணகிரியில், 2017 மே மாதம் 10 முதல் 12 வரை ஆங்கிலம், பொருளாதாரம், கணக்குப்பதிவியல் மற்றும் வணிகவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிர்-தாவரவியல், உயிர்-விலங்கியல் ஆகிய பாடங்களுக்கு நடத்தப்பட்டது. இரண்டாம் கட்டக் கட்டகம் தயாரித்தல் பணிமனை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 2017 மே மாதம் 18 முதல் 20 வரை தமிழ் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களுக்கு நடத்தப்பட்டது.

'கட்டகச் செறிவூட்டப் பணிமனை' மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 2017, ஜூன் மாதம் 1 மற்றும் 2 ஆகிய நாள்களில் நடத்தப்பட்டது. இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட பாடக்கருத்துகள் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களால் ஆய்வு செய்யப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டன. கருத்தாளர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி, அனைத்து மாவட்டங்களிலும் அறிவியல் பாடங்களுக்கு மூன்று நாட்களும் கலைப்பாடங்களுக்கு இரண்டு நாட்களும் வழங்கப்பட்டன. அனைத்துப் பாடங்களுக்கும், மாவட்ட வாரியான வல்லுநர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். மாவட்ட அளவிலான முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பயிற்சி 2017, அக்டோபர்–நவம்பர் மாதங்களில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 16,161 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

### 8.10.1.5 எனது ஆங்கிலம் – ஆசிரியர்களுக்கான இணைய வழித் திறன்மேம்பாட்டுப் பயிற்சி

இணையம் வாயிலாகப் பணிமேம்பாட்டுத் தேவைக்காகப் பதிவுசெய்யும் ஆசிரியர்களுக்கு இணையவழிப் பயிற்சியினை வழங்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் பிரிட்டிஷ் கவுன்சிலும் ஒப்பந்தம் செய்துள்ளன. இது இருவழி உரையாடல் வகுப்புகள், கலந்துரையாடல் அரங்கங்கள் போன்றவற்றைக் கொண்ட ஆறு வார இணையவழிப் பயிற்சியாக அமையும். இப்பயிற்சி ஆசிரியர்களின் கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான மிகச் சிறந்த வாய்ப்பினைக் கொண்டுள்ளது. வகுப்பறைச் செயல்பாடுகளில் தொழில்நுட்பத்தினை இணைத்தலின் வழியே ஆசிரியர்களின் திறனை மேம்படுத்த இப்பயிற்சி வழிவகுக்கிறது. இது எண்ணியல் கல்வித் தகவல் தொடர்பு சார்ந்த 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்க்கும் வகையில் உள்ளதால் பல ஆசிரியர்கள் இப்பயிற்சியினை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர்.

## 8.11 கல்வியாளர் மற்றும் அலுவலர்களுக்குப் பணிமேம்பாட்டுப் பயிற்சி

### 8.11.1 தகவல் தொழில் நுட்பப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சாஸ்திரா பல்கலைக் கழகத்துடன் இணைந்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில்

பணியாற்றும் கல்வியாளர்களுக்கு ஆறு நாட்கள் உண்டு உறைவிடப் பயிற்சியாகத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி ஏழு அணிகளாக வழங்கியுள்ளது. இதன்மூலம் 280 கல்வியாளர்கள் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியினைப் பெற்றனர்.

### 8.11.2 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் புதியதாக நியமனம் செய்யப்பட்ட கல்வியாளர்களுக்கு நுழைநிலைப் பயிற்சி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதியதாக நியமனம் செய்யப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்கு ஐந்து நாள் நுழைநிலைப் பயிற்சியினை அளித்தது. கல்வியாளர்களுக்கு, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் எதிர்நோக்கும் பணிகள், ஆசிரியர் பணித்திறன், வட்டாரவளமையம் மற்றும் தொகுப்பு வளமைய அமைப்புமுறை ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு ஆற்ற வேண்டிய பங்குகள் பற்றி விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியினால் புதியதாகப் பணியில் சேர்ந்த 111 கல்வியாளர்கள் பயனடைந்தனர்.

### 8.11.3 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கான நிர்வாக மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி:

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்காக மூன்று நாள் நிர்வாக மற்றும் திறன்

மேம்பாடு பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தியது. இப்பயிற்சியானது கலைத்திட்ட உருவாக்கம், தகவல் அறியும் உரிமைச் சட்டம், கோப்புகள் மேலாண்மை, சட்டப் பிரச்சினைகள், நிருவாக விதிமுறைகள், ஒழுங்கு நடவடிக்கைகள், கணக்குப் பராமரிப்பு, நிறுவனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான திட்டமிடல், பயிற்சி மேலாண்மை, கல்வித்துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து பணியாற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இப்பயிற்சியில், மொத்தம் 64 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும், முதுநிலை விரிவுரையாளர்களும் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

**8.11.4 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி:**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்கான மூன்று நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தியது. இப்பயிற்சி 4 சுற்றுகளாக நடைபெற்றது. இப்பயிற்சியானது கலைத்திட்ட மேம்பாடு, தகவல் அறியும் உரிமைச்சட்டம், கோப்புகள் மேலாண்மை, சட்டப் பிரச்சனைகள், பணியாளர் விதிகள், ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள், கணக்குகள் பராமரித்தல், நிறுவன வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமிடல், பயிற்சி மேலாண்மை மற்றும் கல்வித்துறை அலுவலர்கள்

மற்றும் பிற துறைகளுடன் இணைந்து பணியாற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இப்பயிற்சியின் வாயிலாக மொத்தம் 377 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் தங்கள் பணித்திறனை மேம்படுத்திக் கொண்டனர்.

**8.11.5 புதியதாக நியமனம் செய்யப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கான நுழைநிலைப்பயிற்சி**

புதியதாக பணியமர்த்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு இரண்டு நாள் நுழைநிலைப் பயிற்சியினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அளித்தது. மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு நிருவாக விதிமுறைகள் சார்ந்த பல்வேறு கூறுகள், தகவல் அறியும் உரிமைச்சட்டம், கோப்புகள் மேலாண்மை, ஒழுங்கு நடவடிக்கைகள், நிருவாகப் பிரச்சினைகள், கல்விசார் ஆய்வுகள் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மூலம் புதியதாக நியமிக்கப்பட்ட 10 அலுவலர்கள் பயனடைந்தனர்.

**8.11.6 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கான பயிற்சி**

புதுதில்லியிலுள்ள தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் மேலாண்மை நிறுவனத்தின் கல்வி நிபுணர்களைக் கொண்டு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கான மூன்று நாள் மேலாண்மைப் பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இரு சுற்றுகளாக நடத்தியது.

இப்பயிற்சியானது, பள்ளி நிருவாகம், பள்ளி வளர்ச்சித் திட்டங்கள், பள்ளித் தலைமைப்பண்பு, கல்விசார் மேற்பார்வை, தகவல் அறியும் உரிமைச்சட்டம், நிருவாக விதிமுறைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் கோப்புகள் மேலாண்மை போன்றவற்றைப் பற்றிய ஒரு உள்ளார்ந்த புரிதலை மையப்படுத்தி அமைந்திருந்தது. இப்பயிற்சியின் மூலம் 398 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களும் 397 கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களும் பயனடைந்தனர்.

### 8.12 எண்ணியல் முயற்சிகள்

#### 8.12.1 கல்விச் செயற்கைக்கோள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாநிலத்தில் 58 இடங்களில் கல்விச் செயற்கைக்கோள் காணொலிக் கருத்தரங்கு வசதியினை ரூ.2.54 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. இதன் ஒளிபரப்பு மையம் அனைவருக்கும் கல்வி இயக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையின் முதன்மைத் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தவும், பள்ளிக் குழந்தைகளுக்கான நலத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதை மேலாய்வு செய்யவும் இக்கல்விச் செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப் படுகின்றனர். பேரிடர் மேலாண்மை வல்லுநர்கள், குழந்தை உளவியல் அறிஞர்கள் மற்றும் பாடம் சார்ந்த வல்லுநர்கள் ஆகியோருடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவ

ஆசிரியர்கள் கலந்துரையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். கல்விச் செயற்கைக்கோள் வாயிலாக உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் தொடர்பான வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### 8.12.2 மெய்நிகர் வகுப்பறைகள்

2016-17 ஆம் கல்வியாண்டில் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் 'ஒருங்கிணைந்த இணையவழிக் கல்வித் திட்டம்' தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 770 அரசு உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 11 மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மெய்நிகர் வகுப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாணாக்கர்களின் கற்றலில் மெய்நிகர் வகுப்பறைகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. 2017-18 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், 192 பயிற்சிச் சுற்றுகள் மெய்நிகர் வகுப்பறைகள் வாயிலாக நடத்தப்பட்டன. 6 முதல் 12 ஆம் வகுப்புவரைப் பயிலும் மாணாக்கர்கள், பாட வல்லுநர்கள் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களுடன் உரையாடி முக்கிய பாடங்களின் கருத்துகளில் ஆழ்ந்த புரிதலைப் பெற்றனர்.

### 8.12.3 பாடப்புத்தகங்களை எண்ணியமாக்குதல் (மின்-பதிப்பு)

வழக்கமாகப் பயன்படுத்தப்படும் பாடநூல்களை நவீன எண்ணிய மின்-நூல்களாக மாற்றும் பணியினை தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

மேற்கொண்டுள்ளது. பாடநூல்கள் மின்-பதிப்பு 3.0 வடிவமாக மாற்றப்பட்டுள்ளன. தனித்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ள மின்–பதிப்பு, படிப்பானின் உதவியுடன் பாடப்பொருளைத் தெரிவுசெய்யவும், அதனைப் பெரிதாகக் காட்டவும், சில பகுதிகளைக் கோடிட்டுக் காட்டவும், திரை, எழுத்து, வண்ணம் ஆகியவற்றை, சிறப்புக்கவனம் தேவைப்படும் குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றவும் இயலும். தேவைப்படும் இடங்களில், இப்பாடநூல்களுடன் பல்லூடகப் பாடப்பொருளையும் தேவைப்படும்போது இணைக்க இயலும். தற்போது, 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள் மின்-பதிப்பு முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.04.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப் பாடநூல்கள் தமிழ்நாடு மின்நூல் படிப்பான் என்று பெயரிடப்பட்ட ஆண்ட்ராய்டு செயலி மூலம் மாணாக்கர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன. இந்த செயலியில் மாணாக்கர்கள் 10 ஆம் வகுப்பின் ஆங்கில வழி மற்றும் தமிழ்வழிப் பாடநூல்களைக் காண இயலும். அனைத்து வகுப்புப் பாடநூல்களையும் மின்-பதிப்பு முறைக்கு மாற்றியமைத்து அனைவரும் இவற்றை எளிதாகப் பெறும் வகையில் இதனைப் பரவலாக்கும் பணியினை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**8.12.4 டெய்சி (எண்ணிய அணுக்கத் தகவலறி முறை)**

பாடப்பொருள்களை ஒலி வடிவமாக்கி அவற்றை மின் பாடப்பதிப்புடன் இணைக்கும் பொறுப்பு மாநிலக்

கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய முயற்சி மாற்றுத்திறனாளிகள், குறிப்பாகப் பார்வைத்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்கு உதவும். இதன் முதல் முயற்சியாக, டெய்சி மென்பொருள், 10 ஆம் வகுப்பின் 5 எண்ணியப் பாடநூல்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வசதி, படிப்படியாக, அனைத்து மின்-பதிப்புப் பாடங்களுடனும் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

**8.12.5 கற்றல் மேலாண்மை அமைப்பு**

கற்றல் மேலாண்மை அமைப்பினை நடைமுறைப் படுத்த அரசு முன்மொழிந்துள்ளது. இத்திட்டம் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கியுள்ளதாகும். வகுப்பறைகளைத் தாண்டி கற்றலை உறுதிசெய்யும் வகையில், காணொலிக் காட்சிகள், வலைதளம் சார்ந்த தேர்வுகள் மற்றும் அலைபேசிச் செயலிகள் போன்றவை இத்திட்டத்தின் வாயிலாக உருவாக்கப்படும். கற்றல் மேலாண்மை அமைப்பு என்பது பாடப்பொருள் பரிமாற்றம், கற்றலைக் கண்காணித்தல் மற்றும் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் கற்றல் அடைவுகளை ஆவணப்படுத்துதல் ஆகியவற்றிற்கான மென்பொருள் செயலியாகும். ஆசிரியர்கள் பாடப்பொருளை விளக்கவும், தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் நடத்தவும், மாணாக்கர் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் பதிவுகளைப் பராமரிக்கவும் இது உதவுகிறது. கற்றல் மேலாண்மை அமைப்பு ஆசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பிற கல்விப் பங்கேற்பாளர்கள் 24x7 நேரமும்

பயன்படுத்த உதவும். இந்த மெய்நிகர் கற்றல் சூழல் சீரான கற்றலை மட்டுமன்றி, கலைத்திட்டம், அதன் பரிமாற்றம், கற்றல் கருவிகளின் பயன்பாடு மற்றும் பயனுள்ள கல்வித் தொடர் செயல்களுக்கேற்ற பொருள் நிறைந்த மதிப்பீடு போன்றவற்றின் மீதும் தெளிவான கவனம் செலுத்துகிறது. ஒளி-ஒலி ஊடகம், பரிமாற்ற ஊடகம், கூடுதல் கற்றல் சாதனம், பயிற்சி ஏடு, இணைய வளம் மற்றும் உள்ளூர் வளங்களிலிருந்து ஒப்புருவாக்கம் மற்றும் குறிப்புதவி வளங்கள் ஆகிய வடிவங்களில் இதிலுள்ள பாடப்பொருள் அமைந்திருக்கும். முதற்சுற்றில் 40 இலட்சம் மாணாக்கர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ரூ. 2 கோடி பொருட்செலவில் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

## 8.13 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

### 8.13.1 ஆங்கில ஒலிப்பியல் மற்றும் கற்பித்தல் உத்திகள் சார்ந்த பயிற்சி:

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பெங்களூரு, தென் இந்திய மண்டல ஆங்கில நிறுவனத்துடன் இணைந்து 29.01.2018 முதல் 02.02.2018 வரை ஆங்கில ஒலிப்பியல் பயிற்சியை நடத்தியது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் ஆங்கில ஒலிப்பியல் மற்றும் கற்பித்தல் உத்திகளை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். பங்கேற்பாளர்களுக்குச் சரியான உச்சரிப்பு மற்றும் ஒலியன்கள் ஒலிப்புமுறை போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. உயிரொலிகள், மெய்யொலிகள், மற்றும் இணையுயிரொலிகளின்

உச்சரிப்பு மட்டுமல்லாது சொல்லழுத்தம், சொற்றொடர் அழுத்தம் மற்றும் குரலேற்றத்தாழ்வு பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பங்கேற்பாளர்களுக்கு உச்சரிப்பிற்கான இரட்டைச்சொற்கள் பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டது. பங்கேற்பாளர்களின் மொழித் திறனை மேம்படுத்த மொழி ஆய்வகத்தை பயன்படுத்துவது பற்றியும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், 3 ஆசிரியர்கள், 1 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர் மற்றும் 1 ஆசிரியர் பயிற்றுநர் ஆகியோர் பங்கேற்றனர். இரு சுற்றுகளில் நடத்தப்பட்ட இப்பயிற்சியின் மூலம் 161 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்கள் பயனடைந்தனர். இதற்காக மாநிலத் திட்டக் குழு ரூ.88.20 இலட்சம் வழங்கியது. முதன்மைக் கருத்தாளர்களைக் கொண்டு மாவட்ட அளவில் நடத்தப்பட்ட இப்பயிற்சியின் வாயிலாக, அரசுப்பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 7013 பேர் பயனடைந்தனர்.

**8.13.2 உருவம் அறிச் செயலித் தொழில்நுட்பம்**

மேம்படுத்தப்பட்ட மெய்நிகர் வடிவாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உருவம் அறிச் செயலித் தொழில்நுட்பம் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் கற்றல் திறனை வளப்படுத்த உதவுகிறது. உருவம் அறிச் செயலியின் உதவியோடு, மாணாக்கர்கள் தங்கள் பாடங்களில் உள்ள பாடப்பொருள்/இருபரிமாண அசைவூட்டப் பாடப் பொருள்/வகுப்பறை ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட தற்போதைய பாடநூல்களிலுள்ள

பாடங்களுடன் தொடர்புடைய காணொலிக் காட்சிப் பதிவுகள் ஆகியவற்றைக் காட்டிலும் தற்போது எங்கேயும் எப்பொழுதும் மாணாக்கர்கள் பாடங்களை முப்பரிமாண மெய்நிகர் பொருட்களாக அணுகுகிறார்கள். தற்போதைய பாடப் பொருளில் எவ்வித மாற்றமும் செய்யாமல் நடைமுறையில் உள்ள பாடப் புத்தகங்களோடு பல் ஊடகப் பாடப்பொருள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது. 141 அறிவியல் மற்றும் கணக்குப் பாடக் காணொலிகள் பாடவல்லுநர்களால் உருவாக்கப்பட்டு அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வல்லுநர்குழுவால் ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்பட்டது. அலைபேசி, கையடக்கக் கணினி, மடிக்கணினி மற்றும் கணினி போன்ற பட உட்கிரகிப்புத் தொழில்நுட்பச் செயலிக்கு இணக்கமான கருவிகளின் தொகுப்பில், ஒவ்வொரு ஆண்டிலும் பதிவேற்றம் செய்யப்படும் பாடக்கருத்து சார்ந்த படங்களின் முப்பரிமாண மாதிரிகள், அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களின் குறிப்பிட்ட காணொலிக் காட்சிகள் ஆகியவை அடங்கிய எண்ணியல் பாடப்பொருள்களைப் பல ஆண்டுகளுக்குப் பேணிக்காக்கும் திறன் வாய்ந்தது இச்செயலி. இப்புரட்சிகரமான செயலி 7680 அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளில் பயிலும் 20 இலட்சம் மாணாக்கர்கள் பயனடையச் செய்துள்ளது.

### 8.14 பிற முக்கிய செயல்பாடுகள் மற்றும் முனைப்புகள்

### 8.14.1 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடுப் பயிற்சித் தாள்களின் வாயிலாக மாற்றுமுறை மதிப்பீடு

2016 ஆம் ஆண்டு அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு பயிற்சித் தாள்களுக்கு ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களிடமிருந்து மிகுந்த வரவேற்புக் கிடைத்ததின் அடிப்படையில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு பயிற்சித் தாள்களை தயாரித்தளிக்கத் திட்டமிட்டுள்ளது. இப்பயிற்சித்தாள்கள் மாணாக்கர்கள் பாடக்கருத்தை அறிந்து கொள்வதிலும் ஆசிரியர்கள் வினாத்தொடுக்கும் திறனையும் உயர்த்த உதவும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 2018-19 ஆம் ஆண்டில் 1, 6 மற்றும் 11 ஆம் ஆகிய வகுப்புகளுக்குப் புதிய பாடநூல்களின் அடிப்படையில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு பயிற்சித் தாள்களை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 30 இலட்சம் குழந்தைகள் பயனடைவர்.

### 8.14.2 தேசிய அடைவு ஆய்வு - 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்பு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து, மாநிலத்தின் கல்வித் தரத்தின் நிலையை அறிந்துகொள்வதற்காக 2017 நவம்பர் 13 அன்று, 31

மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட அரசு மற்றும் அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளில் 3, 5 மற்றும் 8 ஆகிய வகுப்புகளுக்கு அடைவுத் தேர்வை நடத்தியது. 2017 – 18 ஆம் ஆண்டில், 3 மற்றும் 5 ஆம் வகுப்புகளுக்கு மொழி, கணிதம் மற்றும் சூழ்நிலையியல் ஆகியவற்றிலும், 8 ஆம் வகுப்பிற்கு மொழி, கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகியவற்றில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கிய கற்றல் விளைவுகளின் அடிப்படையிலும் இத்தேர்வு நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மாவட்ட அறிக்கை அட்டை ஒவ்வொரு கற்றல் விளைவிலும் மாணவர்களின் செயல் திறனைத் தெளிவாகக் காட்டியது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேர்வில் மாணாக்கர்களின் அடைவின் அடிப்படையில் தேசிய அடைவு ஆய்விற்குப் பிந்தைய செயல்பாடுகளை மேற்கொள்ள உள்ளது. கற்றல் விளைவுகளின் அடிப்படையில் பல்வேறு வழிகளில் மாணாக்கர்களை மதிப்பிடவும், அதற்கேற்றவாறு வகுப்பறைச் செயல்பாடுகளில் மாற்றங்களைக் கடைபிடிக்கவும், தொடக்க மற்றும் உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு கற்றல் விளைவுகள் சார்ந்து பயிற்சி வழங்கப்பட உள்ளது.

### 8.14.3 தேசிய அடைவு ஆய்வு – வகுப்பு 10 (சுற்று -2)

10ஆம் வகுப்பிற்கான தேசிய அடைவு ஆய்வுச் சுற்று – 2, பிப்ரவரி 5, 2018 அன்று மாநிலம் முழுவதும் 2560 அரசு, அரசு நிதி உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 85459 மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்டது. ஐந்து கலைத்திட்டப் பாடங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

மாணாக்கர்களின் அடைவுகளைக் காட்டும் மாவட்ட அறிக்கை அட்டைகள் தயாரிக்கப்பட்டன. 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குத் தேசிய அடைவுச் சோதனைக்குப் பிந்தைய இடையீடுகளை 2018-19 ஆம் ஆண்டில் பயிற்சியாக வழங்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்தப் பயிற்சிகள் அனைத்துப் பாடங்களிலும் அமைந்துள்ள கருத்துகளை மாணாக்கர்கள் அறிந்து கொள்ள உதவும் வகையில் வகுப்பறைகளில் தகுந்த மாற்றங்களை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உதவும். 2021 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள பன்னாட்டு மாணாக்கர் அடைவு ஆய்வினை எதிர்கொள்ளத் தக்க தன்னம்பிக்கை வழங்கும் வகையில் இத்தேசிய அடைவு ஆய்வுக்குப் பிந்தைய இடையீடுகள் மாணாக்கர்களின் திறன்களைக் கட்டமைக்கும்.

### 8.14.4 மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த வழிகாட்டுதல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 20.03.2017 அன்று வல்லுநர்களின் உதவியுடன் மாநில அளவிலான வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் சார்ந்த பயிற்சியினை நடத்தியது. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து நான்கு நபர்கள் கொண்ட குழு பங்கேற்றது. மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் ஆகியோர் 2017 ஏப்ரல் 6 மற்றும் 7 ஆகிய நாள்களில் இப்பயிற்சியினை வழங்கினர்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த வழிகாட்டுதல் கையேடுகளை 3,00,000 பிரதிகள் அச்சிட்டு உதவியது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் செயல்பட்டு, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான தனித்தனி உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக் கையேடுகளையும், பதிவு மற்றும் கருத்தூட்டல் படிவங்களையும் வழங்கியது. பயிற்சியில் கலந்துகொண்ட அனைத்து மாணாக்கர்ளுக்கும் ஆலோசனைக் குறிப்புகள் அடங்கிய கையேடுகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியின் மூலம் மாநிலம் முழுவதும் 15 இலட்சம் மாணாக்கர்கள் பயன்பெற்றனர்.

### 8.14.5 விழுமியம் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மற்றும் கற்பித்தல்

மாநிலத்திலுள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவிபெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10 ஆம் வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விழுமியம் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்கியது. இப்பயிற்சி மாணாக்கர்களிடம் ஒழுக்கத்தை உறுதிசெய்வதனால், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் கல்வியின் தரம் மேம்படும். ஏறத்தாழ 100 விழுமியங்கள் கண்டறியப்பட்டு அவை பாடக் கருத்துகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இப்ப

யிற்சியினால் 10000 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 6700 உயர்நிலை மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 40000 ஆசிரியர்கள் பயனடைந்தனர். இதனால் 45 இலட்சம் மாணாக்கர்கள் பயனடைந்தனர்.

**8.14.6 பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வுச் செயல்பாடுகள்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வருவாய்த்துறையின் பேரிடர் மேலாண்மை மற்றும் மறுவாழ்வுத் துறையுடன் இணைந்து பாடத்திட்டம், பாடநூல்களைத் தயாரித்தல் மற்றும் பயிற்சிச் செயல்பாடுகளை நடத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டது. பேரிடர் மேலாண்மை வல்லுநர்களான பேரிடர் மேலாண்மை இயக்குநர், ஜே.ஆர்.டி. டாடா பேரிடர் கல்வி நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் குழந்தைகளைக் காப்பாற்றுங்கள் என்ற அரசுசாரா நிறுவனம் ஆகியவர்களைக் கொண்டு 7 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான சமூக அறிவியல் பாடநூல்களில் இணைக்கப்பட்டுள்ள பேரிடர் மேலாண்மைப் பாடப்பொருள்களை மறு ஆய்வு செய்தது. இவ்வல்லுநர்கள் அளித்த ஆலோசனைகள் இறுதி செய்யப்பட்டு, பாடநூல்களை மாற்றியமைக்கும்போது அவை நடைமுறைப்படுத்தப்படும். பேரிடர் மேலாண்மைப் பாடப்பகுதிகளை 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தமிழ், ஆங்கிலம் மற்றும் புவியியல் பாடநூல்களிலும், தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி வளநூல்களிலும் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


### 8.14.7 தேசிய திறந்த வெளிப்பள்ளி தொடக்கக் கல்வி பட்டயப் படிப்புப் பாடப்பொருளை வலையொளிப் பதிவேற்றம்

தேசிய திறந்த வெளிப் பள்ளிப் படிப்பிற்கான இணையவழித் தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பின் பாடப்பொருளைத் தமிழில் மொழிபெயர்க்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உதவி செய்துள்ளது. 25,000 தனியார் பள்ளி ஆசிரியர்கள் இதனைப் பயின்றுவருகின்றனர். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், சேலம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பின் பாடப்பொருளை தேவையான விளக்கங்களுடன் ஒலிக் கோப்புகளாக மாற்றி அவற்றை வலையொளிப் பதிவேற்றம் செய்துள்ளது. இந்த வலையொளிப் பதிவுகளை எந்த நேரத்திலும் பதிவிறக்கம் செய்து கேட்கும் வாய்ப்புள்ளதால், தனியார் பள்ளி ஆசிரியர்கள் இதற்கு மிகுந்த வரவேற்பினை அளிக்கிறார்கள். இம்மாற்றத்திற்கான முயற்சியை திறந்தவெளி பள்ளிகளுக்கான தேசிய நிறுவனம் பாராட்டியுள்ளது.

### 8.14.8 இணையவழி வானொலிச் சேவை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, சேலம் மாவட்டத்தில் உள்ள உத்தமசோழபுரம் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிக் கல்விக்கான இணையவழிப்

பண்பலைக் கல்வி வானொலிச் சேவையினைத் தொடங்கியுள்ளது. மேலும் இது மாணாக்கர்கள் இசை, நாடகம், உரையாடல் போன்ற நிகழ்த்துக் கலைகளில் தங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளும் களமாகவும் பயன்படுகிறது. இந்தப் புதிய முயற்சி மாவட்டத்திலுள்ள 21 ஒன்றியங்களைச் சென்றடைந்து 4000 ஆசிரியர்கள் மற்றும் 60000 க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் இந்த ஒலிபரப்பால் பயன்பெறுகின்றனர்.

இணையவழி வானொலிச் சேவை

**8.14.9 மாபெரும் திறந்தநிலை இணையவழிக் கல்வி**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பரிந்துரையின்படி, சேலம் மாவட்டம், உத்தமசோழபுரம் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் தொடர்பணித்திறன் மேம்பாட்டுக்காக மூன்று இணையவழிக் (online) கல்வியை வழங்கத் திட்டமிட்டுள்ளது. பணியிலிருக்கும் ஆசிரியர்களின் தேவைக்கிணங்க இக்கல்வி வழங்கப்படும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனம் இதற்காக "செயல் ஆராய்ச்சிக்கான சான்றிதழ்க் கல்வி" என்ற சான்றிதழை வழங்க உள்ளது.

### 8.14.10 பயிற்சி மேலாண்மைத் தகவல் முறைமை – முன்னோட்ட ஆய்வு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆலோசனையின்படி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் பயிற்சி மேலாண்மைத் தகவல் முறைமை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப் பயிற்சி மேலாண்மை தகவல் அமைப்பு கீழ்க்கண்ட அம்சங்களைக் கொண்டுள்ளது:

- தரவுகளைச் சேகரித்தல் மற்றும் ஆசிரியர்களைப் பற்றிய மேம்படுத்தப்பட்ட தகவல்களைப் பராமரித்தல்
- பயிற்சி நாட்காட்டியை ஒருங்கிணைத்தல்
- ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும் தக்க நேரத்தில் தகவல்களைத் தெரிவித்தல்
- ஆசிரியர்களின் வருகையையும், பற்றுச் சீட்டுகளையும் இணையவழியில் உரிய நேரத்தில் விநியோகித்தல்
- பயிற்சியுடன் தொடர்புடைய ஆவணங்களையும், வளங்களையும் பராமரிப்பதற்கான ஒரு காப்பகத்தைப் பராமரித்தல்

எதிர்காலத்தில், இம்முறைமை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும்.

### 8.14.11 தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

தனியார் பள்ளி ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அவ்வப்போது மேம்படுத்துவதற்கு ஏதுவாகத் தமிழக அரசு, அரசாணை (நிலை) எண்.228, பள்ளிக் கல்வித் துறை, நாள் 06.11.2017-இன்படி, அனைத்து தனியார் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் செயல்திட்டத்தை உருவாக்க ஆணை பிறப்பித்துள்ளது. இப்பயிற்சியினால் மாநிலத்தில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணித்திறன் மேம்படும்.

### 8.14.12 மலேசிய தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்சி

மலேசிய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க மலேசியத் தமிழ் ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் செறிவான பயிற்சியை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தியது. எதிர்காலத்தில் தமிழ்மொழி பேசும் சமுதாயத்தின் பணித்திறன் தேவைகளுக்கு ஏற்ப இது போன்ற பயிற்சித் திட்டங்கள் இணையவழி மற்றும் இணையவழியல்லாத முறையில் அளிக்கப்படும்.

### 8.14.13 ஆசிரியர்களுக்குத் தகவல் தொலைத் தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி

தமிழ்நாட்டிலுள்ள 500 அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து 2018 ஜூன், 30 க்குள் எண்ணியல் கல்விப் பயிற்சி வழங்க மைக்ரோசாஃப்ட் நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இப்பயிற்சிக்கான தகவல் தொலைத் தொடர்புத் தொழில்நுட்பப் பாடத்திட்டம் மற்றும் பாடப்பொருள் ஆகியவற்றைப் பயிற்சியாளர்களுக்குக் கட்டணமின்றி மைக்ரோசாஃப்ட் நிறுவனம் வழங்கும். மைக்ரோசஃப்ட் பிரிமியம் மேகக் கணிமைத் தொழில் நுட்பம், மைக்ரோசஃப்ட் ஆபிஸ் 365 மென்பொருள் ஆகியவற்றின் வாயிலாக இலக்குகளாகத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பள்ளிகளும் பயன் பெறும். தமிழகப் பள்ளிகளின் கற்பித்தல் பரப்பை இம்மேகக் கணிமைத் தொழில்நுட்பம் மாற்றியமைக்க உதவும்.

## 8.15 மனிதவள மேம்பாட்டுத் துறையின் தர மேம்பாட்டு முயற்சிகளில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பங்கேற்பு

### 8.15.1 எஸ். எஸ்.ஏ. சாகுன்

தொடக்கக் கல்விப் பிரிவில் காணப்படும் புதுமைகளையும் முன்னேற்றங்களையும் புலப்படுத்துவது அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் இணையதளமான எஸ்.எஸ்.ஏ. சாகுன் ஆகும். இத்தளத்தில் காணொலிக்

காட்சிகள், நிகழ்முறை ஆய்வுகள், சான்றுகள் மற்றும் உருக்காட்சிகள் வடிவில் ஆசிரியர்களின் பயிற்று முறைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. வகுப்பறைகளில் புதுமை படைப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் காணொலிக் காட்சிப் பதிவுகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் பதிவேற்றம் செய்துள்ளது. 01.12.2017, அன்றைய நிலவரப்படி, 1994 கல்விக் காணொலிக் காட்சிகள் சாகுனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சாகுனில் உள்ள எண்ணியல் வளங்களை இதுவரை 21 இலட்சம் பேர் பார்வையிட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கிய எண்ணியல் பாடங்களின் பரந்த பயன்பாட்டுக்குச் சான்று பகர்ந்துள்ளனர். முக்கிய கல்விக் குறியீடுகளில் மாநில அளவிலான செயல்திறனை அளவிடுவதற்கான இணையவழிக் கண்காணிப்புக் கட்டகம் இவ்விணையதளத்தில் இடம்பெற்றுள்ளது.

### 8.15.2 மாநில மற்றும் மாவட்ட அளவில் சங்கங்கள் அமைத்தல்

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் அறிவுரையின்படி, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975இன் கீழ் மாநில அளவிலான சங்கம் மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. மாநில அளவிலான சங்கத்தின் பங்கு மற்றும் பணிகளானது, முதன்மையாக ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டிற்க்கான வளங்களை பெற்றுத்தருதல் மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்களை மேற்பார்வை செய்யும்

தலைமைச் சங்கமாக பணியாற்றுதல் ஆகியன ஆகும். மாவட்ட அளவிலான சங்கங்களின் பங்கு மற்றும் பணிகளாக, ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாடு குறித்த பயிற்சிக்கான வளங்களை பெறுதல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் கற்பித்தல் முறைகள், உடல்நலக் கல்வி, சாலைப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை போன்றவை குறித்த கல்விசார் பாடப்பொருட்களை உருவாக்குதல் ஆகும். பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு மற்றும் தனியார் பொதுத்துறை பங்களிப்பு முறையின் கீழ் நிதியைப் பெற்று தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதும் இச்சங்கங்களின் பணிகள் ஆகும்.

### 8.15.3 ஆசிரியர்களுக்கான தேசியத் தளம்

ஆசிரியர்களின் சுயகற்றலுக்கும் வகுப்பறைப் பயன்பாட்டிற்கும் பயன்படும் இணையவழிக் கல்வியையும், வளங்களையும் மாநிலங்கள் வழங்குவதற்கு ஏதுவாக ஆசிரியர்களுக்கான தேசியத் தளம் எனும் இணையதளத்தை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை தொடங்கியுள்ளது. பணியில் இருக்கும் ஆசிரியர்களுடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள் இணைந்து உருவாக்கும் அசைவூட்டப் படங்கள், மொழியாக்கம் செய்யப்பட்ட அறிவியல் காணொலிக் காட்சிகள் மற்றும் பாடம் சார்ந்த காணொலிக் காட்சிகள் போன்ற எண்ணியல் கல்வி வளங்களை மாநிலக் கல்வியியல்

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இத்தளத்தில் தொடர்ந்து பதிவேற்றம் செய்துவருகிறது. ஏற்கனவே 2000 க்கும் மேற்பட்ட கல்விக் காணொலிக் காட்சிகளை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. புதிய பாடநூல்கள் பள்ளிகளைச் சென்றடையும்போது அவை சார்ந்த எண்ணியல் வளங்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியருக்கான தேசியத் தளத்தில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் பதிவேற்றம் செய்யப்படும். தொடர் கற்றலை ஆசிரியர்களிடையே உறுதி செய்ய இணையவழிக் கல்வி வாய்ப்புகளுடன் வகுப்பறைப் பயன்பாட்டிலுள்ள வளங்களைப் பெற மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆசிரியர்களுக்கு உதவும்.

மனித வள மேம்பாட்டுத் துறையால் உருவாக்கப் பட்டுள்ள தேசிய எண்ணியல் மேடையான திக்சா, ஆசிரியர்களுக்கான கற்பித்தல், கற்றல் மற்றும் பணித்திறன் மேம்பாட்டிற்கான வளங்களை வழங்குகிறது. மாநில அரசும் மற்றும் பிற நிறுவனங்களும் தங்களின் ஆசிரியர் சார்ந்த முனைப்புகளில் தடங்கலின்றி ஒருங்கிணைக்கத்தக்க திறந்த, கட்டகமாக்கப்பட்ட மற்றும் பரவலாக்கத் தக்க தொழில்நுட்பத்தினை திக்சா கொண்டுள்ளது. சுய கற்றலுக்கும் வகுப்பறை கற்பித்தலுக்கும் இவ்விணைய தளத்தினைப் பயன்படுத்துவதைப் பரவலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 8.16 நிதி ஒதுக்கீடு

மாறிவரும் புதிய கற்றல் கற்பித்தல் முறைகளையும், புதிய பாடப்புத்தகங்களையும் 21 ஆம் நூற்றாண்டுத் திறன்களையும் ஆசிரியர்கள் பயன்படுத்தும் வகையில் அவர்களைத் தயார்செய்யும் பணியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பணிகளை மேற்கொண்டுவருகிறது. ஆசிரியர்களின் பணித்திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள், அவர்கள் எண்ணியல் கற்றல் தளங்களை முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதோடு, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் மனவலிமையைப் பெற மாணவர்களுக்கு வழிகாட்டுவதையும் உறுதி செய்யும். 2018-19 ஆம் நிதியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு **ரூ.83.83 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 9.1 முன்னுரை

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர், சட்டக் கல்வி கல்லூரி இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் சில பணியிடங்களுக்கும் பணிநாடுநர்களை தாமதமின்றி தெரிவுசெய்து அளிக்கும்பொருட்டு நிறுவப்பட்டது. இதற்கு முன்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேற்கண்ட பணியிடங்களுக்கு பணிநாடுநர்களை தெரிவு செய்யும் பணியினை மேற்கொண்டது. இதுவரை 1,59,451 பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை (TNTET) நடத்தும் மாநில இணைப்பு முகமையாகவும் (Nodal Agency) ஆசிரியர் தேர்வு வாரியமானது செயல்பட்டு வருகிறது. பல்வேறு இனங்களுக்கென பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை மற்றும் வழிமுறைகள் பற்றிய விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலக இணையதள முகவரியில் http://trb.tn.nic.in போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கக் கூடிய தேர்வர்களின் பயன்பாட்டிற்காக பதிவேற்றம் செய்யப்படுகிறது.

## 9.2 நோக்கங்கள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மை நோக்கம் பணிநாடுநர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளை மேம்படுத்துவதும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர் பணிநாடுநர்களின் பணியிடங்களின் தகுதிக்கேற்ப வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டறிவதும் ஆகும். மேலும் நேர்மையான தெரிவு முறையை உறுதி செய்ய ஆசிரியர் தேர்வு வாரியம் கீழ்க்கண்ட நடைமுறைத் தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்கிறது:

- அனைத்துப் பணித்தேர்வு நடைமுறைகளையும் மின்மியமாக்குதல்
- அனைத்திற்கும் மின் ஆளுமை வளங்களைப் பயன்படுத்துதல்
- ஒளியியல் குறியீடு வாசிப்பான் (Optical Mark Reader – OMR) வழியாக தேர்வர்களின் விடைத்தாட்களை மதிப்பீடு செய்தல்

## 9.3 நியமனப் பணிகளை குறைகள் இல்லாத நடைமுறைகளாக மாற்றும் பணிகள்

தேர்வு நடைமுறைகளில் முறைகேடான செயல்களைத் தடுப்பதற்கு கடுமையான வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பான முறையில் தேர்வுகள் நடத்திட நிலையான செயல் வழிமுறைகளை மாற்றி வகுத்தல் இன்றியமையாததாகும். பிரச்சனைக்குரிய சில முக்கியமான பகுதிகள் வரையறுக்கப்பட்டு தொடர் கண்காணிப்பு ஏற்பாடுகள்

மூலம் கட்டுப்படுத்தப்படும். இப்பகுதியில் வினாத்தாள் பாதுகாக்கப்படும் இடம், தேர்வு மையம், முக்கிய ஆவணங்கள் எடுத்துச்செல்லுதல், ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாட்கள் பாதுகாப்பு மற்றும் உள்ளீடு (Scanning) பணிகள் மேற்கொள்ள அதிகமான கவனம் செலுத்தப்படும். வருடந்தோறும் தெரிவுப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தெரிவுப்பணிக்கென தேவைப்படும் கருவிகள் உள்ளீடு செய்யும் இயந்திரம் (Scanning Machines) உட்பட கொள்முதல் செய்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது. வருங்காலங்களில் ஒளியியல் குறியீடு வாசிப்பான் (OMR) விடைத்தாட்கள் அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்படும். பட்டைக்குறியீடு (Bar Code) ஆசிரியர் தேர்வு வாரிய பணியாளரால் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன்விவரம் உரிய அலுவலரால் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். ஆசிரியர் தேர்வு வாரிய பணியாளர்கள் உள்பட பயோ-மெட்ரிக் முறையிலான நுழைவு முறையை பயன்படுத்தியே இப்பகுதியில் நுழைவதற்கு அனுமதி வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 9.4 தகவல் மையச் செயல்பாடு

ஆசிரியர் தேர்வு வாரியத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் முழுமையான வசதிகளுடன் தகவல் மையப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இத்தகவல் மையத்தில் பணிநாடுநர்கள் தங்களது கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை வழங்கிடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 9.5 நியமனங்கள்

2017-2018 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு 2357 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும், 195 பட்டதாரி ஆசிரியர்களும் மற்றும் 59 பட்டதாரி ஆசிரியர்களும் (IEDSS) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-II இல் தகுதி பெற்ற தேர்வர்களிலிருந்து, சமூக பாதுகாப்புத் துறைக்கு 1 பட்டதாரி ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 9.6 2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரையிலான சாதனைகள்

ஆசிரியர் தேர்வு வாரியமானது மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் பல்வேறு வகைகளின்கீழ் 45,832 ஆசிரியர்களை பின்வருமாறு தெரிவுசெய்துள்ளது.

- பள்ளிக் கல்வித்துறை – 43,044
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாநகராட்சி பள்ளிகள் மற்றும் சமூக பாதுகாப்புத் துறை – 1,260
- உயர் கல்வித்துறை – 1,528

## 9.7 நேரடி நியமனத்திற்கான ஆண்டுத் திட்டம்

ஆசிரியர் தேர்வு வாரியம் பல்வேறு வகையான போட்டி எழுத்துத் தேர்வுகளை நடத்துகிறது. ஆண்டுத் திட்டத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட போட்டி எழுத்துத் தேர்விற்கு

விண்ணப்பிக்கக் கூடிய தேர்வர்கள் தங்களை முன்கூட்டியே முழுமையாகத் தயார் செய்துகொண்டு சிறப்பாக தேர்வினை எதிர்கொள்ள ஏதுவாக முறையாக வெளியிடப்படுகிறது.

## 9.8 நிதி ஒதுக்கீடு

ஆசிரியர்களை தெரிவு செய்யும் அரசின் முகவாண்மை நிறுவனமாக இயங்கும் ஆசிரியர் தேர்வு வாரியம் பல்வேறு அரசு கல்வி நிறுவனங்களுக்குரிய பணியிடங்களுக்கான பணிநாடுநர்களை ஒளிவுமறைவு இன்றி சீரிய முறையில் தெரிவுசெய்து வருகிறது. 2018-19 ஆம் நிதியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு 4.06 **கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 10.1 முன்னுரை

பிற மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்திடவும் மற்றும் அவற்றை வெளியிடும் நோக்கத்துடன் "தமிழ் வெளியீட்டுக்கழகம்" 1961 ஆம் வருடம் அமைக்கப்பட்டது. இவ்வமைப்பை உள்ளடக்கிய "தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்" 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பின்னர் 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிறதுறை சார்ந்த பாடநூல்களை அச்சிடல், வெளியிடுதல், விற்பனை மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை இக்கழகத்தின் குறிக்கோள்களாக இருந்தன. 06.09.2013 முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா கல்வி உபகரணங்களை, இக்கழகத்தின் மூலமாகக் கொள்முதல் செய்து விநியோகம் செய்திடும் பணிகளையும் மேற்கொள்ளும் பொருட்டு, "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 10.2 நோக்கங்கள்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்பட்ட பாடநூல்களை அச்சிட்டு வழங்குதல், விலையில்லா கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்து வழங்குதல், அரிய மற்றும் பழமையான தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல்,

மற்றும் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குவதில் ஈடுபடுதல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. மேலும் பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம் மற்றும் கால்நடை அறிவியல் போன்ற உயர்கல்வி மாணாக்கர்களுக்கு உதவிடும் வகையிலான நூல்களைத் தமிழில் அச்சிட்டு வெளியிடல், அனைத்து வெளியீடுகளையும் மின்னணு புத்தகப் பதிப்பு (e-book) வடிவில் வெளியிடல், 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களுக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குப் பயன்படும் வகையில் சிறப்பு வழிகாட்டி நூல்களை அச்சிட்டு வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 10.3 உட் கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், டி.பி.ஐ வளாகத்தில் தனது சொந்தக் கட்டிடமாகிய 10 மாடிகள் கொண்ட, ஈ.வெ.கி சம்பத் மாளிகையில் இயங்கி வருகிறது. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு விலையில்லாப் பாடநூல்களை விநியோகம் செய்வது மட்டுமன்றி மாநிலம் முழுவதும் பாடநூல்களை (விற்பனைப் பிரதி) விற்று வருகிறது. விநியோகம் செய்யும் பணி நடைபெறுவதற்கு ஏதுவாக இக்கழகம் சொந்தமாக 6 வட்டாரக் கிடங்குகளையும், வாடகைக்கு 16 வட்டாரக் கிடங்குகளையும் அமைத்துள்ளது.

### 10.4 அச்சுப்பணி

தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத் தன்மை சட்டம், 1998 மற்றும் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி

வெளிப்படைத் தன்மை விதிகள், 2000 ஆகியவற்றைப் பின்பற்றி 2016-18 ஆம் ஆண்டுகளுக்கு 96 அச்சகத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, விலை விகித ஒப்பந்தம் அடிப்படையில் பாடநூல்கள் அச்சிட்டு வழங்க இரண்டாண்டுகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி அச்சகத்தினர் ஆண்டிற்கு தோராயமாக 10 கோடி எண்ணிக்கையிலான பாடநூல்களை வருடாந்திர முறையிலும், முப்பருவ முறையிலும், செயல் வழிக் கற்றல் திறன் அட்டைகள் மற்றும் பிற துறை சார்ந்த பாடநூல்களையும் அச்சடிக்கும் பணிகளை மேற்கொள்கின்றனர்.

### 10.4.1 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு விலையில்லாப் பாடநூல்கள் விநியோகம்

விலையில்லாப் பாடநூல்களை அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு உரிய காலத்தில் வழங்கிடுவதை உறுதி செய்திடும் பொருட்டு அச்சகத்தார்களிடமிருந்து நேரடியாக 67 மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 32 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அவை நேரடியாகக் கொண்டு சேர்க்கப்படுகின்றன. 2017-18 ஆம் கல்வியாண்டில் ரூ.198.63 கோடி மதிப்புள்ள 5.25 கோடி எண்ணிக்கையிலான விலையில்லாப் பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளன. முதன் முதலாக 2017-18 ஆம் கல்வியாண்டில் விலையில்லாப் பாடநூல்கள் மற்றும் விலையில்லா கல்வி உபகரணங்கள் ஆகிய அனைத்தும்

பள்ளிகளுக்கே விநியோகம் செய்யும் பொருட்டு ஏற்படும் போக்குவரத்துச் செலவினங்களுக்காகக் கூடுதலாக ரூ.11.36 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 10.4.2 சுயநிதிப் பள்ளிகளுக்கு விற்பனைப் பாடநூல்கள் விநியோகம்

சுயநிதிப் பள்ளிகளுக்கு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இணையதளம் பணப் பரிவர்த்தனை வாயிலாக மொத்தமாகப் பாடநூல்களை விநியோகித்து வருகிறது. மேலும் இந்திய அஞ்சல்துறை (India Post) மூலம் பள்ளிகள் தங்களது இடத்திலேயே பாடநூல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் கூடுதல் வசதிகளை அளித்து வருகிறது. தலைமை அலுவலகத்தில் உள்ள ஒரு விற்பனை நிலையம் மூலமாகவும், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் உள்ள மற்றொரு விற்பனை நிலையம் மூலமாகவும் பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில் ரூ.171.46 கோடி மதிப்புள்ள 2.28 கோடி பாடநூல்கள் சுயநிதிப் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 10.4.3 பிற துறைகளுக்கு வழிகாட்டி நூல்கள் அச்சிட்டு விநியோகித்தல்

2017-18 ஆம் கல்வியாண்டிற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தேவைப் பட்டியலுக்கேற்ப வழிகாட்டி நூல்களை அச்சிட்டு கீழ்க்கண்ட துறைகளுக்கு வழங்கி வருகிறது.

| துறையின் பெயர் / இயக்ககம் | வழங்கப்பட்ட வழிகாட்டிகளின் மொத்த எண்ணிக்கை | மொத்த மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு) | 3.30 இலட்சம் | 77.92 இலட்சம் |
| பிற்படுத்தப்பட்டோர் நலம் (10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு) | 95,050 | 22.74 இலட்சம் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் (10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு) | 1.16 இலட்சம் | 27.84 இலட்சம் |
| சிறுபான்மையினர் நலம் | 889 | 23,074 |

இது தவிர 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.8.24 கோடி மதிப்புள்ள 1.25 கோடி புத்தகங்கள் இதர நிறுவனங்களுக்கும், துறைகளுக்கும் வழங்கியுள்ளது.

### 10.4.4 மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளுக்கு தமிழ்ப் பாடநூல்கள் விநியோகித்தல்.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் செயல்படும், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கொண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு மட்டுமன்றி தமிழ்நாட்டில் உள்ள பிற மாநில வாரியங்களின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் தமிழ்ப் பாடநூல்கள் ஒரே

தொகுதியாக (ஆண்டு பாடநூல்) அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. 2017-18 ஆம் கல்வியாண்டில் 760 பள்ளிகளுக்கு ரூ.5.75 கோடி மதிப்புள்ள 7.5 இலட்சம் பாடநூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 10.5 மின் நூல்கள்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிடும் பாடநூல்களை கழகத்தின் இணையத்தளத்தில் www.textbooksonline.tn.nic.in பார்வையிடலாம். எனவே, மாணாக்கர்கள் இந்த இணையத்தளத்தின் வாயிலாக பாடநூல்களை எளிதாகக் காணவும், அதனை இலவசமாக தரவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

## 10.6 விலையில்லா கல்வி உபகரணங்கள்

2014-15 ஆம் கல்வியாண்டு முதல் விலையில்லா கல்வி உபகரணங்களான புத்தகப்பை, காலணி, வண்ணம் தீட்டும் குச்சிகள், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, கம்பளிச் சட்டை மற்றும் புவியியல் வரைபடம் ஆகியவற்றை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்க கொள்முதல் செய்து வருகிறது. அன்றைய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, 2017-18 ஆம் கல்வியாண்டு முதல் மலைப் பிரதேசங்களில் உள்ள அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மேற்குறிப்பிட்ட விலையில்லா கல்வி

உபகரணங்களுடன் கூடுதலாக மழைக் கால ஆடை, உறை காலணி, காலுறை போன்ற விலையில்லா உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

## 10.7 அரிய பழமை வாய்ந்த உயர்கல்வி நூல்களை மின்மயமாக்குதல்

உயர்கல்விக்குப் பயன்படும், அரிதான மற்றும் பழமை வாய்ந்த புத்தகங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்நூல்களை தேடிக் கண்டறிந்து அச்சிட்டு அவற்றைக் கோருவோர் பயன்படுத்தும் வகையில் வெளிச் சந்தையில் கிடைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் அவற்றினை மின்மயமாக்கவும் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யவும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் வெளியிடப்பட்ட 1000 நூல்களில், 875 நூல்கள், 2017-18 ஆம் ஆண்டு தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் மின்மயமாக்கப்பட்டு, அவை www.tnschools.gov.in என்னும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தலா 100 பிரதிகள் POD (Print On Demand) முறையில் ஆவணப் பதிப்பாக வெளியிட முடிவு செய்யப்பட்டு, 595 நூல்களுக்கு அச்சுப்பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 341 நூல்கள் அச்சிடப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. ஜனவரி 2018 இல் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் இவற்றுள் 190 நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு, இத்தகைய அச்சிடப்பட்ட

நூல்களைப் பெற விரும்பும் பேராசிரியர்கள், உயர்கல்வி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தக ஆர்வலர்களிடமிருந்தும் தேவைப்பட்டியல் பெறப் பட்டுள்ளது.

## 10.8 பாடநூல்களைத் தமிழாக்கம் செய்தல்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மருத்துவம், சட்டம், பொறியியல், கலை, அறிவியல், ஓமியோபதி, சித்த மருத்துவம், மீன் வளம், உடற் கல்வியியல், கால்நடை அறிவியல் மற்றும் வேளாண்மை போன்ற உயர்கல்வி துறைகளின் ஆங்கிலவழிப் பாடநூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடமிருந்து விவசாயம் சார்ந்த 69 பாடநூல்களைத் தமிழாக்கம் செய்திட கோரிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பியர்சன் நிறுவனம் மூலம் போட்டித் தேர்வு நூல்களின் 6 தொகுதிகளைத் தமிழில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலக்கிய, அறிவுசார் நூல்களை மொழிபெயர்ப்பதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ள ஆக்ஸ்போர்டு மற்றும் பென்குவின் நிறுவனங்கள் அணுகப்பட்டுள்ளன. பென்குவின் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆறு ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க அந்த நிறுவனம் சம்மதித்துள்ள நிலையில் அதற்கான மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நவீன அறிவியல் தொழில்நுட்ப நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் தொடர்பான பணிகள் தமிழ்நாடு

பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**10.9 தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து மேற்கொள்ளும் இதர முக்கிய பணிகள்**

- மாணாக்கர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தேவையான கல்வி, வேலைவாய்ப்பு குறித்த தெளிவுரைகள், ஆலோசனைகள் அளிக்கவும் வழிகாட்டியாக இருக்கவும் தகவல்களை அளிக்கவும் **கட்டணமில்லாத் தொலைபேசி எண் வழியாக தொடர்பு கொள்ளும் வழிகாட்டி உதவி மையம் ரூ.1.98 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது**
- **தமிழகம் முழுவதும் அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களைத் தயார்படுத்த ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் போட்டி தேர்வுகளுக்கான 412 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.** இம்மையங்கள் கலந்தாய்வு வகுப்புகள் நடத்திட VSAT வசதியைப் பயன்படுத்துகிறது. எல்லா மாணாக்கர்களுக்கும் இணையத் தளத்திலிருந்தும் (Online) மென்பொருள் பாடப் பொருட்கள் பெற்றிடவும் குறுந்தகடு அளிக்கப் படுகின்றன. இதற்காக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து ரூ.19.78 கோடி செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது

- புதிய புத்தகங்களைப் பொது நூலகங்களுக்கு வழங்குவதற்காக அவற்றைக் கொள்முதல் செய்ய செலவினத் தொகை ரூ.5 கோடி, பொது நூலக இயக்குநருக்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது
- ஒன்றிய, கல்வி மாவட்ட, மற்றும் மாநில அளவில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்குக் **கலைத் திருவிழா நடத்துவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து ரூ.4 கோடி வழங்கப்பட்டுள்ளது**
- கல்விக் கடன் வழங்குவதற்கான முகாம்கள் நடத்துவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ரூ.3,20,000/- (ஒரு மாவட்டத்திற்கு ரூ.10,000/- வீதம்) இக்கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது
- வெளிநாடுகளில் வாழும் மாணாக்கர்களுக்குத் தேவையான தமிழ் வழிக்கான நூல்களை அனுப்புவதற்கு இக்கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **மேலும் 2017-18-ஆம் கல்வியாண்டில் பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் தமிழ் மொழியில் பயிலும் மாணாக்கர்களுக்குத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 7,624 தமிழ்ப் பாடநூல்களை வழங்கியுள்ளது**
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, தகவல் தொலைத் தொடர்பு

தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் 3,090 அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 2,939 அரசு மேல்நிலைப்பள்ளிகளில், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் உருவாக்குவதற்கான, கணினிகள் மற்றும் இதர சாதனங்களை ஒப்பந்தமுறை மூலம் கொள்முதல் செய்ய தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு ரூ.462.60 கோடி செலவினத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி 3,000 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணாக்கர்களுக்குப் பாடங்களை எளிமையாகக் கற்பதற்கு ஏதுவாக ஓர் அறிவுத்திறன் வகுப்பறை ஏற்படுத்துவதற்கும் மற்றும் இதர சாதனங்களுக்கும், ஒரு பள்ளிக்கு ரூ.2 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.60 கோடி மதிப்பில் ஒப்பந்தமுறை மூலம் கொள்முதல் செய்ய தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது
- மாணவியர்கள் பயிலும் 3,334 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு, நாப்கின் எரியூட்டி இயந்திரம் வழங்குவதற்கு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து ரூ.11.88 கோடி செலவில் கொள்முதல் செய்யும் பணி துவக்கப்பட்டுள்ளது

- கிராமப்புறங்களில் உள்ள 7,219 நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 3.75 இலட்சம் மாணாக்கர்கள் பல்வேறு தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளும் பொருட்டு பாடப்பொருள் உருவாக்குதல் மற்றும் மாணாக்கர்களின் வழிகாட்டுதலுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து ரூ.2.93 கோடி செலவினம் மேற்கொள்ளப்படவுள்ளது
- 123 பொது நூலகங்களுக்கு, 369 கணினிகளும், 123 ஸ்கேனர்களும் இக்கழக நிதியிலிருந்து ரூ1.84 கோடி செலவில் கொள்முதல் செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது
- கற்றல் மேலாண்மை அமைப்பினை உருவாக்கும் திட்டத்திற்காக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு ரூ.1.62 கோடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது
- பொது மக்களிடமிருந்து ஒரு இலட்சம் தமிழ்ப் புத்தகங்களை நன்கொடையாகப் பெற்று, யாழ்ப்பாண பொது நூலகம் மற்றும் மலேயா பல்கலைக்கழகத்திற்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் அனுப்பப்பட உள்ளது

## 10.10 முடிவுரை

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆரம்ப நாளிலிருந்து பாடநூல்களை அச்சிட்டு விநியோகிக்கும் பணியினைச் செய்து கொண்டிருந்தது. தற்போது இக்கழகம் விலையில்லா கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்தல், உயர்கல்விப் படிப்புகளுக்கான பாடநூல்களை வெளியிடுதல், அதிமுக்கியத்துவம் வாய்ந்த புத்தகங்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் மறுபதிப்பு புத்தகங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமானது தரமான கல்வி உபகரணங்களைக் குறித்த காலத்தில் பள்ளிகளில் வழங்குவதன் மூலம் பாராட்டத்தக்க வகையில் சிறப்பான சேவைகளைப் புரிந்து வருகிறது.

**கே.ஏ. செங்கோட்டையன்,**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்.